THE REGISTRAR
MADRAS.

ஸ்ரீராமஜயம்.

CRIMINAL REVENUE MANUYAL.

274
1.14

கிருமினல் ரிவினியூ மானுவல்

இ ஃ தி
கிராமாதிகாரிகளின் உபயோகத்திற்காக
கார்நேஷன் புக்டிபோ மாஜெஸ்டிக்
பிரசுரம் செய்யப்பட்டது.

சென்னப்பட்டணம்
கிச்சினர் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1913

அட்டவணை.

பக்கம்

மணியக்காரர் என்கிற பெரியதனக்காரர்களுடைய
அந்தஸ்தும் கடமைகளும் 1
ரோம கோர்ட்டுகளால் விசாரணை செய்யத்தக்க
வியாஜ்ஜியங்கள் 7
ன்படிகொண்டு வரப்படும் வியாஜ்ஜியங்கள்... ... 9
ஜ்ஜியங்களை ஒரு கோர்ட்டிலிருந்துமற்றொரு கோர்ட்டி
லிருந்து அனுப்புவதைப்பற்றி 11
திவாதிகளுக்கு சம்மன் சேர்ப்பிக்கும் விதம்... .. 12
மன் சேரவொட்டாமல் பிரதிவாதி தப்பித்துக்கொண்
டிருந்தால் அதை சேர்ப்பிக்கும் விதம் ... ..
பிரதிவாதி ஆஜராகாவிட்டால் நடவடிக்கை நடத்தும் விதம் 1
ஒரு தலையான (எக்ஸ்பார்டி டிக்கிறியை ரத்துசெய்யும் விதம் 16
இன்னகோர்ட்டார் டிக்கிறியை நிறைவேற்றலாமென்பது ... 23
ரோம பஞ்சாயத்து 31
பினல் புரோவிஜர் உத்திரவுகள் 40
மாஜிஸ்டிரேட்டின் கடமைகள் 45
க்காரர்... 52
ாலீஸ் நிபந்தனைகள் 55
ரியின் வரி வசூல் விஷயத்தைப்பற்றி பிடிகை ... 56
... ... 57
நாதவாயை வசூல் செய்யும் விதம் ... 61
... ... 68
... ... 68
லங்கமல் வேறுவிதமாய் நிலங்களை பைசல்
... ... 71
... ... 73
... ... 75
பாத்தி 77
டித்தொட்டிகள் 83

860
349.54



கிராம உத்தியோகஸ்தர்கள்.

(1) கிராமத்தலைவனுக்கு — மணியக்காரர், கிராம முனீசீபு, கிராம மாஜிஸ்டிரேட், பட்டேல் ரெட்டி, கிராம போலீஸ்தலைவன், என்று பல பெயர்கள் உண்டு.

(2) வெட்டியான்—தோட்டி—தண்டல் காரன்.

(3) நீர்க்கட்டி—பாச்சலுக்காக நீர் பகிர்வோன்.

(4) காவற்காரன்—அல்லது தலையாரி.

கிராம முனிஸீப்பு என்பதற்கு 1889ஆம் வருஷத்து 1-வது ஆக்டின் படி ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு கிராம முனிஸீப்பு கோர்ட்டின் ஜட்ஜி யென்று பொருள் கொடுக்கும்.

கிராம பெரியதனக்காரருடைய உத்தியோகத்திற்கும் கிராம முனிஸீப்பு உத்தியோகத்திற்கும் உள்பட்ட அதிகார வரம்புகள் ஒரே எல்லையைச்சேர்ந்தவைகளாக விருக்கிற விடங்களில் கிராம பெரியதனக்காரர்களே கிராமமுனிஸீப்புகளாகவும் இருக்கிறார்கள்.

274
1.14

மணியக்காரர் என்ற பெரியதனக்காரருடைய அந்தஸ்தும் கடமைகளும்.

---

1. கிராமத்தலைவனான மணியக்காரர் தன் கிராமத்தில் கவர்ன்மெண்டாருடைய பிரதிநிதியாயிருக்கின்றார்.

2. அவர் கிராம மாஜிஸ்டிரேட்டாக இருப்பதோடு கிராமப் போலீஸ்தலைவனாக இருக்கிறார்.

3. தன் கிராமத்தின் குடிகளால் கவர்ன்மெண்டாருக்கு கட்ட வேண்டிய வரிப்பணத்தை வசூல் செய்கிறவராயிருக்கிறார்.

4. சாகுபடி விஷயமாய் குடிகளுக்கு வேண்டிய சகலவிதமான உதவிகளையும் அடிக்கடி செய்கிறவராயிருக்கிறார்.

5. பாச்சலாதாரங்களையும் ஜலாதாரங்களையும் சரியாய் ஒழுங்கு படுத்தி வைத்துக்கொண்டு அதைத் தக்கபடி பகிர்வது அவருடையகடமை.

6. சுகாதாரமான விஷயங்களைக் கவனித்து தங்கள் கிராமத்தைச் சுத்தியாக வைக்கத் தக்க ஏற்பாடு செய்வது அவருடைய கடமை.

7. தங்கள் கிராமத்திலுள்ள கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமான ஸ்தாவரங்களைப் பாதுகாப்பது.

8. அப்போதைக்கப்போது தங்கள் கிராமத்திற்கு வரும் அரசர்களுக்கும் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் வழிப்பிரயாணிகளுக்கும் தங்களால் இயன்றமட்டும் சர்ப்பரா செய்யவேண்டியது.

ஷாப்புகளிலும் கடைகளிலும் உபயோகப்படுத்தும் எடுத்தலளவைகளும், முகத்தலளவைகளும் சரியானவைகளாக இருக்கின்றனவா என்று கவனித்து வரவேண்டியது.

இன்னும் அநேகவிதமான பொதுவான காரியங்களை குடிகளைக்கொண்டு நடத்திவைக்கவேண்டியது.

கிராமத்தலைவன் கிராமமுனீப் என்னும் ஹோதாவில் தன் கிராமத்தின் வில்லில் வியாஜியங்களை விசாரித்துப் பரிசீலனை செய்யவும் வேண்டும். அதாவது தங்கள் கிராமத்துக் குடிகள் ஒருவருக்கொருவர் கொடுக்கல் வாங்கல் விஷயமாயும் சொத்துகளின்மேல் அண்டான பாத்தியதை விஷயமாயும் விவாதப்படும் வழக்குகள் வில்லில் வியாஜியம் இந்த விஷயத்தில் கிராம முனிசிப்பு கிராம ஜட்ஜியாக எண்ணப்படுகிறார். இவருக்கு அடுத்த மேலதிகாரி டிஸ்திரிக்ட் முனிஷீப்புத்தான். இவர் செய்யும் அலுவலுக்கு வில்லில்வேலை என்று சொல்லப்படும். இந்த வில்லில் விஷயமான ஸகல காரியங்களையும் டிஸ்திரிக்ட் முனிஷீப்பினுடைய அதிகாரத்துக்குள்பட்டு அவர் உத்திரவின்பிரகாரம் நடந்துகொள்ளவேண்டியது.

கிராமக்கர்ணம் என்பவர்க்கு கிராமக் கணக்குகளை வைக்கும் வேலை இவர் கிராமப் பெரியதனக்காரத்துச் சேர்ந்தவர் இவர் ஒவ்வொரு விஷயத்திலும் கிராம பெரியதனக்காரருக்கு உதவி யோசனை சொல்லவேண்டியவராக இருக்கிறார். மணியக்காரர் கிராமமுனிசிப்பாகவும், மாஜிஸ்டிரேட்டாகவும் இருக்கிற அந்தஸ்தில் அவருக்கு இவர் கிளர்க் (எழுத்தக்காரியஸ்தன்) ஆக இருக்கிறார் எழுதிவைக்க வேண்டிய ரிப்போர்ட்டுகள், கணக்குகள், ஸ்டேட்மெண்டுகள், முதலான அவசியமானவைகளை இவரே தயார் செய்யவேண்டியது.

பெரிய பேரீஜுத் தொகையையுடைய கிராமங்களுக்கு உதவிக்கர்ணங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

மேற்சொன்ன கர்ணம் என்று சொல்லப்படுகிற கணக்கப்பிள்ளை அந்தந்த கிராமத்தில் பிரதிமாதத்திலும் சாகுபடியாரும் நிலங்களைப் பார்வையிட்டு சாகுபடி கணக்குத் தயார்செய்து அந்த மாதம் 25-ல் பிர்க்கா ரிவின்யூ இனிஸ் பேக்டர் அவர்களுக்கு அனுப்பிவிடவேண்டியது.

ஒவ்வொரு ரயத்துவாரியும் (குடித்தனக்காரனும்) கவர்மெண்டாருக்குக் கட்டவேண்டிய கிஸ்தியின் தொகையையும் பற்றிய கணக்குகளையும் தயார்செய்யவேண்டியது. இன்னும் கர்ணீகருடைய அலுவல்களை 'ஜமாபந்தி'யில் காண்க.

தோட்டி என்பவன் கிராமச்சேவகனாக இருக்கிறான். அவன் கிராமப் பெரியதனக்காரர் உத்திரவுகளின்படி நடந்து வரவேண்டி

யது. மேலும் நீர்க்கட்டி ஏற்படுத்தாத கிராமங்களிலே அந்த நீர்க் கட்டியின் வேலையை கிராமவெட்டியான் (தோட்டி) செய்யவேண்டி யது. இந்த ஊழியக்காரன் ஸங்கியை அந்தந்த கிராமத்தின் வரு மானத்திற்கேற்றபடி யிருக்கும்.

நீர்க்கட்டி என்பவன் கிராமபெரியதனக்காரர் உத்திரவுகளின் படி கிராம நிலங்களுக்கு நீர்ப்பாச்சும் வேலையைச்செய்கிறவன், இந்த நீர்ப்பாச்சும் தொழில் செய்யும் ஊழியக்காரனை அந்த கிரா மத்தின் நஞ்செய் நிலங்களின் விஸ்தீரணத்தை யனுசரித்து ஏற் படுத்துகிறார்கள். சிறிய கிராமங்களிலே நீர்க்கட்டியே ஏற்படுத்தி கிறதில்லை.

தலையாரி என்பவன் கிராமாதிகாரியின் உத்திரவுகளின்படி கிராம போலீஸ் வேலையைச் செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறான். அவ ன் தன் கிராமத்தைக் காவல் காப்பதுதான் அவனுடைய சரியான வேலை. தன் கிராமத்தில் வந்தான கிஸ்தித்தொகை கிராமத்திலி ருந்து தாலூக்கா கஜானாவுக்கு இர்சால் கொண்டுபோவதும் அதை க்காவல் காப்பதும் அவனுடைய வேலை. அடிக்கடி கிராமத்தைச் சுற்றிப் பார்த்துவரவேண்டியது. ஏதாவது குற்றங்கள் நடக்கக் கண்டால் அதைக் கிராமாதிகாரிக்குத் தெரிவிக்கவேண்டியது.

இதிற்க ஒவ்வொருதினமும் இராத்திரியில் தன் கிராமத்தைச் சுற்றி வந்து திருட்டு முதலான குற்றங்கள் நடக்கவொட்டாமல் தடுத்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும். குற்றவாளிகளைக் கண்டு பிடித்தவுடனே கிராம மாஜிஸ்டிரேட்டிடம் அவர்களை ஆஜர்படுத்த வேண்டியது. பிறகு அவருடைய ரிபோர்ட்டை பெற்றுக்கொண்டு அவர்களை போலீஸ் ஸ்டேஷனுக்காவது அல்லது ஸ்டேஷனரி ஸப் மாஜிஸ்டிரேட்டாபீஸுக்காவது அழைத்துக்கொண்டு போய்ச் சேர்க்கவேண்டியது. இது தவிர கிராம மாஜிஸ்டிரேட் பொது வாய் எந்த வேலை இட்டாலும் அந்தக் காரியங்களை அவர் உத்தர வின்படி செய்துவரவேண்டியது. சர்வகாரனுடைய ஸங்கியை அந்த கிராம ஜனங்களின் தொகையை அனுசரித்து ஒருவனையாவது அல்லது மேற்பட்டவர்களையாவது நியமிக்கப்படும்.

கிராமத்தைத் தாழ்ந்த ஊழியக்காரர்களை கிராம பெரியதனக் காராவது அல்லது கிராமக்கர்ணமாவது தங்கள் வீட்டுச்சொந்த வேலைக்காரர்களாக பாவித்து உபயோகிக்கக்கூடாது.

ஒவ்வொரு கிராம உத்தியோகஸ்தரும் தங்கள் சொந்த கிராமத்திலேயே குடியிருந்து வரவேண்டும். சர்க்கார் வேலையின் நிமித்தரில் ஊரைவிட்டப்புறம் போயிருக்கலாம். மற்றப்படி மேல்தாருடைய அனுமதியில்லாமல் அவர்கள் தங்களுடைய கிராமத்தை விட்டுப்போகக்கூடாது. இந்த விதியை மீறினால் அவர்கள் உத்தியோகத்தினின்றும் நீக்கப்படுவார்கள்.

கிராமப் பெரியதனக்காரர் கிராம முனிஸீப்பு என்னும் ஹோதாவில் தன் கிராமத்துக்குடிகள் ஒருவர்க்கொருவர் கொடுக்கல் வாங்கல் விஷயமாயுட் சொத்துகளின் மேலுண்டான பாத்தியத்தைக் குறித்துக் கொண்டுவரும் சிவில் வியாச்சியங்களை விசாரித்துப் பரிசீலனை செய்வதற்கு கிராமமுனிஸீப்புகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தை ஒவ்வொரு கிராம முனிஸீப்பும் சரியானபடி செலுத்திவந்தால் சிவில் கோர்ட்டுகளில் வியாச்சியங்களைத்தாக்கல் செய்து அதனாலுண்டாகும் அசௌகர்யமும் அதிகப்பணச்செலவும் கிராமத்தாருக்கு நேரிடாது. ஆகையினாலே கிராம முனிஸீப்புகள் கிராமத்தாருக்கு அதிக உபயோகமாகவிருப்பார்கள். ஆகையினாலே கிராம முனிஸீப்புகள் வியாச்சிய விசாரணைக்கு வேண்டிய சட்டதிட்டங்களின் நிபந்தனைகளையும் உத்தரவுகளையும் நன்றாய்த்தெரிந்துகொள்ளவேண்டியது. கட்சிக்காரர்கள் தாராளமாய்த் தங்கள் கோர்ட்டுக்குக் கேஸுகளைக் கொண்டுவரும் பொருட்டு தங்களிடம் தாக்கல் செய்யப்படுகிற கேஸுகளையெல்லாம் நன்றாய்ப் பரிசீலனை செய்து வரவேண்டியது.

கிராம முனிஸீப்புகளை டிஸ்திரிக்ட் கலெக்ட்டர் நியமிக்கவேண்டியது. அப்படி நியமித்த கிராம முனிசிப்புத்தன் கிராமத்திலே குடியிருந்து வரவேண்டியது. கிராமத்தில் வாசஞ் செய்யாத கிராம முனிஸீப்பு உத்தியோகத்திலிருந்து நீக்கப்படுவார். கிராம முனிஸீப்புக்கு கிராம ஜட்ஜி என்று அர்த்தமாகும். கிராமக் கோர்ட்டென்றால் கிராம நியாயசபையாகும் கிராம முனிஸீப்புப் பரிசீலனைசெய்யும் தாவாக்கள் எல்லாம் ஸிவில் தவா என்னப்படும்.

கிராம கோர்ட்டு நியாயசபை மெம்பர்கள் டிஸ்திரிக்ட்டு கெஜட்டில் விளம்பரஞ்செய்யப்படும். உத்தரவின்படி அந்த கோர்ட்டு மூன்று நியாயாதிபதிகள் சேர்ந்ததாக விருக்கலாம். அவர்களுக்குள் கிராம முனிஸீப்பு அக்கிராசனாதிபதியாவார்.

கிராமமுனிஸீப்புக்கு முன் கொண்டுவரப்பட்ட தாவாக்களை விசாரிப்பதற்காக யாதொரு நியாயசபையில் மெம்பர்களாக உட்கார்ந்து வேலைநடத்துவதற்கு யோக்கியதை உள்ளவர்களை கலெக்டராளவர் அந்த கிராமத்தார்களில் சிலரைத் தெரிந்தெடுத்து ஒரு ஜாப்தாவைத் தயார் செய்து அதை கிராம முனிஸீப்பினுடைய கோர்ட்டு வீட்டின் முன்பாக மாட்டித் தொக்கவைக்கவேண்டியது.

மேலே சென்ன கிராமத்திலுள்ள கிராமக்கோர்ட்டு முன்பாக தொடரப்பட்ட வியாச்சியத்திலே வாதி தன்னுடைய பிளேபிண்டி லாவது, பிரதிவாதி தன்னுடைய மறுமொழியிலாவது, மூன்று ஜட்ஜிகள் சேர்ந்த ஒரு நியாயசபையாரால் அந்த வியாச்சியம் விசாரணை செய்யப்படவேண்டியது என்று சுதந்தரித்துக் கேட்டுக்கொண்டால் முன்கி கலேக்ட்டரால் தயார்செய்து வைத்திருக்கும் ஜாப்தாவில் கட்சிக்காரர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரைத் தெரிந்தெடுக்கலாம். மற்ற இருவரையும் நியமிக்கவேண்டும்.

வியாச்சியங்களைக்குறித்த ரெஜிஸ்டர்களைவைத்துக் கொள்ளுவதும் கோர்ட்டின் நடவடிக்கைகளை எழுதிவைப்பதும் இவ்விரண்டும் கிராம முனிஸீப்பின் கடமைகளாகவிருக்கின்றன. இதைத் தாங்களே செய்துகொள்ளக்கூடாமற் போனால் அந்தக் கிராமக்கர்ணத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டு நடவடிக்கைகளை நடத்தவேண்டியது.

வியாச்சிய விஷயமாக பிறப்பிக்கப்பட்ட எல்லாஸம்மன்களும் நோட்டீஸுகளும், சட்டங்களும், கிராம முனிஸீப்பின் உத்திரவின்படி வழக்கமாய் சமாசாரம்கொண்டுபோகும் வேலையில் அமர்ந்திருக்கும் கிராம ஊழியக்காரனால் சேர்ப்பிக்கபட வேண்டியது. ஜப்தி செய்யப்பட்ட அசையும் பொருளைக்கைப்பற்றுவதும், விற்பதும், ஒப்பிப்பதும் இந்த ஊழியக்காரனுடைய கடமையாயிருக்கிறது.

வில்லியாச்சியங்களில் முதல் முதல் கிராம முனிஸிப்பினிடத்தில் பிராது செய்பவனுக்கு வாதி என்று பேர் வாதி என்னும் பதத்திற்கு வழக்கைத் தொடர்பவன் என்றர்த்தம் எந்த பேர்பேரில் வியாச்சியம் செய்யப்படுகிறதோ அவனுக்குப் பிரதிவாதி என்று பெயர் பிரதிவாதி என்னும் சொல்லுக்கு தொடர்ந்த வழக்கு மாறுகலாதம் செய்பவன் என்று அர்த்தம்.

கிராமக் கோர்ட்டுகளால் விசாரணை செய்யத்தக்க வியாஜ்ஜியங்களாவன.

(1) இருபது (20) ரூபாய்க்கு மேற்படாத கடன்களைப்பற்றியும்.

(2) கடனுகக் கொடுக்கப்பட்டயாதொரு தொகையில் செல்லானது போக பாக்கி 20-ரூபாய்க்குள்ளடங்கினதைப் பற்றியும்

(3) வியாபாரத்தில் கணக்குப்பார்த்து கணக்கின்படி பாக்கியாகுந்தொகை 20-ரூபாய்க்கு உள்ளடங்கியிருப்பவர்களைப் பற்றியும்.

(4) கூட்டு வியாபாரத்தில் உபயவாதிகளின் முன்னிலையில்கணக்குத்தீர்த்துக் கொண்டவகையில் 20-ரூபாய்க்குள்ளடங்கியிருப்பவைகளைப் பற்றியும்.

(5) கன்டிராக்டின்மேல் பாக்கியாயிருக்கிற பணம் 20-ரூபாய்க்குள்ளடங்கியிருப்பவைகளைப்பற்றியும்.

(6) ஜங்கம சொத்தின்மேலுண்டான பாத்தியதையைக்குறித்து அந்த சொத்தின் மதிப்பு 20-ரூபாய்க்கு மேற்படாமல் இருந்தால்அவைகளைப்பற்றியும்.

(7) ஜங்கமசொத்தை அடைமானம் வைத்து வாங்கிக்கொண்ட கடன் தொகையில் ரூபா. 20-க்கு மேற்படாத பாக்கிகளைப்பற்றியும்.

இந்த வியாச்சியங்களையெல்லாம் கிராம முனிஸீப்புகள் பரிசீலனை செய்ய அதிகார முடையவர்களாயிருக்கிறார்கள். அல்லாமலும் கிராம முனிஸீப்புக்கோர்ட்டு முன்பாக தாவாவைச்சேர்ந்த இருகட்சிக்காரர்களும் கிராமச் கோர்ட்டார்செய்யும் தீர்மானத்தை ஒப்புக்கொள்ளுகிறோமென்று சம்மதிப்பத்திரம் எழுதிக்கொடுத்தால் மேற்படி தொகை அல்லது பெறுமானம் 200-ரூபாய்க்கதிகமாகாத வியாச்சியங்களை பரிசீலனை செய்யலாம்.

அடியிற்கண்ட விஷயங்களைக்குறித்து யாதொருவியாச்சியமும் கிராம முனிஸீப்புகள் பிடிக்கக்கூடாது.

(1) கூட்டுப்பங்கு வியாபாரத்தில் நிலுவை இவ்வளவென்று டை கூட்டாளிகள் பகல்செய்து கையெழுத்துப்போடாத பாக்கிகளைக்குறித்து வியாச்சியங்கள்.

(2) உயில் என்று சொல்லப்படும் மரணசாஸனம் எழுதாமல் இறந்து போயிருக்கும் விஷயத்தில் பங்குக்காகவாவது அல்லது பங்கின் ஒருபாகத்திற்காவது, மரணசாஸனத் தின்படி ஏற்பாடான சொத்தக்காவது அல்லது சொத் தின் பாகத்திற்காவது கொண்டுவரப்படும் தாவா.

(3) நிலத்தின் குத்தகைத் தொகையானது பிரதிவாதியால்கை யெழுத்துப் பொடப்பட்டிருக்கிற கணடிராக்டின்பேரில் இல்லாமலிருக்கிற அப்படிப்பட்ட தாவாக்கள்.

(4) மூன்றிய வியாச்சியத்தில் வேண்டுமென்று விடப்பட்டோ அல்லது கைவிடப்பட்டோ இருக்கிறதாவாவின் பாகத் தைக்குறித்த வியாச்சியங்கள்.

(5) ஏதேனட்சிக்காரர்களுக்காவது அவர்களே ஆதாரமாக வைத் துக்கொண்டு தாவா செய்கிறவர்களுக்காவது வியாச்சிய மூலமுண்டாகி ஏற்கனவே விசாரித்துப் பரிசிலனை செய் யப்பட்டிருக்குமாகில் அப்படிப்பட்ட விஷயங்கள்.

(6) கவர்மெண்டாராலாகிலும் அவர்கள் பேரிலாகிலும் உத்தி யோகமுறைமையில் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களாலா கிலும் அவர்கள் பேரிலாகிலும் வியாச்சியம் கொண்டு வரப்படுகிற விஷயத்தில்.

(7) தகுமான வயது வராத மைனர்கள் அல்லது பைத்தியக்கா ரர்களாயாவது அவர்மேலாவது வியாச்சியம் கொண்டு வரும் விஷயத்தில்.

(8) ஸ்தாவர சொத்துக்களின் அடமானத்தின் மேல் அல்லது போக்கியத்தின் மேல் கொடுக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவாகவிருந்தாலும் சரி 20-ரூபாய்க்கு உள்ளடங்கி இருந்தாலல்லது அப்படிப்பட்ட கடனைப்பற்றிக்கொண்டு வரும் வியாச்சியங்கள்.

சரியான ஸ்டாம்பு ஒட்டப்படாத பாண்டுகளைக்குறித்தும் அல்லது சரியான ஸ்டாம்பில் எழுதப்படாத வெண்ணெய்ப்பத்திரங்களைக்குறித்தும் கொண்டுவரப்படும் வியாச்சியங்களை பரிசீலனை செய்ய கிராமமுனிவீப்புக்கு அதிகாரமில்லை. ஆனால் இப்படிப்பட்ட வியாச்சியங்கள் வருங்காலத்தில் பேனல்டி என்று சொல்லப்படுகிற அபராதக்கட்டணம் வசூலிலிருந்து வசூல் செய்யும் பொருட்டு இத்தகைய பாண்டுகளையும் டிவிஷன் ஆபீஸருக்கு தம்மால் எழுதப்பட்ட ரிபோர்ட்டு சகிதம் தாசில்தார் துவாராய் அனுப்பிவிடவேண்டும்.

கவனிப்பு.—மேலே சொன்ன தாவாக்களை கிராம் முனிவீப்புக்கோர்ட்டிலேயே தான் தாக்கல்செய்து பைசல்செய்து கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் ஒன்றுமில்லை. டிஸ்திரிகட்டு முனிவீப்பிடம் தாளமாய்த் தாக்கல்செய்து பைசல் செய்துகொள்ளலாம். குடிகளின் சௌகரியத்தைக்குறித்தும் அவர்களுக்கு டிஸ்திரிகட்டு முனிவீப்பு கோர்ட்டில் சுவல்ப கேசுகளுக்குக்கூட உண்டாகும் ஸ்டாம்பு வகையராச் செலவுகளை நிவர்த்திப்பதற்காகவும் குடிகள் வசிக்கும் கிராமத்திலேயே கிராமமுனிவீப்பும் வவிப்பதனாலே கேசின் உண்மையை வெகு சுலபமாய் அறிந்து வியாச்சியங்களைப் பரிசீலனை செய்யக்கூடும் என்ற விஷயத்தை அனுசரித்து கிராமக் கோர்ட்டுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆக்டின்படி கொண்டுவரப்படும் வியாச்சியங்களானவை.

ஆக்டின்படி கொண்டுவரப்படும் ஒவ்வொரு வியாச்சியமும் வியாச்சியம் தொடங்கப்படும்போது பிரதிவாதிகளெல்லாரும் எந்த கிராமத்து எல்லைக்குள் வாசஞ்செய்துகொண்டிருக்கிறார்களோ அல்லது வியாபாரத்தொழில் நடத்திக்கொண்டிருக்கிறார்களோ அல்லது லாபத்துக்காக ஏதாக வேலைசெய்துக்கொண்டிருக்கிறார்களோ அந்த கிராமமுனிவீப்பின் கோர்ட்டில் தாவாவை தாக்கல் செய்ய வேண்டும்.

அல்லாமலும் எந்த வியாச்சியம் அல்லது நடவடிக்கையில் ஒரு கிராம முனிவீப்பே கட்சிக்காராகவாவது அல்லது நேராய்ப்பயன்

குள்ளவராகவாவது இருக்கிற பட்சத்தில் அடுத்த பக்கத்திலுள்ள கிராமத்தின் முனிஸீப் கோர்ட்டில் அந்த வியாச்சியம் அல்லது நடவடிக்கையைக்கொண்டு போகவேண்டும்.

வெளிகிராமத்தலுள்ள பிரதிவாதி விஷயத்தில் பிரதிவாதி குடியிருக்கும் கிராமத்தக் கிராமமுனிஸீப்புக்கும் வாதிக்கும் விரோதமுண்டாயிருந்தாலாவது அல்லது பிரதிவாதிக்கு கிராம முனிஸீப்பு கினேகிதராயிருந்தாலாவது அல்லது பந்துவாக விருந்தாலாவது அல்லது எவ்விதத்திலோ ஏத்தப்பட்டவராகவாவது இருக்கிறபட்சத்தில் அப்படிப்பட்ட வியாஜியங்களை உள்ளூர் கிராம முனிஸீப்பு தாக்கல் செய்துகொண்டு பரிசிலனை செய்யலாம்.

குறிப்பு—மேற்சொன்ன காரணங்களையெல்லாம் பிளெயின்டில் கண்டெழுதிக்கொடுக்கவேண்டும்.

கிராமக் கோர்ட்டுகளில் கொண்டுவரப்படும் வியாச்சியங்களுக்காக எவ்விதக்கட்டணமாவது அல்லது பிரியாதக்கு ஒட்டப்படும் ஸ்டாம்பு செலவாவது கிடையவேகிடையாது. ஸ்டாம்பு ஒட்டாமலே பிளெயின்டு எழுதி தாவாவைத் தாகல் செய்யலாம்.

கால நிர்ணய விஷயத்தைக்குறித்துக் கிராம முனிஸீப்புகள் தெரிந்துக் கொள்ளவேண்டியது என்னவென்றால்:— வியாச்சியம் தொடருவதற்காவது அல்லது விண்ணப்பஞ்செய்துக்கொள்வதற்காவது சுதந்தரம் முதலில் ஏற்பட்டகாலம் முதற்கொண்டு மூன்று வருஷமானபிறகு இந்த ஆக்டின்படி எந்த வியாச்சியமும் அல்லது விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளத்தக்க தாகாது. மூன்றுவருஷத்திற்குட்பட்டதெல்லாம் ஏற்றுக்கொள்ளப்படும். மேலேசொன்ன விலக்குக்குட்பட்டு காலநிர்ணயத்தைக்குறித்துச் சொல்லும் 1877வுத்திய இந்த தேசதது 15-வது ஆக்டின் நிபந்தனைகள் வியாசியங்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் பிரயோகப்படத்தக்கவைகள். ஆதலால் ஒவ்வொரு கிராம முனிஸீப்பும் வில்லியாச்சியங்களைப்பரிசிலனை செய்யும்பொருட்டு கால நிர்ணய ஆக்டின் நிபந்தனைகள் ஸம்பந்தப்படுகிறவரையிலே அந்த நிபந்தனைகளை ஒவ்வொருவரும் தெரிந்துக்கொண்டிருக்கவேண்டியது அத்தியாவசியகமாயிருக்கின்றது.

———

வியாச்சியங்களை ஒரு கிராமக் கோர்ட்டிலிருந்து வேறொரு கிராமக்கோர்ட்டுக்கு அனுப்புவதைப்பற்றி.

டிஸ்திரிகட்டு முனிஸீப்பு அவர்கள் கட்சிக்காரர்களில் யாராகிலும் வியாச்சியத்தை வேறொரு கோர்ட்டுக்கு மாற்றிவிடும்படி விண்ணப்பஞ்செய்துகொண்டால் அந்த கிராமக்கோர்ட்டிலிருந்து எந்த வியாச்சியத்தையாகிலும் தம்முடைய கோர்ட்டுக்கு வரவழைத்துக் கொண்டு அது தம்முடைய கோர்ட்டிலேயே தொடரப்பட்டிருந்தாற்போல அதைத்தாமே பரிசீலனை செய்யலாம் அல்லது தம்முடைய அதிகாரப்பிரதேச எல்லைக்குள்ளிருக்கும் வேறேயெந்தக் கிராமக்கோர்ட்டிற்காவது பரிசீலனைக்காக அதை அனுப்பி விடலாம்.

ஆனால் எந்தக் கிராமக்கோர்ட்டிலிருந்து வியாச்சியத்தை வரழைத்துக்கொண்டு அதை டிஸ்திரிகட்டு முனிஸீப்பே பரிசீலனை செய்யும்படியாக விண்ணப்பஞ்செய்து கொள்ளுகிற எந்த கட்சிக்காரனும் தன வியாச்சியத்தை வேறொரு கோர்ட்டிற்கு மாற்ற உத்திரவு செய்யப்படுவதற்கு முன்னமே 1870ஷ்த்து கோர்ட்டுக் கட்டண ஆக்டின்படி அதற்காகச் செலுத்தப்படவேண்டிய கட்டணத்தாகையைச் செலுத்திவிடவேண்டியது.

வியாச்சியத்தைப் பெற்றுக்கொள்வது.

கிராம முனிசீப்புக் கோர்ட்டில் தாக்கல் செய்வதற்காகக் கொண்டுவரப்படும் பிரதி வியாச்சியத்தையும் பிளெயின்டு மூலமாய் தொடரவேண்டும் பிரதி வாதிகள் எவ்வளவு நபர்கள் இருக்கிறார்களோ அத்தனை பிளெயின்டுப் பிரதிகளையும் கூடக்கொடுக்க வேண்டியது, சம்மன் காபி (பிரதி) யோடுகூட பிளெயின்டுப் பிரதி ஒன்றையும் சேர்ப்பிக்கவேண்டியது அல்லது ஒட்டிவிடவேண்டியது. பிளெண்டுகளுக்கு முத்திரை ஒட்ட வேண்டியதில்லை. சம்மன் சார்வு பண்ணும் விதத்தைப் பின்னால் சொல்லப் பட்டிருக்கிறது.

பிளெயிண்டு எழுதும் விதம்.

பிளெயிண்டை அந்தக் கிராமத்தில் வழங்குகிற பாஷையிலே எழுதவேண்டியது. அதில் வாதியாவது அவனில்லாத பட்சத்தில் அவனுல் கிரமமாக அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஏஜெண்டாவது

கையொழுத்துப் போடவேண்டியது. அதில் காண்பிக்க வேண்டிய விவரங்களாவன:—

(1) வாதி பிரதிவாதி இவர்களுடைய பெயர், தொழில், வாசஸ்தலம் முதலிய விவரங்களும்.

(2) வியாச்சிய மூலத்திற்கு நருக்கமான ஸ்டேட் மெண்டும், வியாச்சியமூலம் பிறந்த காலமும்

(3) கேட்டுக்கொள்ளுகிற பரிகாரமும், வியாச்சியம் செய்யப் படுகிற தொகை அல்லது பெறுமானம்.

கிராம முனிசிப்பினிடம் பிளெயிண்டுகளைக் கிரமமாய்க் கொடுக்கப்பட்டபொழுது அவைகளை அடியிற்கண்ட நமூனாப்படி வைக்கப்பட்டிருக்கும் ரெஜிஸ்டரில் அவர்கள் தாக்கல் செய்துகொள்ள வேண்டும்:

நேராத ஆஜராவது அல்லது ஏஜெண்டை ஆஜர் படுத்துவது:—

எந்த கிராம கோர்ட்டுக்கு முன் நடந்துகொண்டு இருக்கிற வியாச்சியத்தைச் சேர்ந்த எந்த கட்சிக்காரனுவது தனக்கு நேராக ஆஜராக சரிப்படாவிட்டால் தனக்காக ஆஜராகித் தன்பக்கத்தில் வாதிக்கும்படி யாதாமொரு நபரை வக்காலத்து காமா எழுதிக்கொடுத்து ஏற்படுத்தலாம். ஆனல் நியாயம் நடப்பதற்கு கட்சிக்காரன் நேரில் ஆஜராவது அவசியமென்று கிராம முனிசிப்பாளர் அபிப்பிராயப படடால் அந்த வியாச்சியத்தை கட்சிக்காரர்களில் யாரையாவது நேரில் வந்து ஆஜராகும்படி உத்தரவு செய்ய கிராம முனிசிப்புக்கு அதிகாரம் உண்டு. அப்படி உத்தரவு செய்யப்பட்ட கட்சிக்காரன் நேரில் வந்து ஆஜராகாமற்போனல் கட்சிக்காரன் நேராய்த்தானுவது அல்லது தனக்காக ஏஜென்டாவது ஆஜராகாத பட்சத்தில் எப்படியோ அதே பலப்பிராப்திகளுக்கு அவன் உள்ளாக வேண்டியது.

பிரதிவாதிகளுக்குச் சம்மன் சேர்ப்பிக்கும் விதம்.

பிளெயிண்டு கிரமாய்க் கொடுக்கப்பட்ட உடனே கிராம முனிசிப்புவரவு பெற்றுக்கொள்ள வேண்டியது அதை ரிஜஸ்டர் செய்துக் கொண்ட பின்பு அதற்கு விசாரணை செய்யப்படும் தேதியைக்குறித்துக் குறைந்தது இரண்டு தினங்களுக்கு முன் சோட்டீஸ் கொடுத்து

மேற்படி குறித்த தினத்தில் பிரதிவாதி ஆஜராகி தாவாவுக்கு உத்தி ரவு சொல்லவேண்டுமென்றெழுதிய சம்மனை பிளெயிண்டின் ஈக்கல் சகிதமாய் பிரதிவாதிக்கு அனுப்பிவிட வேண்டியது. சமாசாரம் கொ ண்டுபோகும் வேலை சாதாரணமாய் யாருடைதோ அந்த ஊழியக் காரன் சம்மனை பிரதிவாதியினிடம் சேர்ப்பிக்கவேண்டியது அதற்கு ஒரு பிரதியை அவனிடத்தில் ஒப்பிவிக்க வேண்டியது.

சம்மன் சேர ஒட்டாமல் பிரதிவாதி தப்பித்துக்கொண் டிருந்தால் அதைச்சேர்ப்பிக்கும் விதம்.

சம்மன் சேராமலிருக்கும்படி பிரதிவாதி தப்பித்துக்கொண்டி ருக்கிறான் என்று கிராம முனிசிப்புக்குத் திருப்திகரமாய்த் தெரிய வரும் பட்சத்தில் மேற்படி கிராம முனிசிப்பானவர் பிரதிவாதியி னுடைய அலுவலாயஞ்செய்கிற எந்த ஆண்பிள்ளையினிடத்திலா வது சேர்ப்பித்து அதற்காக ஒரு பிரதியை ஒப்பிவைக்கும்படியர் கசெய்யலாம். அல்லது பிரதிவாதி சாதாரணமாயக் குடியிருக்கிற வீட்டில் பைறங்கமாய்த் தெரியும்படியான ஒரு இடத்திலே சம்மன் பிரதியை ஒட்டும்படியாவது உத்திரவு பண்ணலாம்.

பிரதிவாதிகள் ஊரில் ஆஜரில்லாவிட்டால் அவர்களுடைய வீட் டின் கதவுக்கதவுகளில் சம்மன் பிரதியை ஒட்டிவிடச்செய்யவேண் டியது.

கிராமக் கோர்ட்டின் அதிகாரப்பிரதேச எல்லைக்கு வெளியிலி ருக்கும் பிரதிவாதிக்கு சம்மன் சேர்ப்பிக்கவேண்டுமானால் அதற் காக ஏற்பட்டிருக்கும் கோர்ட்டுக் கட்டண முத்திரைத்தலைகள் ரூப மாய் அடியில்கண்ட நிர்ணயப்படி கட்டணங்களை லிதித்து, சம்மனை சேர்ப்பிக்கவேண்டுமென்ற ஒரு விண்ணப்பத்துடனே டிஸ்திரிகட்டு முனிசிப்பினிடம் அனுப்பவேண்டும்.

வித நிர்ணயம்.

ஒவ்வொரு சம்மனுக்காகவும் ஒரே ஒரு பிரதிவாதிக்கு ரூ. 0 8 0

அதேகாலத்தில் சேர்ப்பிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துக் கொண்டால் அதே கிராமத்தில் வசிக்கும் உடன் சேர்க்கையான ஒவ்வொரு பிரதிவாதிக்கும் ரூ. 0 4 0

பிரதிவாதி ஆஜராகாவிட்டால் நடவடிக்கை நடத்தும் விதம்.

விசாரணைக்காக ஏற்படுத்தப்பட்ட தினத்தில் பிரதிவாதி ஆஜராகாவிட்டாலும் சரி அல்லது அவனுக்காக ஏஜண்டு ஆஜராகாவிட்டாலும் சரி சம்மன் கிரமமாய்ச் சேர்ப்பிக்கப்பட்டதென்று ருஜுவாகிற பட்சத்தில் கிராமக் கோர்ட்டார் (எக்ஸ்பார்ட்டி) ஒரு தலையாய்விசாரணை செய்யத்தொடங்கலாம்.

சம்மன் கிரமமாய்ச் சேர்ப்பிக்கப்படவில்லை என்று ருஜுவானால் கிராம முனிசீப்பு பிரதிவாதிகளுக்குப் புதுசம்மன் பிறப்பிப்பதோடுகூட இரண்டாம்முறை விசாரணைத்தேதி ஒத்திப்போடவேண்டியது.

பிரதிவாதி தயம் கொடுக்க மனுசெய்து கொள்ளலாம்.

ஒவ்வொரு பிரதிவாதியும் வியாச்சியத்தைக் குறித்து இரண்டு நாளைய நோட்டீஸு கொடுக்கவேண்டுமென்று சுதந்தரித்துக் கேட்டுக் கொள்ளலாம். விசாரணைக்காக ஏற்படுத்தப்பட்ட தினத்திலே பிரதிவாதி ஆஜராகி உத்திரவு சொல்ல சாத்தியமாயிருக்கும்படி சரியான காலத்தில் சம்மன் சேர்ப்பிக்கப்படாதிருந்தால் கிராமக்கோர்ட்டார் வியாச்சிய விசாரணையை நிறுத்திவேறொரு நாளைக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. அதைக்குறித்து எழுத்து மூலமாய்ப் பிரதிவாதிக்கு நோட்டீஸு கொடுக்கப்பட வேண்டியது.

கிராம ஊழியக்காரர்களால் சேர்ப்பிக்கப்படாமல் மற்றெந்த விதமாய்ச் சேர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு சம்மனும் அது யார்பட்சத்தில் பிறப்பிக்கப் படுகிறதோ அந்த கட்சிக்காரனுடைய செலவிலேயே சேர்ப்பிக்கப்பட வேண்டியது. அப்படிச் சேர்ப்பிப்பதற்காக வசூல் செய்யவேண்டிய கட்டணத்தொகை இவ்வளவென்று ஆலேசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்படும். அந்த வீதப்பிரகாரம் அவர்களிடமிருந்து கிராமமுனிசீப்பானவர் வசூல் செய்யவேண்டியது.

பிரதிவாதி ஆஜராகும்படி குறிப்பிட்ட விசாரணைத் தேதியிலே:—

(1) இருகட்சிக்காரர்களும் ஆஜராகாவிட்டாலும்

(2) வாதி ஆஜராகாமல், பிரதிவாதி மாத்திரம் ஆஜராகி வியாச்சியத்தை அவன் ஒப்புக்கொள்ளாவிட்டாலும்

(3) வாதியினுடைய தவருதலினாலே பிரதிவாதிக்கு சம்மன் சேர்ப்பிக்கப்படாமலிருந்து அதனாலே அந்தப்பிரதிவாதி ஆஜராகாவிட்டாலும் வியாச்சியத்தைத் தள்ளிவிடக்கூடாதென்று கிராமக் கோர்ட்டார் உத்திரவுசெய்யாத பட்சத்தில் அந்த வியாச்சியத்தை தள்ளிவிடவேண்டியது.

வாதி ஆஜராகாமல் பிரதிவாதி மாத்திரம் ஆஜராகி, வியாச்சியம் முழுமையுமாவது அல்லது அதில் ஒரு பகுதியாவது அவன் ஒப்புக்கொள்ளுகிற விஷயத்தில் அவன் ஒப்புக்கொள்வதற்கு ஒத்தவரும்படியாய்க் கிராமக்கோர்ட்டார் பிரதிவாதியின்பேரில் தீர்ப்புசெய்யவேண்டியது. ஆனால் வியாச்சியத்தின் ஒரு பாகத்தை மாத்திரம் ஒப்புக்கொள்ளும் விஷயத்தில் மீ வியாச்சிய விசாரணையை வேறொரு தேதி வரையிலே கிராமக் கோர்ட்டார் நிருத்தி வைக்கலாம்.

கிராம முனிசிப்பு எந்த வியாச்சியத்தையாவது இருகட்சிக்காரர்களும் ஆஜராகவில்லை என்ற காரணத்தினால் தள்ளி விடப்பட்டாலும் அல்லது வாதியின் தவறுதலினாலே பிரதிவாதிக்குச் சம்மன சேர்க்கப்படாமலிருந்து அந்தப்பிரதிவாதி ஆஜராகாத காரணத்தினாலே வியாச்சியத்தைத் தள்ளுபடிசெய்திருந்தாலும், வாதியானவன் திரும்பவும் பிரதிவாதியின்மேல் வியாச்சியம் கொண்டுவரலாம்

வாதி ஆஜராகாமல், பிரதிவாதி மாத்திரம் ஆஜராகி வியாச்சியத்தை அவன் ஒப்புக்கொள்ளவில்லை என்ற காரணத்தினால் வியாச்சியத்தைத் தள்ளுபடிச்செய்திருந்தால் அப்படிச்செய்யப்பட்ட உத்திரவுதேதி முதற்கொண்டு மூப்பது நாளுக்குள் வாதியானவன் தகுந்த காரணத்தினாலே தான் ஆஜராவதற்குக் கூடாமையாய் விட்டதென்று கிராம முனிசிப்புக்குத் திருப்திகரமாய்த் தெரிவித்தால், வியாச்சியம் தள்ளுபடியானதை ரத்துசெய்ய வேண்டியது வியாச்சியத்தைத் திரும்ப நடத்துவதற்கு ஒரு நாளை நேமிக்கவும் வேண்டியது.

வாதி ஆஜராகாமல் பிரதிவாதி மாத்திரம் ஆஜராகி தாவாவின் ஒருபாகத்தை ஒப்புக்கொண்டதற்காக அந்த ஒருபாகத்திற்கு மாத்திரம் டிக்கிரி செய்யப்பட்ட தேதி முதல் மூப்பது நாளுக்குள் வாதியானவன் தகுந்த முகாந்தரத்தினலே தனக்கு ஆஜராக முடியாமற் போயிற்றென்று கிராமக்கோர்ட்டாருக்கு திருப்திகரமாய்த் தெரியப்படுத்தினல் முன்செய்த டிக்கிரியை ரத்துசெய்வதுடன் வியாச்சியத்தை நடத்துவதற்கு ஒரு நாளையும் நேமிக்கவேண்டியது.

ஒருதலையான (எக்ஸ்பார்ட்டி) டிக்கிரியை ரத்து செய்யும் விதம்.

யார்பேரில் ஒருதலையாக எக்ஸ் பார்டி டிக்கிரி செய்யப்பட்டிருந்தால் அந்தப் பிரதியானவன் தீர்ப்பை அமுலுக்குக்கொண்டுவராதொரு பிரயாதை நிறைவேற்றும் தேதி முதல் மூப்பது நாளுக்குள் கிராமக்கோர்ட்டாருக்கு மேற்படி எக்ஸ்பார்ட்டி தீர்ப்பை ரத்து செய்யவேண்டுமென்று மனுவு செய்துக்கொள்ளலாம். சம்மனுவது சோட்டீஸாவது கிரமமாய் சேர்க்கப்படவில்லே யென்றிலும், பிரதிவாதி ஆஜராவதற்குத்தகுந்த காரணத்தினலே சரிப்படாமற்போய்விட்டதென்றிலும் திருப்திகரமாய்க் கிராம முனிசீப்புக்குத் தெரியவந்தால் அந்தக் கிராமக்கோர்ட்டார் மேற்படி டிக்கிரியை ரத்துசெய்யவேண்டியது. அல்லாமலும் முன்மாதிரியாக வியாச்சியத்தை நடத்த ஒரு நாளையும் நேமிக்கவேண்டியது.

மேலே சொன்னபடி வியாச்சியம் தள்ளுபடியானதை ரத்து செய்யவேண்டியதும் டிக்கிரியை ரத்துசெய்ய வேண்டியதும் இந்த இரண்டும் எதிர்க்கட்சிக்காரனுக்கு நோட்டீஸ் கொடுத்துத்தான் டிக்கிரியைரத்து செய்யவேண்டியது.

வியாச்சியங்களை விசாரணைசெய்து நடவடிக்கை நடத்தும் விதம்.

1. விசாரணைத்தேதியில் கட்சிக்காரர்களும், சாட்சிகளும், கிராமச்சாவடியில் ஆஜராகும்படி செய்திருக்கவேண்டும்.

கட்சிக்காரர்கள் தங்களுடைய வியாச்சியத்தைக் குறித்து சோரிலே தாங்களாகவாவது அல்லது ஏஜண்டு குமஸ்தாக்கள் மூலமாகவாவது சொல்லிக்கொள்ளலாம்.

பிரதிவாதி ஆஜரானால், பிளேயிண்டில் சொல்லப்பட்ட தாவாவை அவன் ஒப்புக்கொள்ளுகிறானு இல்லையா என்று கோர்ட்டார் விசாரணைசெய்து தெரிந்துகொள்ளவேண்டியது. அவன் அந்த வியாச்சியத்தை ஒப்புக்கொண்டால் அதை எழுதிரிகார்டுசெய்து அதில் அவனுடைய கையெழுத்து வாங்கவேண்டும். அல்லது இருகட்சிக்காரர்களும் இராஜியாய்ப்போனாலும் அதையும் மூன்போல எழுதிரிகார்டுசெய்து அதிலும் அவர்களுடைய கையெழுத்துக்களை வாங்கவேண்டியது. மேலே சொன்ன இரண்டு சங்கதிகளுக்கும் ஒத்திருக்கும்படியாக டிக்ரி பிறப்பிக்கவேண்டியது. பிரதிவாதி அந்த தாவாவை ஒப்புக்கொள்ளாத பட்சத்தில் அவனுக்குள்ள ஆட்சேபனைகளை வாய்மொழியோ அல்லது எழுத்து மூலமாயோ வாங்கவேண்டியது. எழுத்தமூலமாய் வாங்குகிறதாக விருந்தால்வாக்கு மூலங்களை கிராமமுனிசீப்பு தானே தன்கையாலெழுதி பிறகு அவனுக்குப் படித்துக் காண்பித்து அவன் சரியென்று ஒப்புக்கொண்ட தன்மேல் அவனுடைய கையெழுத்தையும் அதில் வாங்கவேண்டும.

கோர்ட்டாருக்கு யுக்தமாகத்தோற்றினால் விவரப்பத்திரிகை (ஸ்டேட்மெண்டு) தாக்கல்செய்ய அவனுக்கு சாத்தியப்படும்படியாக வியாச்சியத்தை கிறுத்திவைத்து பிறகு கடத்தலாம்.

2. வாதியானவன் தான் தாக்கல்செய்த யாதொரு வியாச்சியத்தத்தனக்குத் தள்ளிக்கொள்ளவேண்டுமென்று இஷ்டமிருக்கு பட்சத்தில் அவன் அதை ஒரு மனுரூபமாக எழுதிக்கோர்ட்டாருக்குத்தெரியப்படுத்திக் கொள்ளவேண்டியது. கோர்ட்டார் அந்த மனுவைப்பெற்றுக்கொண்டு பைலிலிருந்து அந்த வியாச்சியத்தை அடித்துப்போடவேண்டியது. அதே வியாச்சியத்தைக்குறித்து மேற்படி வாதியானவன் திரும்பவும் வியாச்சிங்கொண்டுவரலாகாது.

3. உபயக்கட்சிக்காரர்களில் யாராவது மற்றொரு கட்சிக்காரனுடைய பிரமாணத்தின், வியாச்சியத்தைப் பைசல்செய்து கொள்ள மனமுள்ளவனுக விருந்து அதற்கு அந்த எதிர்கட்சிக்காரன் சம்மதப்பட்டு பிரமாணமும் செய்தால் அந்தப்பிரமாணத்திற்குஒத்தபடி கோர்ட்டார் தீர்ப்புச் சொல்லவேண்டியது.

உபயக்கட்சிக்காரர்களும் விசாரணையின்பேரில் தாவாவைப் பைசல்செய்துகொள்ள மனமுள்ளவர்களா யிருந்தால் அப்போது கட்சிக்காரர்களையும் இரண்டுபக்கத்து சாட்சிகளையும் நீரவிகரித்து

அவர்களால் வாதிக்கப்படும் வாதங்களையும், இரண்டுபக்கத்து சாக்ஷியங்களையும் நன்றாய் விசாரித்துக்கொண்டு வந்த தாவா சரியென்று அபிப்பிராயப்பட்டால் யுக்தானுசாரம் போல் தீர்ப்புப் பிறப்பிக்கலாம். இல்லாவிடில் வியாச்சியத்தைத் தள்ளியே போடலாம்.

4. விசாரணை தொடங்குமுன் வாதியையும் பிரதிவாதியையும் சாட்சிகளையும் ஒவ்வொருவரையும் தன்னுடைய பெயர், தகப்பன் பெயர், ஜாதி, தொழில் இருப்பிடம் முதலியவற்றைக் கேட்பதோடு கூட பிரமாணமும் செய்விக்கவேண்டும் அதாவது "ஸர்வவல்லமையுள்ள தெய்வத்தின் முன்பாக நான் மெய்யையே சொல்லுகிறேன். மெய்யைத்தவிர வேறொன்றுமில்லை" என்ற வாக்கியத்தைச் சொல்லச் சொல்லிப் பின்பு விசாரணை தொடங்கவேண்டும்.

5. யாதாமொரு வியாச்சியத்தில் ஒரு பாகம் மாத்திரம் சரி என்று சாட்சியங்களால் ஏற்படும் பட்சத்தில் அதற்குத்தக்கபடி அந்தப் பாகத்திற்கு மாத்திரம் தீர்ப்புப்பிறப்பிக்கவேண்டியது.

6. யாதொரு கிராமக் கோர்ட்டில் கொண்டு வரப்பட்ட வியாச்சியத்தின் கட்சிக்காரர்கள் ராஜியாய்ப் போவார்கள் போலிருந்தால் வியாச்சியத்தை விசாரணை செய்வதினின்றும் நிறுத்தி வைக்கலாம்.

சாட்சிகளுக்கு ஸம்மன் சேர்ப்பிக்கும் வகை.

(1) உபய கட்சிக்காரர்களும் கோரிக்கொண்ட சாட்சிகள் கிராமக் கோர்ட்டின் அதிகாரப் பிரதேச எல்லைக்குள் வாசஞ் செய்தால் அந்த சாட்சிகளை வாய் மொழியாகவாவது அல்லது எழுத்துமூலமாகவாவது சம்மன் அனுப்பி வரவழைக்கலாம்.

(2) கோர்ட்டாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்கு வெளியில் ஐந்து மயில் தூரத்திற் குள்ளாக வாசஞ் செய்யும் யாதாமொருசாட்சியை எழுதியசம்மன் மூலமாய் வரவழைக்காலாம். அந்த சம்மனை அவன் எந்த கிராமத்தில் வசிக்கிறானே அந்த கிராம முனிசீப்பு மூலமாய்ச் சேர்ப்பிக்க வேண்டியது.

(3) எந்த சாட்சியாவது கோர்ட்டாருடைய அதிகாரப் பிரதேச எல்லைக்கு வெளியில் ஐந்து மயில் தூரத்திற்கு மேல்பட்ட கிராமத்தில் வாஸஞ்செய்தால், கோர்ட்டார் ஸவால்கள் எழுதிக்கொடுக்கும்படி கட்சிக்காரர்களுக்கு உத்திரவு பண்ணலாம். அப்படி அவர்களால் எழுதிக் கொடுக்கப் பட்ட சவால்களை அந்த சாட்சியானவன் எந்த கிராமத்தில் வசிக்கிறானோ அந்த கிராம முனிசீப்புக்கு ஒருகடிதமெழுதி அத்துடன் அனுப்ப வேண்டியது. அந்த முனிசிப்பானவர் அதைப் பெற்றுக்கொண்ட உடனே ஸம்மன் மூலமாய்க் குறித்த சாட்சியை வரவழைத்து அந்த ஸவால்களின் பேரில் அவனை விசாரிசை செய்ய வேண்டியது இத்தோடுகூட அவனால் கொடுக்கப்பட்ட ஜவாப்புக்களை வியாச்சியம் நடத்து கொண்டிருக்கும் கிராமக் கோர்ட்டிற்கு அனுப்பி விடவும் வேண்டியது.

(4) சாட்சிக்கு அனுப்பப்படும் ஸம்மனிலே அந்த நபர் நேரில் ஆஜராகி சாட்சியம் சொல்லவேண்டுமென்றுவது அல்லது தஸ்தாவேஜுகளைக் கொண்டுவந்து காட்டவாகிலும் அல்லது காட்டுவிக்கவாகிலும் செய்யவேண்டிய தென்று உத்திரவு பண்ணி ஸம்மன் பிறப்பிக்கலாம்.

(5) தேசாசீராப்படிக்கும் வழக்கப்படிக்கும் பயிரங்கத்தில் வரக் கூடாத ஸ்திரீகளை கோர்ட்டில் நேராகவந்து ஆஜராகும் படி ஸம்மன் போடக்கூடாது. கோர்ட்டிலே நேரில் வந்து ஆஜராவதினின்று விலக்கு செய்யப்பட்டிருக்கிறவர்களுக்கும் ஸம்மன் பிறப்பிக்கக்கூடாது. வியாதியினாலோ அல்லது தூரபலத்தினாலோ ஆஜராகக் கூடாதவர், அப்படி ஆஜராவதினும் மிகுந்த தன்பத்துக்காளாகவேண்டியவர் ஆகிய இவர்களையும் ஸம்மன் அனுப்பி ஆஜராகும் படி செய்யக்கூடாது. மேலே சொல்லப்பட்ட சாட்சியம் வேண்டியது வெகு அவசியமாயிருந்தால் கிராமக் கோர்ட்டார் அவர்களிருப்பிடத்திற்குப்போய் அவர்களை விசாரிசை செய்துகொள்ளவேண்டியது.

(6) சாட்சிகளையும் பிரமாணத்தின் பேரிலாவது அல்லது பிரமாண பூர்வகமான உறுதி மொழியைக் கொண்டாவது

விசாரிக்க வேண்டியது. ஆனால் சாட்சிகளுடைய வாக்குமூலங்களைக் கிராமக்கோர்ட்டார் எழுதிக்கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை.

(7) கேசுகள் சொல்பமான வைகளாயும் முக்கியமான தல்லாத வைகளாயும் இருக்கிற விஷயங்களில் சாட்சியங் கொடுக்கும் பொருட்டு ஜட்ஜின்தார் ஜாகிரிதார் முதலான அந்தஸ்தும் கௌரவமுள்ள நபர்களை சாட்சிகளாக வரும்படி சம்மனுப்பாமல் தங்களால் கூடிய வரையில் கிராம முனிசீப்புகள் சமாளித்துக் கொள்ளவேண்டும்.

(8) சாட்சிகள் தங்கள் சாட்சியத்தைச்சொல்லும்போது தாங்கள் எழுந்து நின்றே சொல்லவேண்டும். பலஹீனத்தினாலாவது, வயோதிகத்தினாலாவது ஆயாசத்தினாலாவது இன்னும்இதைப்போன்ற காரணத்தினாலாவது யாதொரு விஷயத்தில் சாட்சிக்கு ஆசனங் கொடுப்பது யுக்தந்தான் என்று கிராம முனிசீப்புக்குத் தோன்றினாலொழிய மற்றப்படி நின்றுகொண்டு சாட்சி சொல்லச்சொல்வது என்கிற இந்த வழக்கமானது கடந்துகொண்டே யிருக்க வேண்டும். பிரமாணஞ்செய்தாலும், உறுதிமொழி கொடுத்தாலும் எப்போதும் நின்றுகொண்டே செய்யவேண்டும் எந்த விஷயத்திலும் எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் சாடையையாவது அல்லது கட்சிக்காரனையாவது பெனாலில் கிராம முனிசீப்பானவர் உட்காரவிடவேகூடாது.

8. ஒரு வியாச்சியத்தின் கட்சிக்காரனுகிய பிரதிவாதிக்கு சட்டப்படி வாதி கொடுக்கவேண்டியதாக விருந்தாலும் அந்தப் பிரதிவாதி அந்த கிராமக்கோர்ட்டிலேயே வியாச்சியஞ் செய்யக் கூடியதாக விருந்தாலும் தனக்குச் சேரவேண்டிய மெற்படி தொகையை பிரதிவாதியானவன் எதிர்க்கடனுகத் தெரிவித்துக்கொள்ளலாம். அந்த எதிர்க்கடனைத் தாவாவான ஸ்தாபிதஞ்செய்யப்பட்டால், உபய கட்சிக்காரர்களில் யாருக்காவது எவ்வளவு தொகை சேரவேண்டியதென்று கடைசியில் தெரியவருகிறதோ அந்தத்தொகைக்கு அந்த பார்ட்டிக்கு டிக்கிரி பிறப்பிக்கவேண்டியது.

9. சம்மன் படி கிராமக்கோர்ட்டு விசாரணைக்கு ஆஜராயிராத சாட்சிகளைச் சம்மன் அனுப்பிக்க கோர்ட்டார் வரவழைத்துக்

கொள்ளவேண்டியது. ஒவ்வொரு வியாச்சியத்திலும் பிரதிவாதி தன்னுடைய ஸ்டேட்மென்டு கொடுத்தபின்புதான் கோர்ட்டார் வியாச்சியத்தின் உண்மையைக்குறித்துப் பரிசீலனை செய்ய ஆரம்பஞ்செய்யவேண்டியது. இந்த சமயத்தில் சாட்சிகளில்லாமல் உண்மை விளங்காது. ஆகையாலே தாவா கட்சிக்காரர்கள் கோரும் சாட்சிகளைக் கோர்ட்டார் சம்மன் போட்டு வரவழைத்துக் கொள்ளுவது அவசியம்.

10. கட்சிக்காரர்கள் தாவா விஷயத்தில் ராஜியாகப்போவார்கள் போலிருக்கிறதென்று கோர்ட்டாருக்குத் தெரியவந்தாலும் அல்லது வேறே தகுந்த எந்தக்காரணத்தினாலும் கிராமக் கோர்ட்டார் கட்சிக்காரர்களுக்கெதிரிலாவது அல்லது பிரதிவாதி ஆஜரில்லாதபோது வாதிக்கு எதிரிலாவது ஒருதேதியை நிச்சயித்து அந்த தினம் வரையில் வியாச்சிய விசாரணையை நிறுத்தி வைக்கலாம்.

அந்தத்தேதியில் கட்சிக்காரர்களிருவரும் ஆஜராகாமற் போனாலும் கிராமக் கோர்ட்டார் வியாச்சியத்தைப்பைசல் செய்வதைக்குறித்து இருகட்சிக்காரர்களும் ஆஜராகாதபட்சத்தில் வியாச்சியத்தைத் தள்ளி விடவேண்டியது. யாராவது ஒரு கட்சிக்காரன் மாத்திரம் ஆஜராயிருந்தால் கிராமக் கோர்ட்டார் சமயோசிதம் போல் ஒரு பக்கமாய்த்தீர்ப்புபிறப்பிக்கவேண்டியது. அல்லது தமக்கு கட்சிக்காரர்கள் ஆஜராகாத விஷயம் திருப்திகரமாய்த் தகுந்த காரணத்துடன் என்று தெரியவந்தால் வியாச்சிய விசாரணையை வேறொரு தேதிவரையிலே நிறுத்தியும் வைக்கலாம் அல்லது தமக்கு எப்படியுக்தமாகத் தோணுகிறதோ அந்த விதமாகவேறு உத்திரவு பிறப்பிக்கலாம்.

டிக்ரி பிறப்பிப்பதும் அதை நிறைவேற்றும் விதமும்.

1. கட்சிக்காரர்களாகிய வாதிப் பிரதிவாதிகளிருவரும் சொல்லிகொள்ளும் ஆட்சேபணைகளை நன்றாய்க் கேட்டு, இரண்டு பக்கங்களிலும் சொலலப்பட்ட சாட்சியத்தையும் கவனமாய் யோசித்த பிறகு கோர்ட்டார் தங்களுக்கு நியாயமாகவும் நீதியாகவும் தங்கள் மனச்சாட்சிக் கேற்றதாகவும் தோற்றுகிறபடி டிக்ரி பிறப்பிக்க வேண்டும்.

2. தாங்கள் பிறப்பிக்கும் டிக்ரியிலே, வியாச்சிய நெம்பரையும், கட்சிக்காரர்களின் பெயரையும், தாவாவின்விவரங்களை, மேற்படி

வியாச்சியத்தில் விமரிசை செய்யப்பட்ட சாட்சிகளின் பெயரையும், தங்களால் பரிசீலை யிடப்பட்ட ஆதாரவுகள் பலானவை யென்பதையும் அதன் பேரில் தாங்கள் செய்த தீர்மானத்தையும் அந்தத் தீர்மானஞ்செய்வதற்கான காரணங்களையும கண்டெழுத வேண்டியது. இன்னம் அதில் காட்டவேண்டிய விஷயங்கள் என்னவென்றால் (1) தீர்மானஞ் செய்யப்பட்ட ரொக்கம் இவ்வளவு (2) ஒப்பிக்கப்படவேண்டிய அசையும் பொருள் இன்னது. (3) அப்படி பொருள் ஒப்பிக்கப்படாத பட்சத்தில் அதற்குப் பதில் செலுத்தவேண்டிய தொகை இவ்வளவு. (4) வியாச்சியச் செலவு இல்லவ்வளவு (5) அந்தச் செலவு தொகை இன்னின்ன கட்டிக்காரர் இவ்வளவு செலுத்தவேண்டிய தென்பது. இவை எல்லாம் அதிலே காட்டியிருக்க வேண்டும். இத்துடன் அதிலே கிராமமுனிசிப்பு டிக்கிரி பிரப்பித்த தேதியைப் போட்டுத் தன் கையெழுத்தும் போடவேண்டியது. நியாயசபை ஏற்படுத்தப்பட்டிருக்கும் விஷயத்தில் அதற்குச் சம்மதிக்கிற நியாயாதிபதிகளும் கையெழுத்துப்போடவேண்டியது மனுகொடுத்துக்கொண்டால் கிராமக் கோர்ட்டார் ஒவ்வொரு கட்சிக்காரனுக்கும் டிக்கிரியின் நகலைப் பெற்றுக் கொள்ளச் செய்யவேண்டியது.

3. டிக்கிரித் தொகைக்கு வட்டி ஏற்படுத்துவது.

யாதொரு கிராமக்கோர்ட்டார் ரொக்கத் தொகைக்காகக் கொண்டுவரப்பட்ட வியாச்சியத்தைக் குறித்து டிக்கிரி பிறப்பித்திருந்தால் அந்தத் தொகைக்கு டிக்கிரி பிறந்த தேதிமுதல் பணஞ் செலுத்தப்படுகிற தேதிவரையில் வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்குப் பனிரெண்டு வீதத்திற்கு அதிகமாகாமல் வட்டி செலுத்தும்படி டிக்கிரி செய்யலாம்.

4. டிக்கிரி தொகையை இத்தனை வாயிதாக்களில் செலுத்த உத்திரவு பண்ணுவது.

கிராமக்கோர்ட்டார் ரொக்கத்தொகைக்கு டிக்கிரி செய்யும் போது கட்சிக்காரன் தனக்கு டிக்கிரித் தொகையை ஒரேதடவையில் செலுத்தக்கூடாமை யிருக்கிறதென்றும் வாய்தாக்களில் செலுத்த உத்திரவுசெய்ய வேண்டுமென்று விண்ணப்பம் செய்துக் கொண்டால் மேற் கண்ட வீதப்படி வட்டியுடனே யாவது வட்டியில்லாமலாவது வாய்தாக்களாகச் செலுத்தும்படி உத்திரவு செய்யலாம்.

5. இன்னகோர்ட்டார் டிக்கிரியை நிறைவேற்றலா மென்பதில்.

எந்தகிராமக் கோர்ட்டாரால் டிக்கிரி பிரப்பிக்கப்பட்டதோ அந்த கிராமக் கோர்ட்டாராவது அல்லது டிக்கிரியை நிறைவேற்றப் படுவதற்காக அதை யாருக்கு அனுப்பப்படுகிறதோ அந்தக் கிராமக் கோர்ட்டாராவது அல்லது டிஸ்ரிக் கட்டு முனிசீப்பாவது இதில் பின்னல் சொல்லியிருக்கிற நிபந்தனைகளின்படி யாதொரு டிக்கிரி யை நிறை வேற்றவேண்டியது.

6. அசையும் பொருளைப்பற்றிய டிக்கிரியை இன்னப்படி நிறைவேற்றுவது.

யாதொரு டிக்கிரியானது அசையும் பொருளைக்கைப்பற்றுவதற் காக பிறப்பிக்கப்பட்டிருந்தால் அந்தப் பொருளைக்கைப்பற்றி டிக்கி யார் பக்கமாய்ப் பிறப்பிக்கப்பட்டதோ அவனிடத்தில் அதை ஒப் பிப்பதினல் டிக்கிரியை நிறைவேற்றலாம். அல்லது அந்த அசையும் பொருளை கைப்பற்றக்கூடாவிட்டால் அதற்குப்பதிலாக டிக்கிரி செய்யப்பட்டிருக்கும் பணத்தைச் செலுத்தும்படி நிர்பந்திப்பதினு லும் மேற்படி டிக்கிரியை நிறைவேற்றலாம்.

7. டிக்கிரியின்படியாவது அல்லது வேறு ஏற்பாட் டின்படியாவது பணஞ்செலுத்தவேண்டிய முனிஸீப்புக்கெதிரில் செலுத்துவதும் அல்லது ரிகார்டு பண்ணுவதும்.

ஒரு கிராமக் கோர்ட்டாரால் செய்யப்பட்ட டிக்கிரியின்படி செலுத்தப்படவேண்டிய தொகை பூராவும் அந்த டிக்கிரியானது எந்த கிராம முனிசீப்பினல் நிறைவெற்றப்பட வேண்டுமோ அந்த கிராம முனிசீப்புக்கெதிரிலே டிக்கிரி பெற்றவனுக்கு செலுத்திவிட லாம்.

அல்லது எழுத்தாலமாய் அதிகாரம் கொடுக்கப் பெற்றவனு டைய ஏஜண்டி னிடத்திலாவது செலுத்திவிடலாம்.

மேற்சொன்ன இரண்டுநிற்பாடுமில்லாவிட்டால், டிக்கிரி பெற்ற கட்சிக்காரனுக்கு திருப்தி கரமாய் வேறுவிதமான ஒரு ஒழுங்கைச் செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்யப்பட்ட ஒழுங்கானது இப்படிப்பட்டதென்று எழுதி ரிகார்டு செய்து அதில் டிக்கிரிபெற்ற வனுவது அல்லது அதிகாரம் பெற்றவன் ஜாண்டாவது மேற்படி கிராமமுனிசிப்புக்கெதிரில் கையெழுத்துப் போட வேண்டியது. அல்லாமலும் அந்த கிராம முனிசிப்பும் அதற்கு அத்தாட்சி கையெழுத்துப்போடவும் வேண்டியது.

மேலே சொன்னபடி சொக்கஞ் செலுத்தப்பட்டிருந்தாலும் சரி அல்லது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தாலும் சரி இந்த விவரத்தை க்கிராம முனிசிப்பு அந்த டிக்கிரியில் கண்டெழுதி எண்டார்ஸ் செய்யவேண்டியது. மேலும் தாம் வைத்துவரும் வியாச்சிய பதிவு செய்யவும் வேண்டியது.

எந்த டிக்கிரியின்படியபணஞ்செலுத்தப்பட்டாலுஞ்சரி அல்லது எந்த டிக்கிரியைக்குறித்தாவது முழுவதுக்குமாவது அல்லது ஒரு பாகத்திற்காவது ஏதாவது ஒழுங்குசெய்யப்பட்டிருந்தாலும் மேலே சீர்ணயித்திருக்கிறபடியாகிலும் டிஸ்திரிக்ட்டு முனிசிபுகோர்ட்டிலாகிலும் பணஞ்செலுத்தப்பட்டாலும் அல்லது ஒழுங்கு ஏற்பட்டு ஒத்துக்கொள்ளப்பட்டாவது இருக்கவேண்டும். அப்படிக்கில்லாமற்போனால் அது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8. அசையும் பொருள் ஜப்தி செய்வது.

டிக்கிரி பெற்ற யாதொரு கட்சிக்காரன் டிக்கிரியை நிறைவேற்றமனுக்கொடுத்ததின்பேரில் கிராமக்கோர்ட்டார் தங்களுடைய கிராமத்திர்மான கடனாளிக்குச் சொந்தமான அசையும் பொருள் எதை டிக்கிரிபெற்றக் கட்சிக்காரன் காட்டுகிறானே அந்த டிக்கிரியின்படி அவனுக்குச் செலுத்தப்படவேண்டிய தொகையினளவுக்கு ஜப்திசெய்யவேண்டியது. அல்லது இதனடியில்கண்ட சொத்துக்கள் ஜப்தி செய்யப்படுவதற்குள்ளாகாது அவையாவன:—

(1) நிர்ப்பான கடனாளி அவனுடைய பெண்சாதி, அவனுடைய மக்கள் ஆகிய இவர்கள் உபயோகித்துக்கொள்ளுகிற அவசியமான வஸ்திரங்களும், படுக்கை முஸ்திப்புகளும்.

(2) கடனாளி கைத்தொழில் காரனாயிருந்தால் அவனுடைய ஆடு தங்கள், தீர்ப்பான கடனாளி விவசாயஞ்செய்பவனாக விருந்தால் அவனுடைய விவசாய சாமான்கள், அவன் விவசாயம்பண்ணி ஜீவனம் பண்ணக்கூடியதற்காக அவசியமாகவேண்டியதுதான் என்று கோர்ட்டார் அபிப்பிராயப்படும் சால் நடைகளும், தானிய விதைகளும்.

(3) தீர்ப்பான கடனாளி வியாபாரியாயிருந்தால் அக்கௌண்ட் வைக்கு புஸ்தகங்கள்.

(4) கெவர்ன்மென்டு மிலிடெரி பென்ஷனர்களுக்குஞ், சிவில் பென்ஷனர்களுக்கும் கொடுக்கப்படும் வர்த்தனைகளும், நன்கொடைகளும், பொலிடிகளும், பென்ஷன்களும்.

(5) சர்க்கார் வேலையிலிருக்கும் யாதொரு உத்தியோகஸ்தனுக்கும் அல்லது செயில் சம்பெனியில் உத்தியோகஞ் செய்யப்பட்டவனுக்கும் அல்லது பிரதேச அதிகாரிகளுக்குள் உத்தியோகஞ்செய்யப்பட்டவர்களுக்கும் மாசச்சம்பளம் (20) இருபது ரூபாயிச்கு மேற்படாத விஷயத்திலே அப்படிப்பட்ட சம்பளம் ஆனால் இருபது ரூபாயிக்கு மேல் மாசச் சம்பளம் வாங்கும் விஷயத்தில் அதில் ஒரு பாதியை ஜப்தி செய்யலாம்.

(6) சுதேச ராஜாவு கிபக்தனைகள் சம்பந்தப்படுகிற நபர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்ற சம்பளம், வர்த்தனைகள் முதலியவை.

(7) வேலையாட்களும், வீட்டு வேலைக்காரர்களும் பெறுகிற கூலிகள்.

9. தீர்ப்பான கடனாளியின் ஸ்வாதீனத்திலிருந்தால் அந்த சொத்தை ஜப்திசெய்யும் விதம்.

(1) டிக்கிரிபெற்றவனால் காட்டப்படும் சொத்தானது தீர்ப்பான கடனாளியின் ஸ்வாதீனத்திலிருக்கும் பட்சத்தில் அந்தப் பொருளை நேராய்க்கைப்பற்றி ஜப்திபண்ண வேண்டியது. அந்த சொத்தின் பத்திரத்திற்காக கிராம முனிஸீப்பானவர் ஏதாவது ஒருவகை செய்ய வேண்டியது.

தீர்ப்பான கடனாளியானவன் தன்னிடத்தில் அந்தப் பொருள் கேழ்க்கப்படும்போது அதை ஆஜர் படுத்துவதாக எழுத்தமூலமாய்ப்போதுமான ஜாமீன் கொடுக்கப்படும் பட்சத்தில் அதை மேற்படி கடனாளியினுடைய வசத்தில் விடுவிக்கலாம். கேழ்க்கப்படும்போது பொருளான ஆஜர் படுத்தப்படாவிட்டால் ஜாமீன்தாரர்பேரில், அந்த டிக்கிரியை ஆஜர் படுத்தப்படாமலிருக்கிற பொருளின் பெறுமானத் தொகைக்கு, கிறைவேற்றலாம்.

(2) தீர்ப்பான கடனாளியின் வசத்தில் பொருள் இல்லாத பட்சத்தில், அந்தப் பொருளானது எவனுடைய ஸ்வாதீனத்திலிருக்கிறதோ அந்த மனிதன் அந்தப்பொருளை கடனாளிக்குக் கொடுத்துவிடக்கூடாதென்று எழுதிய கட்டளை மூலமாய் ஜப்திசெய்ய வேண்டியது.

10. கடன் தொகையை ஜப்திசெய்யும் விதம்.

தீர்ப்பான கடனாளிக்கு வரவேண்டிய கடன்களையும் தொகைகளையும் கிராமக் கோர்ட்டாருடைய மறு உத்திரவு வரையில் மேற்படி கடனாளி கடனையாவது தொகையையாவது, பெற்றுக்கொள்ளவேகூடாதென்றும் கடன் வாங்கியிருப்பவன் அதைச் செலுத்தக்கூடாதென்றும் எழுதிய கட்டளை மூலமாய் ஜப்திப் பண்ணவேண்டியது. அசையாப் பொருளின் பேரில் ஏற்பட்டிருக்கிற யாதொரு கடனை ஜப்தி பண்ணவும் விற்கவும் கிராமக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை.

11. ஜப்தி செய்யப்பட்ட பின்பு பொருளைப் பராதீனஞ்செய்வது.

கோர்ட்டைப்பற்றியோ அல்லது எழுதிய கட்டளைப்படியோ ஜப்திசெய்யப்பட்ட பின்பு, ஜப்தியாயிருக்கிற பரியந்தம் அந்த ஜப்திப் பொருளை, விக்கிரயம். தானம் அடைமான முதலிய பராதீனஞ் செய்தால் அந்தப் பராதீனஞ் செல்லாது.

12. ஜப்தி சொத்தை விடுதலை செய்வது.

டிக்கிரி கிறைவேற்ற ஜப்தி செய்யப்பட்ட பொருளின் பேரில் வியாச்சியஞ்சொண்டு வரப்பட்டால் கிராமக் கோர்ட்டார் அதைக்

குறித்து விசாரணை செய்யவேண்டியது. மேற்படி பொருளை விற்பனை செய்யும் சுதந்தரம் தீர்ப்பால் அதை ஜப்தியிலிருந்து விடுதலை செய்யவேண்டியது.

13. ஜப்தி செய்யத்தண்டோரா போடுவது.

பொருள் ஜப்தி செய்யப்பட்டபின்பு பதினைந்து நாளுக்குக் குறையாமல் ஒருகாலிலே பொருள் விற்பனையைக் குறித்து இஸ்தியார் நாமா எழுதி அதைத் தங்கள் கோர்ட்டிற்கு வெளிப்புறத்தில் தொங்கவிடவேண்டும். விற்பனைகாலத்திற்கு முன் தண்டோராப் போட்டுவித்துப் பின்னும் பரியங்கப்படுத்தவேண்டும்.

14. விற்பனை நடத்தும் விதம்.

(1) விற்பனைக் குறித்த தேதியிலே கிராம முனிசீப்புக்கெதிரில் அந்தப் பொருளைப் பரியங்காமாய் ஏலம் போடவேண்டியது. உயர்ந்த விலைக்குக் கேட்பவனுக்கு விட்டுவிட வேண்டியது அந்த விற்பனைத் தொகையை அட்டியில்லாமல் உடனே செலுத்திவிட வேண்டியது அப்படி செலுத்தத் தவறினால் மறுஏலம் கூறவேண்டியது. ஏலத்தொகை செலுத்தும்போது அதற்குக் கோர்ட்டார் ரசீது கொடுக்கவேண்டியது.

(2) கிராம முனிஸீப்புகளும் இதாசர்க்கார் உத்தியோகஸ்தர்களும் விற்கப்படும் பொருளை விலை கேட்கவுங்கூடாது விலைக்கு வாங்கவுங்கூடாது.

(3) பொருளை ஏலங்கூறுவதற்கு முன்னமே டிக்கிரியின் பாக்கித் தொகையையும் விற்பனைச்செலவையும் கிராம முனிஸீப்பிடம் செலுத்தி வந்தால், ஏலத்தை நிறுத்திவிட வேண்டியது.

(4) டிக்கிரி நிறைவேற்றப் பொருளை விற்றுவந்தபணத்திலிருந்து நிறைவேற்றுதலுக்குப் பிடித்த செலவை முதலில் செலுத்தவேண்டியது. பிறகு டிக்கிரிபெற்ற கட்சிக்காரனுக்குச் சேரவேண்டிய தொகையைச் செலுத்தவேண்டியது. கடைசியில் ஏதாவது மிஞ்சியிருக்கும் பட்சத்தில்

அதைத் தீர்ப்பான் கடனுளிக்குச் செலுத்திடவேண்டியது.

(5) விற்பனை செய்யப்பட்ட பொருளானது கோராய்க்ளகப்பற்றி ஜப்தி பண்ணப்பட்டிருந்தால் அதைக் கிராமக்காரனுக்கு ஒப்புவித்தவிடவேண்டியது.

(6) விற்பனையான பொருள் தீர்ப்பான கடனுளியல்லாத வேறொருவனுடைய ஸ்வாதீனத்தில் இருந்தாலும் அல்லது எவனுவது கொடுக்கவேண்டிய கடனும் பொருளின் ஸ்வாதீனத்தைக் கிரயக்காரன் நீங்கலாக மற்ற யாருக்கும் ஒப்புவிக்கக்கூடாது அல்லது கடனை செலுத்தக் கூடாதென்று மேற்படியானுக்கு எழுத்து மூலமாய் கோர்ட்டால் கொடுத்துப் பொருளைக் கிரயக்காரனுக்கு ஒப்பிக்கச் செய்யவேண்டியது.

15. டிக்கிரியை டிஸ்திரிகட்டுக் கோர்ட்டுக்கனுப்பி நிறைவேற்றுவது.

பிறந்த டிக்கிரியைக்குறித்த டிக்கிரிபெற்றவன் மனு செய்து கொண்டால் கிராமக்கோர்ட்டார் உடனே நிறைவேற்றுவதற்காக அந்த டிக்கிரியை டிஸ்திரிகட்டு முனிஷீப்பினிடத்தில் அனுப்பவேண்டியது. அவரும் அதைத்தான் தன் கோர்ட்டில் தானே பிறப்பித்த டிக்கிரியாக எண்ணி நிறைவேற்றவேண்டியது. அல்லது பிரதிவாதிக்கு வேறொரு கிராமத்தில் அசையும் பொருளிருக்கிறதாகக்காண்பிக்கப்படுகிறதோ அந்தக்கிராமக் கோர்ட்டாருக்கு டிக்கிரியை நிறைவேற்ற அனுப்பிவிடலாம் அவரும் அதைத்தான் பிறப்பித்த டிக்கிரியைப்போல நிறைவேற்றவேண்டியது.

டிஸ்திரிகட்டு முனிஷீப்புகளுக்கு கிராமக் கோர்ட்டிலிருந்து டிக்கிரியை வரவழைத்துக்கொண்டு அதைத் தான் பிறப்பித்த டிக்கிரிபோல நிறைவேற்ற அதிகாரம் உண்டு.

16. தற்காலத்து உத்திரவுகளின்படி கிராம முனிஷீப்புமாதந்தோறும் அடியிற்கண்ட கணக்குகளை டிஸ்திரிகட்டு முனிஷீப்புக்கு அனுப்பவேண்டும். அவைகளைத் தபால் மூலமாய் "ஸர்வீஸ் பேரித்தபால் தலை ஒட்டாமலே" அனுப்பவேண்டும்.

(1) முந்திய மாதத்தில் தம்மால் பைசல் செய்யப்பட்ட வியாச்சியங்களைக்குறித்துக் கணக்கை பின்சொல்லிய ரிஜிஸ்டர் நமூனாவின்படி பிறதி மாதத்திலும் முதல் தேதியில் அனுப்பவேண்டும்.

(2) தம்மால் பைசலாகாமல் அரைகுறையாயிருக்கிற வியாச்சியங்களைக்குறித்த கணக்கை அதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் நமூனாவின்படி பிரதிவருஷம் ஜனவரி மீ முதல் தேதியிலும் சூலை மீ முதல் தேதியிலும் அனுப்பிவிடவேண்டும்.

(3) முந்திய வருஷத்தில் விசாரம் நடத்தப்பட்ட வியாச்சியங்களுக்கு அதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற நமூனாக்களின்படி 7-ம் நம்பர், 8-ம் நம்பர், 9-ம் நம்பர் வருஷாந்தரக்கணக்குகளை பிறதி வருஷத்திலும் ஜனவரி மீ 21க்குமுன் அனுப்பவேண்டும்.

பல்வகைப் பட்டவை.

1. வியாச்சியம் விசாரணை நடந்து டிக்கிரி பிறக்கும் முன்னே அதைச் சேர்ந்த கட்சிக்காரர்களில் யாராவது இறந்து போயவர்களாலல் இறந்துபோனவனுடைய சட்டசம்மதமான பிரதிநிதியை ரிகார்ட்டில் பதிவு செய்துகொள்ளும்படி விண்ணப்பஞ்செய்துகொண்டால் அந்தப்படி ரிகார்ட்டுசெய்துகொண்டு பாக்கி நடவடிக்கைகளைக் கிரமமாக நடத்தவேண்டியது.

2. யாதொரு கட்சிக்காரனும் இறந்துபோனதைக் குறித்து இறந்த நாள்முதல் அறுபது நாளைக்குள் விண்ணஞ் செய்துக்கொள்ளாவிட்டால், வியாச்சியத்தைத் தள்ளிவிட வேண்டியது, அதேவியாச்சிய மூலத்தைக்குறித்து மறுபடி தாவா கொண்டு வரவொட்டக் கூடாது.

3. டிக்ரி பெற்றவன் அது பூராய் கிறவேற்றப்படும் முன்னிறந்து போவானாலல் அவனுடைய சட்ட சம்மதமான பிரதிநிதியானவன் இறந்து போனவனுக்குப் பதிலாகத்தன் பெயரை டிக்கிரி பெற்றவனுடைச் சேர்த்துக்கொள்ள விண்ணப்பஞ் செய்துகொண்டால் தீர்ப்பான கடனுக்குக் கிராமக் கோர்ட்டார் சேட்டிலை கொடுத்துப் பிறகு அந்த விண்ணப்பதாரன் இறந்து போனவனுடைய

சட்டசம்மதமான பிரதிநிதிதான் என்று தெரிந்துகொண்டு, அவனுடைய பெயரை கோர்ட்டிலே டிக்கிரி பெற்றவனுகத் தாகல் செய்து கொள்ளவேண்டியது.

4: ஏந்தக்கட்சிக்காரனுக்குக் கிராமக்கோர்ட்டினுடைய டிக்கிரி அல்லது உத்திரவு அநியாயமென்று தோன்றுகிறதோ அவன் அந்த டிக்கிரி அல்லது உத்திரவுபிறந்த தேதிமுதல் அறுபதுநாளைக்குள் விண்ணப்பஞ்செய்துக்கொண்டால் அப்போது டிஸ்திரிகட்டு முனிசிப்பானவர்:—

(1) கிராமக் கோர்ட்டார் எல்லைக்கு அகிகொண்டு அதனுலே உண்டானதென்றும், (2) நீதிக்கேடாய்ப் பராபட்சம் பண்ணினதென்கிற காரணம். (3) துர்நடத்தை நடந்து அதனுலேயோ (4) அந்தக்கோர்ட்டுத் தலைவருக்கு சட்டப்படியுள்ள அதிகாரத்திற்கு மிஞ்சின அதிகாரத்தைச் செலுத்தினதினுலோ என்று தெரிந்துக்கொண்டு மேற்கண்ட டிக்கிரி அல்லது உத்திரவை தள்ளிப்போட்டு தனக்கு உசிதமாய்க் காணப்படும் வேறேவிதமாய் டிக்கிரி உத்திரவு பிறப்பிக்கலாம். இப்படிச்செய்யுமுன் அவர் எதிர கட்சிக்காரனுக்கு நோட்டீஸ் கொடுத்துத் தான் பிறகு நடவடிக்கை நடத்தவேண்டும். மேலே சொன்ன விண்ணப்பம் பைசலாகும் வரையில், டிக்கிரி அல்லது உத்திரவு நிறைவேற்றப்படுவதை டிஸ்திரிகட்டு முனிஸீப் பானவர் நிறுத்திவைக்கலாம்.

அறுபது நாளைக்குப்பின் கட்சிக்காரன் மனுவு செய்துகொண்டால் அந்த ஆலியத்திற்குத் தகுந்த காரணத்தைத் தெரிவித்தால் அதை டிஸ்திரிகட்டு முனிஸீப்புக்குத் திருப்திகரமாகத் தோன்றும் பட்சத்தில் அவர் ஏற்றுக்கொண்டு நடவடிக்கை நடத்தலாம்.

மேலே சொன்னபடி இல்லாமல் வேறு சந்தர்ப்பமான ஏவொரு டிக்கிரியும் கிராமக் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டதே முடிவானதாகும்.

கிராம பஞ்சாயத்து.

விவாதம் கேரிடுவதானல் உண்டாகும் செலவைக் குறைக்கும் பொருட்டு ஒவ்வொரு கிராமத்திலும் பெரிய குடித்தனக்காரர்களாயும், கௌரவ முள்ளவர்களாகவும், புத்திசாலிகளாயும், விவகார ஞானமுள்ளவர்களாயுமிருக்கிற பஞ்சாயத்தாராகச் சேர்க்க கிராம முனிஸீப்புகளுக்கு 1816-ம் வருஷத்து 5-வது ரெகுலேஷன் படி அதிகாரமுண்டு. மேற்படி ரெகுலேஷனுடைய முக்கியகருத்து என்னவென்றால் மேற்படி பஞ்சாயத்தார்களைக்கொண்டு அவர்களுடைய அயலாருக்குறிய ஞாயஞ்சொல்லுவிப்பதினால் அந்தக் குடித்தனக்காரர்களை மற்றவர்களுக்கு உபயோகமுள்ளவர்களாகச் செய்யவும் மற்றவர்களால் இவர்களை மதிக்கும்படி செய்யவேண்டுமென்பதுதான்.

1. ரொக்கத்தைபற்றியாவது, மதிப்பைப்பற்றியாவது ஒருவன் தன்னுடை எடுத்துக்கொண்டு போவதற்காக சொத்து எவ்வளவு மதிப்புள்ளதாகவிருந்தாலும் அதைப்பற்றிக்கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களைப் பரிசிலனைசெய்யும்பொருட்டு கிராம முனிசிப்புகள் தங்கள் கிராமத்தில் பஞ்சாயத்தாரை சேர்க்கலாம்.

2. பஞ்சாயத்தைச் சேர்க்கிற விதம்.

பஞ்சாயத்தாரின் தொகை ஐந்துபேருக்குக் குறையக்கூடாது. பதினைருபேருக்கு மேற்படக்கூடாது. எப்போதும் ஒற்றைப் படையாகவே இருக்கவேண்டும். அவர்களுக்குள்ளே ஜாஸ்தித் தொகைப்பட்டவர்களுடைய அபிப்பிராயப்படிக்கே தீர்ப்பு செய்ய வேண்டியது.

பஞ்சாயத்தைச்சேர்ந்த அந்த கிராமத்தில் குடியிருக்கிறவர்களில்யோக்கியர்களாயிருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள் பதினைருபேருக்கு மேற்பட்டிருந்தால் அவர்களை முறைவட்டமாய் நியமிக்க வேண்டும்.

பஞ்சாயத்திற் கிருக்கமாட்டேன் என்று சொல்லப்பட்ட கபருக்கு கிராமமுனிஸீப்புக்கு யுக்தமாகத்தோன்றுகிறபடி ரூபாய் 5 அபராதம் போடலாம்.

ஒருகிராமத்து யோக்கியமான குடித்தனக்காரன் அதற்கு அடுத்த மற்றொரு கிரமத்து பஞ்சாயத்துக்கு மெம்பராகவிருக்கிறே னென்று சம்மதித்தால் அவனை ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது.

வாதிப்பிரதிவாதி ஜாதியிலும் தொழிலிலும் வேறுபட்டிருக்கும் பட்சத்தில் பஞ்சாயத்து சரிப்படுத்தவேண்டியது எப்படியென்றால் அவ்விதசாதியும் தொழிலுடையவர்களை சரிக்குச்சரியாய்க் கூடுமானவரை நியமிக்கவேண்டியது. அப்படிக்குச் சரிவராமற்போனால் இரண்டு சாதிக்குந்தொழிலுக்கும் வேறுபட்டவர்களை ஏற்படுத்தி பஞ்சாயத்துத்தொகையை சரிப்படுத்தவேண்டியது.

கிராமப் பஞ்சாயத்துமெம்பர்களில் யாரையாவது இருகக்ஷிக்காரர்களில் ஒருவன் சம்மதிக்கில்லை என்று சொல்லிக்கொண்டால் கிராமமுனிஸீப்புக்கு சரியென்றுதோன்றும் பட்சத்தில் அந்தமெம்பருக்குப்பதிலாக வேறொருவரை நியமிக்கவேண்டியது.

உபயவாதிகளுந் தனித்தனியே இரண்டுபேயரை ஏற்படுத்த வேண்டுமென்றால் கிராம முனிஸீப்பு மேற்படி கட்சிக்காரர்களிருவரும் சம்மதிக்கிற ஒருவனை ஏற்படுத்தி பஞ்சாயத்துத் தொகையை பூர்த்தி செய்யவேண்டியது. அப்படி அவர்கள் கோராதபட்சத்தில் பஞ்சாயத்து முழுவதும் கிராமமுனிஸீப்புத் தாமே ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது. சாத்தியப்பட்டால் கட்சிக்காரர்கள் இரண்டு பேர்களை ஏற்படுத்திக்கொள்ளும் வழக்கத்தை நிவர்த்திக்க முயற்சி செய்தலவேண்டியது.

3. பஞ்சாயத்தார் கேசுகளை நடத்தும் விதம்.

பஞ்சாயத்தார் விசாரணைகாலத்துமுன்னதாகவே உபய வாதிகளிடத்திலேயும் தங்களால்செய்யப்படும் தீர்ப்புப்படிக்கு நடந்துக் கொள்ளுகிறதாக ஒரு முச்சிலிக்கா எழுதி அவர்கள் கையெழுத்துடன் வாங்கிக்கொள்ளவேண்டியது. அதில் பஞ்சாயத்தார்களின் பெயர்களைக்கண்டெழுதி கிராமமுனிஸீப்பும் கணக்கனும் சாட்சி கையொப்பம் செய்யவேண்டியது. அது ஏற்பட்டதேதியையுங்குறித்திருக்கவேண்டியது.

பஞ்சாயத்தார், கட்சிக்காரர்களுக்குப்பதிலாக வழக்குகளைப் பேசுவதற்கு வைக்கில்களை ஏற்றுக்கொள்ளலாம். வக்கில்களை நியமிக்கும் விஷயத்திற்கு இருகட்சிக்காரர்களும் வக்காலத்துநாமா

எழுதிக்கொடுத்துத்தான் ஏற்படுத்தவேண்டியது. அந்த ஒக்கீல்கள் வழக்கு விசாரணைக்குமுன் அந்த வக்காலத்துநாமாவை பஞ்சாயத்தாருக்குக் காண்பிக்கவேண்டியது.

கட்சிக்காரர்களாவது அல்லது அவர்களுடைய வக்கீல்களாவது வந்தபிறகுதான் பஞ்சாயத்தார் வாதியினிடம் பிரியாதக்கடிதாசியை வாங்கிக்கொள்ளவேண்டியது. அதில் வியாச்சியத்தின் காரணம் வியாச்சியமூலம் பிறந்தகாலம், யாரில் பிரியாதோ அவர்களுடைய பேர் இருப்பிடம், பிரியாதக்காரன் தாவாசெய்கிற சொத்தின் விவரம், அதன் தொன்க அல்லது மதிப்பு இவ்வளவு இதமுதலாகிய அந்த வியாச்சியத்தைக்குறித்த சகல விவரங்களையும் ஒன்று விடாமல் விவரித்து எழுதி யிருக்கவேண்டியது.

மேற்படி பிராதக்கடுதாசி பிரியாதப் பிரதிவாதிக்காவது அல்லது அவனுடைய வக்கீலுக்காவது படித்துக்காட்ட வேண்டியது. அதற்கு உடனே உத்தரம்கொடுக்க அவர்கள் தயாராயிருந்தால் அப்போதைக்கொடுத்துவிடும்படி பஞ்சாயத்தார்கட்டளையிடவேண்டியது. அல்லது ஒருவாரத்துக்குள்ளே குறித்த ஒரு தேதியில் மேற்படி உத்தரத்தைக்கொடுக்கும்படி செய்யவேண்டியது.

அந்த உத்தரவில் பிரதிவாதியால் சொல்லவேண்டிய சகலவிதமான ஆக்ஷேபனைகளையும் ஒன்றுவிடாமல் கண்டு அதுவேமுடிவான தாக எழுதிக்கொடுத்துவிடவேண்டியது. பிறகு, ஏதாவது எழுதிக்கொடுத்தால் அதை பஞ்சாயத்தார் ஒப்புக்கொள்ளக்கூடாது.

பிரதிவாதியினிடமிருந்து மேற்படி உத்தரவை வாங்கிக்கொண்டபின்பு கிராமப்பஞ்சாயத்தார் இரண்டு சுருக்கிக்காரர்களுடைய சாஸனத்தையும் சாட்சிகளுடைய ஜாப்தாவையும் வாங்கிக்கொண்டு உபயவாதிகளுக்கும் சாட்சிகளுக்கும் இருக்கிற சந்தர்ப்பத்தைத் தீர்க்காலோசனை செய்துகொண்டு மேற்சொன்ன வியாச்சியத்தை விசாரணை செய்யும்பொருட்டு ஆடுத்த ஒருதினத்தை குறிப்பிட வேண்டியது.

விசாரணை தினத்தில் ஆஜராக வேண்டிய சாட்சிகளின் ஜாப்தாவையும் விசாரணை தேதியையும் கிராம முனிசிப்புக்கு பஞ்சாயத்தார் அனுப்பவேண்டியது. உடனே கிராம முனிசிப்பாளர் பஞ்சாயத்தாரால் விசாரணைக்கு ஏற்படுத்தப்பட்ட தினத்திலே சாட்சிக்காரர்களை ஆஜராயிருக்கும்படி செய்யவேண்டியது.

4. விசாரணை செய்யும் விதம்.

வியாச்சியத்தின்சொத்து இருபது ரூபாயிக்கு மேற்பட்டதாயிருந்தால் இருகட்சிக்காரர்களுண்டய எதிரில் சாட்சியங்களை தனித்தனியே ஒலையிலாவது காகிதத்திலாவது வாக்குமூலமாய் எழுதிவாங்கி அவர்களுக்குப் படித்துக்காட்டி அதிலே அவர்களைக் கையெழுத்தாவது கைகாட்டாவது போடும்படி செய்யவேண்டியது.

அப்படி வியாஜ்ஜியம் 20-ரூபாயிக்குக் குறைவாயிருந்தால் இந்த விஷயத்தில் கிராமப் பஞ்சாயத்தார், சாட்சிவாக்கு மூலங்களை எழுதியாவது வாங்கலாம் அல்லது வாய்மொழியாகவாவது கேட்கலாம்.

சாட்சிகளைச் சத்தியம் செய்யச்சொல்லவேண்டுமென்று கிராமப்பஞ்சாயத்தாருக்கு அவசியமென்று தோற்றினால் அவர்களை அப்படிசெய்ய பஞ்சாயத்தாருக்கு அதிகாரமுண்டு. விசாரணை தினத்திலே உபயவாதிகளும் அல்லது அவர்களில் ஒருகட்சிக்காரனாவது அல்லது அவர்கள் வக்கீலாவது ஆஜராகவிட்டால் விசாரணை நிறுத்தி வைத்து இதைப்பற்றி கிராமமுன்சீப்புக்கு அறிவிக்கவேண்டியது. உடனே கிராமமுன்சீப்இன்னதேதியில் விசாரணையென்று ஒரு நோடீஸ் எழுதி அந்த ஊரில் அந்த நோடீஸை எல்லாரும் பார்க்கும்படியான ஒரு இடத்தில் ஒட்டிவைக்கவேண்டியது. அந்த நோடீஸில் குறித்த தேதியானது அது முதல் ஐந்து நாளுக்கு உட்பட்டதாயிருக்கக் கூடாது.

மேற்படி நோடீஸ் தினத்தில் வாதியாவது அவனுடைய வக்கீலாவது ஆஜராகாமல் போனால் கிராமப் பஞ்சாயத்தார் அப்படிப்பட்ட வியாச்சியத்தைத் தள்ளிப்போடலாம்.

ஆஜராகாமல் போனதற்குத்தகுந்த காரணம் சொன்னால் திரும்ப அந்த வியாச்சியத்தை அனுசேயிருக்கலாம்.

பிரதிவாதி பிரயாதிக்கு உத்தரவு சொல்லாமல் போனாலும் வியாச்சிய விசாரணைக்காக நோடீஸிலே குறித்த நாளில் ஆஜராகாமல் போனாலும் கிராமப் பஞ்சாயத்தார் வாதியினுடைய சாதனங்களையும் சாட்சிகளையும் பரிசீலனைசெய்து தீர்ப்புப் பண்ணவேண்டியது.

5. தீர்ப்பு செய்யும் விதம்.

இரண்டு கட்சிக்காரர்களையும் கேட்டுக்கொண்டு உண்மைகளையெல்லாம் கன்றாய் விசாரித்து அறிந்த பின்பு கிராமப் பஞ்சாயத்தார் மேற்படி கட்சிக்காரர்களையும் சாட்சிகளையும் அப்புறத்திலே போகச் சொல்லி பிறகு தங்களுக்கு தோன்றும் நியாயப்படிக்கும் உண்மைப் படிக்கும் தீர்ப்பைப் பிறப்பித்து எழுதவேண்டியது.

6. தீர்ப்பு எழுதும் விதம்.

கிராமப் பஞ்சாயத்தாரால் பிறப்பிக்கப்படும் தீர்ப்பிலே:— கட்சிக்காரர்களின் பெயர்—விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் பெயர்—வாதித்தரித்த தஸ்தவேஜுகள் இன்னவை— அந்த தீர்ப்பிலேமுக்கியமான மூலமும் காரணமும் இன்னவைன்று சுருக்கமாக எழுதவேண்டியது. இத்துடன் தீர்க்கப்பட்டது பணமானால் அதனுடைய தொகை அல்லது அசைக்கப்படும் பொருளானில் அதனுடைய மதிப்பைச்சரியாய் இவ்வளவென்று எழுதவேண்டியது. அந்தத் தீர்ப்பிலே தீர்ப்பு செய்த கிராமப்பஞ்சாயத்தார் தங்களுடைய கையெழுத்தாவது கைரேட்டாவது போட்டு தீர்ப்பு தேதியையும் கண்டு எழுதவேண்டியது.

7. தீர்ப்பு கொடுக்கும் விதம்.

தங்களால் செய்யப்படும் தீர்ப்புக்குப் பஞ்சாயத்தார் இரண்டு காப்பிகள் எழுதுவித்து லகோபிபண்ணி முத்திரை போட்டு கிராம முன்சீப்பிடம் சேர்க்கவேண்டியது. மேற்படி முன்சீப் உடனே அல்லது தீர்ப்புநாள் முதல் 3-நாளுக்குள்ளே ஒருநாளில் இரண்டு கட்சிக்காரர்களையும் பஞ்சாயத்தாரையும் கூடும்படி செய்து மேற்படி கட்சிக்காரர்களின் முன்பாக மேற்படி முன்சீப் மேற்படி தீர்ப்பின் முத்திரையை உடைத்து அந்தத் தீர்ப்பிலே ஒவ்வொரு நகலின் புறத்திலே பலான தேதியில் கொடுக்கப்பட்டதென்று கணக்குப்பிள்ளையைக்கொண்டு எழுதுவித்து அதற்குச் சாட்சியாகதானும் கணக்கனும் பஞ்சாயத்தாரில் ஒருவரும் கையெழுத்துப் போட வேண்டியது. போட்டவுடனே இவ்விரண்டு காப்பிகளையும் தன்னெதிரில் மேற்படி கக்ஷிக்காரர்களுக்குத் தனித்தனியே பஞ்சாயத்தார் மூலமாகக்கொடுக்கும்படி செய்யவேண்டியது. மேலும், மேற்படி

தீர்ப்புக்காப்பி கொடுக்கப்படுமுன்னமே அந்தத் தீர்ப்பிலுள்ள மர்மம் இப்படிப்பட்டதென்று முன்சீப்புக்காவது கட்சிக்காரர்களுக்காவது தெரியும்படியாக செய்யக்கூடாது.

கிராம பஞ்சாயத்தார் விசாரணை செய்யும்போது அந்த விவரங்களையெல்லாம் அவர்களில் ஒருவராவது அல்லது கிராமக் கணக்கராவது எழுதிக்கொண்டே வரவேண்டியது. பிரியாதுக்கு மூத்திரைஸ்டாம்பு ஒட்டவேண்டியதில்லை. மேற்படி பிரியாதுக்குச் சொல்லப்பட்ட உத்தரவுக்கும் ஸ்டாபுக்கடிதாசி வேண்டியதில்லை. விவகாரங்களை நடத்தும்பொருட்டு எழுதும் கட்டளைகளுக்கும் மூத்திரைக்கடிதாசி வேண்டியதில்லை.

பஞ்சாயத்தாருக்கு முன் ராஜிநாமா தாக்கல் செய்யக் கட்சிக்காரர்களுக்குச் சுதந்தரமுண்டு, பஞ்சாயத்தைச்சேர்ந்த ஒருவர் இறந்துபோகிறவிஷயத்திலே அது காரணமாக அந்தப் பஞ்சாயத்தானது கலைந்துபோகிறது.

10. தீர்ப்பின் நகலைப் பெற்றுக்கொள்ள, வாதியாவது அல்லது பிரதிவாதியாவது அல்லது அவர்களுடைய வக்கீல்களாவது ஆஜராகாமற் போனாலும், ஒருக்கால் ஆஜராகிக் காப்பியைப்பெற்றுக்கொள்ள நிராகரித்தாலும் அப்படிச் செய்பவனுக்குக் கொடுக்கத் தயார்செய்து வைத்திருக்கிற தீர்ப்பு காப்பியின் பின்பக்கத்தில் கட்சிக்காரன் ஆஜராகாமற்போனதை அல்லது ஆஜராகி வாங்கிக்கொள்ள நிராகரித்ததைத் தேதி சகிதமாய்க் கணக்கனைக் கொண்டு எழுதிவித்து அதில் தான் கையெழுத்துப்போட்டு கணக்கனையும் பஞ்சாயக்காரில் ஒருவனையும் அதில் சாட்சிக்கையெழுத்தும் போடச்செய்யவேண்டியது. அந்தத் தீர்ப்பின் காப்பியை கணக்கன் வசத்தில் ஒப்பிவித்த அதைக் கட்சிக்காரர்கள் கேட்கும்போது கொடுக்கும்படி செய்யவேண்டியது.

11. இந்த 1816வுஷத்து 5-வது சட்டப்படி பஞ்சயத்தாரால் செய்யப்படுந்தீர்ப்புக்கு அப்பீல் கிடையாது. ஆனல் பஞ்சாயத்தார் தங்களால் பிரப்பிக்கப்பட்ட தீர்ப்பில் பட்சபாதம் செய்திருந்தால் கட்சிக்காரன் சரியான மூத்திரைகடுதாசியில் எழுதி ஜில்லா நியாயாதிபதியினிடம் பிரியாது கொண்டுபோகலாம். அப்படிச்செய்யும் பிரியாதை கிராம பஞ்சாயத்தார் செய்த தீர்ப்புக் காப்பியுடன் அனுப்பவேண்டும். இந்த அப்பீலுக்கு வாயிதா தீர்ப்புப் பிறந்த

தினம் முதல் முப்பது நாளைக்குள்ளாக வென்றறியவும் டயம் தப்பி ப்போன பிரியாதை ஜில்லா ஜட்ஜி ஒப்புக்கொள்ள மாட்டார்.

12 பைசல் செய்யப்பட்ட யாதொரு தொகை அல்லது ஒரு வனுடைய வேறே சொத்த சொத்தின் அளவாவது அல்லது அதன் பெருமானமாவது நூறு ரூபாயிக்கு அதிகப்படாமலிருக்கும்போது கிராமப் பஞ்சாயத்தாருடைய டிக்கிரிகளை கிராம முனிசீப்புகள் நிறைவேற்றக்கூடும்.

13 மேலே 11-வதில் சொல்லியிருக்கிறபடி ஜில்லா ஜட்ஜியினிடம் கொடுக்கும் பிரியாதைக் கர்ப்பிணை கட்டிக்காரனுவது கேசில் கொடுக்கவேண்டியது. அல்லது அவனிடத்தில்கிரமமாய் சட்டப்படி அதிகாரம் பெற்ற கோர்ட்டு வக்கீலாவது கொடுக்கவேண்டியது.

1. வஷ்டத்திற்காகக் கொண்டுவரப்படும் ஸகலவிதமான வியாச்சியங்களும் பஞ்சாயத்தார் பிடிக்கக்கூடாதென்று நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன.

2. கோர்ட்டாருடைய டிக்கிரிபின்படி கடையோர்த் தீர்மானிக்கப்பட்ட வியாச்சியத்தின்பிரகாரம் ஸாமான்களைக்குறித்து விசாரணைசெய்ய கிராம பஞ்சாயத்தாருக்கு எவ்வளவும் அதிகாரம் கிடையாது.

3. யாதாமொருவனுலே உண்டான சரீரதண்பத்தைக்குறித்த நஷ்ட விஷயமாகக் கொண்டுவரப்படும் வியாச்சியங்களைக் கிராம முனிஸீப்புத்தான் அங்கீகரிக்கவும் பஞ்சாயத்தாரிடத்திற்கு விசாரணைக்கு அனுப்பவுங்கூடாது.

4. ஒருவனுக்கு கேரில் செய்யப்பட்ட நிங்குகளின் நிமித்தம் நஷ்டம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்றுவது ஒருவனுக்கு கேரில் சேரவேண்டிய எவ்வகையான நஷ்டம் வரும்பொருட்டாவது கொண்டுவரப்பட்ட வியாச்சியங்களை சட்டப்படி கிராம பஞ்சாயத்தாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்புவது கூடாதென்பது கிராம முனிஸீப்புக்கள் கவனிக்கவேண்டியதாயிருக்கின்றது.

5. பஞ்சாயத்து வியாஜ்ஜியங்களில் எவரொருவன் சாக்ஷி கூறவேண்டியது அவசியமேர, அப்படிப்பட்டவனை பஞ்சாயத்தில் சேர்க்கக்கூடாது. மேற்பட்ட சர்க்கார் உத்தியோகஸ்தன் பஞ்சாயத்தாரில் ஒரு மெம்பராக இருக்கும்படி நேரிட்டால் அவரு

க்குப் பஞ்சாயத்துக்கோர்ட்டுக்குவர எந்ததினம் சௌகர்யமாக விருக்குமோ அதைத் தெரிவிக்கும்படி அவருடைய மேலான அதிகாரிக்கு எழுதி தெரிந்தக்கொண்டு அந்த தினத்திலே வரும்படி பஞ்சாயத்தார் எல்லோருக்கும் சம்மன் அனுப்பவேண்டியது.

6. ஓர் பஞ்சாயத்தில் சேர்ந்த ஒருவர் அல்லது அதிகமெம்பர்கள் தீர்ப்பு சொல்லுவதற்குமுன் இறந்தபோனால், அந்தப் பஞ்சாயத்தக்கலைந்தபோனதாக எண்ணவேண்டும். மேற்படிகட்சிக்காரர்களால் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் முச்சிலிக்காவும் ஆக்ட்டுப்படி ரத்தாகிவிட்டதாக எண்ணவேண்டும். புதுப்பஞ்சாயத்தைச் சேர்க்கும்படி கட்சிக்காரர்கள் கேட்டுக்கொண்டால் பழைய பஞ்சாயத்தைச் சேர்ந்த உயிருடனிருக்கிற மற்றவர்களோ அல்லது பஞ்சாயத்தக்குச் சேர்த்தக்கொள்ளலாம். முன் பஞ்சாயத்தார் முன்பாக கிரமமாய் வாக்குமூலங்கள் வாங்கி கையெழுத்து போட்டிருப்பவைகளோ நூதன பஞ்சாயத்தார் தங்கள் விசாரணைக்கு உபயோகப்படுத்திவிடலாம்.

7. வேறு யாதொரு நீதி விசாரணை கர்த்தர்களுக்குமுன் எப்படியோ அப்படியே பஞ்சாயத்தாருக்கு முன்னும் யாதொரு வியாசகியத்தில் வியாச்சிய நாமாவை ஏற்றிக்கொள்ளல்லாம். இரு கட்சிக்காரர்களும் பஞ்சாயத்தாருடைய தீர்மானப்படி நடப்பதாய் ஒப்புக்கொள்வார்களானால் அதை பஞ்சாயத்துருடைய தீர்மானத்துக்கு அனுப்பலாகும். இரண்டு கட்சிக்காரர்களும் சம்மதித்தால் முன்னெழுப்புக்கொண்டதை ரத்து செய்துவிடலாம். அப்போது அதை அனுசரித்து முன்னெழுதிக்கொடுத்த முச்சிலிக்காவும் ரத்தாய்விடும்.

8. பஞ்சாயத்தார் அல்லது மத்தியஸ்தர்கள் ஆகிய இவர்கள் லஞ்சம் வாங்கினார்கள் அல்லது தராக்கிரதமாய்ப் பிரவர்த்தித்தார்களென்கிற காரணத்தைக்கொண்டு அவர்களால் பிரப்பிக்கப்பட்ட தீர்ப்பை தள்ளிப்போடவேண்டுமென்று மனுவு பண்ணிக்கொண்டால் அந்தக் குற்றத்தைப் பலானதென்று தெளிவாய் விவரித்துக் காட்டியிருக்க வேண்டும்.

9. பஞ்சாயதாரால் பிறப்பிக்கப்பட்ட தீர்மானத்திற்கு அப்பீலில்லை. முந்தின பாராவில் சொன்னப்படி அவர்களுடைய நடவடிக்கையின் பேரில் பாரபட்சமாய் விசாரணை செய்தவற்காக சர்டி

டிகேட் ஜட்ஜியிடத்திலாவது அல்லது பிரின்ஸ்பல் ஜமீனிடத்திலா வது அப்பீல் செய்துக்கொள்ளலாம். அந்த ஸந்நதியைக்குறித்து லிவில் நியாயாதிபதிக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டியது.

10. மேலே சொல்லியிருக்கிற பிரகாரம் கட்சிக்காரர்களிடமி ருந்து முச்சிலிக்கா உடன்படிக்கையை பஞ்சாயத்தார் முன்னமே வாங்கிக்கொள்ளாமல் விசாரணைசெய்து தீர்மானஞ்செய்தால் அந்த த்தீர்மான பிரயோசனமற்றதாய்விடும்.

பஞ்சாயத்தார் டிக்கிரியை நிறைவேற்றும் விதம்.

1. டிக்கிரிபெற்ற கட்சிக்காரர்கள் மேற்படி டிக்கிரியின் காப் பியை கிராம முனிசிப்பினிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் அல்லது கோராய் டிஸ்திரிகட்டு முனிசிப்புக் கோர்ட்டிலிருந்தாவது பெற்றுக்கொள்ளலாம். டிக்கிரிகாபி பெறுவதற்காக ம்னுவு ஒன்று எழுதிவேண்டிய ஸ்டாம்பு பேப்பர்களும் கிராம முனிசிப்பிடத்தில் அந்த மனுவைக்கொடுக்க வேண்டியது. அவர் அந்தக்கேசு சம்பந் தப்பட்டவரையில் டிக்கிரியையும் கட்சிக்காரனால் தன்னிடம் கொ டுக்கப்பட்ட மனுவையும்ஸ்டாம்பு பெயர்களையும் தம்முடைய ரிபோ ர்ட்டு சகிதம் உடனே டிஸ்திரிகட்டு முனிசிப்புக்கு அனுப்பிவிடுவார் மேற்படி டிக்கிரியின் காப்பி டிஸ்திரிகட்டு முனிசிப்புக் கோர்ட்டா ரால் எழுதப்பட்டு மேற்படி கட்சிக்காரர்களுக்கு மேற்படி கிராம முனிசிப்பு மூலமாயக் கொடுப்பிக்கும்படி செய்வார். அல்லது கட் சிக்காரனே கேரில் போய்க்காத்திருந்து டிஸ்திரிகட்டு முனிசிப்பி னிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

2. டிக்கிரி காப்பியைப்பெற்றுக்கொண்டஉடனே கட்சிக்கா ரனானவன் மேற்படி டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக டிக்கிரி காப் பிசகிதம் கிராம முனிவீப்பினிடம் மனுவு செய்துக்கொள்ளவேண் டியது. இதேவிதமாய் டிஸ்திரிகட்டு முனிவீப்பினிடத்தில் மனு செய்துக்கொண்டு அவராலே நிறைவேற்றிக்கொள்ளலாம். ஆனால், டிஸ்திரிகட்டு முனிவீப்பிடத்தில் கோர்ட்டுக்கட்டணம் ஸ்டாம்புச் செலவுகள் செலுத்திவிடவேண்டும். கிராம முனிவீப்பினிடத்திலோ அந்தச்செலவு இல்லை.

3. டிக்கிரியை நிறைவேற்றும்படி கொடுக்கின்ற மனுக்களில் டிக்கிரி பிறந்ததேதிக்குப்பின்னிட்டு கட்சிக்காரர்களுக்குள்ளே ஏதா

வது ஒருவாகம் சேர்ந்திருந்தால் அதின் விவரத்தைக்காணவேண்டியது. அதுபோக மீதியுள்ள பாக்கிக்குமாத்திரமே நிறைவேற்ற மனுவு கொடுக்கவேண்டும்.

4. அம்புனக்கனி கிராம முன்சீப்பானவர் வரவுபற்றுக கொள்ளவேண்டும். பிறகு டிக்கிரிபின்படிக்கு பாக்கியாகும் தொகைக்கு கட்சிக்காரனுக்குச் சொந்தமான ஜங்கம சொத்துகளை ஜப்திசெய்ய வேண்டியது. பதினைந்து காளைய அறிக்கை கோட்டகின் பேரில் ஜப்திசெய்யப் பட்டிருக்கும் சொத்துக்களையெல்லாம் ஏலம் போட வசிகா குறிப்பிடவேண்டியது. குறிப்பிட்டதேதியில் ஏலங்கூறி உயர்ந்தி தொகைக்கு கேழ்க்கிறவர்களுக்கு விக்கியஞ்செய்ய வேண்டியது. அதிலிருந்து வரப்பட்டதொகையை டிக்கிரிபெற்ற வனுக்குச்சேரவேண்டியதொகையை அவனுக்குச் செலுத்திவிடவேண்டியது. பிறகு ஏதாவது மிஞ்சுந்தொகையை ஸர்க்கார் கஜானாவில் செலுத்திவிட்டுச் செலான்பெற்றுக்கொள்ளவேண்டியது. பிறகு சொத்துக்காரன் மனுவு கொடுத்துத் தனக்குச்சேரவேண்டிய அப்பணத்தை வாப்ஸ் பெறவேண்டியவனாயிருக்கிறான்.

கிரிமினல் புரோசீஜர் உத்திரவுகள்.

ஒவ்வொரு கிராமப்பெரியதனக்காரனும் கிராமக்காவற்காரனும், கிராமப் போலீஸ்ஸு உத்தியோகஸ்தனும் முதலானவர்கள் இன்னம் இதைப்போன்ற சர்க்கார் சமபந்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவனும் அடியிற் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களைக்குறித்து சமீபத்திலுள்ள மாஜிஸ்டிரேட்டுக்காவது அல்லது போலீஸ்ஸ்டேஷன் அவுஸ் ஆபீஸருக்காவது இவ்விருவர்களில் எவர் வெகுசமீபத்திலிருக்கிறாரோ அவருக்கு உடனே தெரிவிக்கவேண்டியது.

1. தான் எதற்குப் பெரியதனக்காரனை அல்லது கிராமப் போலீஸ்ஸு தலைவனை அந்த கிராமத்தில், திருட்டு சொத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவன் அல்லது விற்கிறவனென்று பேர்போனவன் எவனுவது ஸ்திரமாய் வாசஞ்செய்தாலும் அல்லது சொல்பகாலத்திற்கு வாசஞ்செய்தாலும் அதைப்பற்றி—

2. திருடனென்றாவது, கொள்ளையடிக்கிறவனென்றாவது, அல்லது தப்பித்துக்கொண்டு ஓடிவிட்ட கைதியென்றாவது பிரசித்தஞ்

செய்யப்பட்ட குற்றவாளியென்றுவது, எவனுது ஒருவன் அந்தக் கிராமத்திற்குள் யாதோரிடத்திற்கு வந்திருந்ததாக அல்லது அந்தக் கிராமத்தின் வழியாய்ச் சென்றிருப்பதாகத் தான் அறிந்திருந்தாலும் அல்லது நியாயமாய் அனுமானித்தாலும் அந்த விஷயத்தைக் குறித்து.—

3. அந்த கிராமத்திலாவது அல்லது அதற்குச் சமீபத்திலாவது ஆஜர் ஜாமீன் வாங்கத்தகாத குற்றம் அல்லது இந்தியன் பினல் கோர்ட்டு பிரிவுகளின்படி தண்டிக்கத்தக்கதான குற்றம் செய்யப்பட்டது அல்லது செய்ய எண்ணுவது என்பதைப்பற்றியும்.

4. அவ்விடத்திலாவது அல்லது அதற்குச் சமீபத்திலாவது, சடுதி மாணம் அல்லது அனுமானிப்பதற்கு முகாந்தரமுள்ள பாணம் நேரிடுவதைப்பற்றி,

5. எவனுவது தற்கொலை செய்துக் கொண்டதாகவாவது அதைப்பற்றி,

6. வேறொருவனுலாவது, யாதாமொரு பிராணியினுலாவது, யந்திரத்தினுலாவது அல்லது யாதாமொரு இடையூறினுலாவது மரணமடைந்ததாகவாவது அதைப்பற்றி,

7. வேறொருவன் குற்றஞ்செய்திருக்கிறனென்று நியாயமாய் அனுமானிப்பதற்கு இடமிருக்கிற சங்கதிகளில் இறந்துபோனதாக கேள்விப்படும்போது போலீஸ் ஸ்டேஷன் தலைமை உத்தியோகஸ்தன் ஒவ்வொருவனும், பிரேத விசாரணை செய்ய அதிகாரம் பெற்றவராய்ச் சமீபத்திலுள்ள மாஜிஸ்டிரேட்டிற்கு இந்த சங்கதியை உடனே தெரியப்படுத்தவேண்டும். அந்த உத்தியோகஸ்தர் பிரேதமிருக்கப்பட்ட இடத்திற்குப்போய் அந்த விடத்திலே அக்கமபக்கத்திலிருக்கிற பெருந்தன்மையுள்ள இரண்டு அல்லது பல குடித்தனக்காரர்களைக்கூட வைத்துக்கொண்டு முதல் விசாரணை செய்து அந்தப் பிரேதத்தின் பேரில் ஏதாவது காயங்கள் முதலிய குறிகள் காணப்பட்டால் அவைகளையும் அக்குறிகள், காயங்கள் இன்னகாரணத்தினுல் உண்டாயிருக்கவேண்டுமென்று தமக்குத் தோற்றுகிற விவரத்தையும், மரணம் உண்டானதற்குத் தமக்குத் தென்படுகாரணம் பலானதென்று ரிபோர்ட்டு எழுதவேண்டியது.

8. அப்படி எழுதப்படும் ரிபோர்ட்டில் பேற்படி போலீஸ் உத்தியோகஸ்தன் கையொப்பஞ் செய்யவேண்டியது. தவிரவும் கூடவிருந்த மற்றவர்கள் அல்லது அவர்களுக்குள்ளே எத்தனைபேர்கள் இந்த விஷயத்தைக்குறித்து ஒரே அபிப்பிராயப்படுகிறார்களோ அவர்களும் கையெழுத்துப்போடவேண்டியது. உடனே அதைச் சமீபத்திலுள்ள மாஜிஸ்ரேட்டுக்காவது அல்லது ஸப்டிவிஷன் மாஜிஸ்டிரேட்டுக்காவது அனுப்பிவிடவேண்டியது.

கிராம முன்சீப்புக்குச் சம்மந்தப்பட்ட உத்தரவுகள்.

(1) மனிதர்கள் வாசஞ்செய்யும் கட்டடத்துக்குள்ளும் சாமான்கள் வைக்கப்படும் கிடங்குக்குள்ளும் கூடாரத்திலும் அல்லது கப்பல்களில் செய்யப்படும் திருட்டிலும் வேலைக்காரனல் செய்யப்படும் திருட்டிலும், திருட்டுசொத்தானது விலை அல்லது மதிப்பில் ஒரு ரூபாய்க்கு அதிகமாகாதிருந்தால் அப்படிப்பட்ட கேசுகளை கிராம மெஜிஸ்ட்ரேட் பிடிக்கக்கூடாது.

(2) திருட்டுச்சொத்தை விலைக்குவாங்கினதாக மாத்திரம்கண் டுபிரயாதுகொடுக்கப்பட்டால் அதை கிராம மெஜிஸ்ட்ரேட்டுகள் பைசல் செய்யக்கூடாது.

(3) செய்த குற்றங்களை கிராம மாஜிஸ்ட்ரேட்டுகளாலேயே பைசல் ஆகி வரும்படியாக எல்லா சப்மெஜிஸ்ட்ரேட்டுகளும் தங்களால் கூடியவரையிலும் முயற்சிசெய்யவேண்டியது. கிராம முன்சீப்புகள் கிருமினல் புரோஸீஜர்கோடின் பிரகாரம் கிராம மாஜிஸ்ட்ரேட் என்று எண்ணப்படவேண்டியது. ஆகையினாலே எல்லாக் கிராமங்களிலும் ஒரு ரூபாய்க்கு அதிகப்படாத ஏதாவது சொத்தையாகிலும் திருடினால் அந்தத் திருட்டானது பலமான குற்றத்தில் சேராததாகவும் பழய திருடனால் செய்யப்பட்டதாகவும் இருக்கிறபட்சத்தில் அப்படிப்பட்ட சொற்ப குற்றத்தைக்குறித்து கிராம பெரியதனக்காரர்கள் (கிராம மாஜிஸ்ட்ரேட்டுகள்) சட்டப்படி தண்டனை பண்ணலாம். மேற்படி கேசுகளில் ரூஜு இல்லாவிட்டால் போலீசார் ரிபர் சார்ஜஷீட் கிராம மெஜிஸ்ட்ரேட்டினிடத்திற்கு அனுப்பலாம். மேலே தண்டனைசெய்யப்பட்ட கேசுகளை யெல்லாம் தாலுக்காபோலீசாருக்கு காலண்டர் மூலமாய்த் தெரிவிக்கவேண்டியது. கிராம மெஜிஸ்ட்ரேட்டுகள் தங்களைச் சார்ந்த

கைதிகளைப் போலீசாருக்குச் சம்பந்தமில்லாமல் சட்டப்படி தாங்களே காவலில் வைக்கவும் விடுதலைசெய்யவும் ஏற்பாடு செய்துகொள்ளவேண்டியது. அப்படிச் செய்யாமல் சில மணிநேரத்துக்குக்காவல் வைக்கும்பொருட்டு சிலகிராம மாஜிஸ்ட்ரேட்டுகள் தீர்ப்புபெற்ற கைதிகளை சமீபடேஷனுக்கு வெகுதூரம் அனுப்புகிறார்கள் அவர்கள் அப்படிச்செய்யக்கூடாது. ஏனென்றால், அவர்கள் அவ்விடம் வருவதற்கு அவர்கள் தீர்ப்புபெற்ற காலமானது சென்றுபோகின்றது. மேலும் அப்படிப்பட்ட கைதிகளை காவலில்வைக்க போலீசார் நியாயமாய் ஒத்துக்கொள்ளக்கூடாது.

(4) கிராம மாஜிஸ்ட்ரேட்டுகளால் தீர்மானிக்கப்படத்தக்க கேசுகளைப்பற்றி அவர் முன்பாகவே பிரயாதுகள் கொண்டுவரப்படவேண்டும். அப்படிக்கொண்டுவரப்படும் பிரயாதுகளில் சகல சங்கதிகளையும் சுருக்கமாய் அடக்கியெழுதி கையொப்பமிட்டு அந்த அதிகாரியிடத்தில் கொடுக்கவேண்டும். திருட்டுக்கேசானால் வாதி பிரயாதைக்கேட்டு அதைத்தாம் எழுதிக்கொண்டு அதில் கையொப்பமிடச்செய்யவேண்டும். அவர் அதை வாங்கிக்கொண்ட பிறகு அதைப் பிரயாதிக்குப் படித்துக்காட்டி இது சரிதானாவென்று வாய்மொழியாகக்கேட்டு அதற்கு அவன்சொல்லும் ஜவாப்பைப் பதிக்துகொள்வதோடுகூட பின்னும் பிரயாதில் ஏதாவது சந்தேகம் தோன்றினால் அந்தச் சந்தேகத்தை நிவர்த்திசெய்யும்பொருட்டு அந்த சந்தேகங்களை வாய்மொழியாய்க்கேட்டு, அவனால் சொல்லப்படும் மறுமொழிகளை அதிலே எழுதிக்கொண்டு அதில் வருஷம், மாஸம், தேதி முதலானவைபோட்டு அவனைக் கையெழுத்துச் செய்த பின்பு தன்முன்பாக வாங்கப்பட்டது என்று எழுதி கிராம மாஜிஸ்ட்ரேட் அதிலே கையெழுத்துப் பண்ணவேண்டும்.

(5) கிராம மாஜிஸ்ட்ரேட்டுகள் தங்களுடைய அதிகார எல்லைக்குள்பட்ட இடத்தில் இருக்கிறசாட்சிகளை தங்களுக்குமுன்பாக ஆஜராகும்படி வாய்மொழியாகவாவது அல்லது எழுத்துமூலமாகவாவது சம்மன் பிறப்பிக்க அவர்களுக்கு அதிகாரம் உண்டு. தங்கள் அதிகார எல்லைக்கு அப்பால் இருக்கிற சாட்சிகளுக்கு சம்மன் பிறப்பிக்க அவர்களுக்கு அதிகாரம் இருப்பதாகத் தோன்றவில்லை வில்லேஜ் முன்சீப்கோர்ட்டுகளில் பிரத்தியேகமாய் சிப்பந்திகளை நேமிக்கக்கூடாதென்றும், மேற்படி வில்லேஜ் முன்சீப் மெஜிஸ்ட்ரேட்டுகளில் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகள் சாதாரணமாய் அந்த கிராமத்

தின் சேவகன் அல்லது தலையாரியினுல் சார்க செய்யப்படவேண்டு மென்று தோர்ட்டுபீஸ் ஆக்ட்டின்படி ஹைகோர்ட்டார் அவர்களால் ஏறபடுத்தியிருக்கும் நிபந்தனைகளில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

(6) யாதொரு கிராம மெஜிஸ்ட்ரேட்டுக்கு ஒரு குற்றத்தைப் பற்றி விசாரிக்க அவருக்கு அதிகாரம் இருக்கிறதோ அந்தக் குற்றத்தைப்பற்றி அந்தக் கிராமமெஜிஸ்ட்ரேட் வாய்மொழியாய் உத்திரவு செய்தால் மேற்படி உத்திரவின்படி நடந்துக்கொள்ளாத விஷயத்திற்காக அவர் பினல்கோர்ட்டு பிரகாரம் சிட்சை விதிக்கலாம்.

(7) யாதொரு கிராம மாஜிஸ்ட்ரேட்டினுல் யாதொரு குற்றத்திற்காக யாதொருவனை காவலில் வைக்கும்படியாகவும் அல்லது தொழுவில் மாட்டிவைக்கும்படியாக தண்டனைவிதிக்கப்பட்டிருந்தால் அந்த மாஜிஸ்ட்ரேட் அந்தத்தண்டனையை நிறைவேற்றும்படி குற்றவாளியை கிராம காவற்காரர் வசம் ஒப்புவித்து அந்தத்தண்டனையின் விவரத்தை மேற்படி குற்றவாளிக்கும் மேற்படி காவற்காரனுக்கும் தெரியப்படுத்தவேண்டியது. தவிர அப்படிப்பட்ட தண்டனைத் தீர்ப்புகளை நிறைவேற்ற ஆரம்பித்தது முதல் அந்தத்தீர்ப்புக்குள்ள காலம் முடியும் வரையில் செல்லவேண்டியகாழிகை அல்லது மணி நேரம் இவ்வளவென்று ஒவ்வொரு விஷயத்திலும் ஒவ்வொரு குற்றவாளியையும்பற்றி விவரமாய் மேற்படி காவற்காரனுக்குச் செவ்வையாய்த் தெரியப்படுத்தவேண்டும்.

8. தண்டனை செய்யப்பட்ட மெம்பர்களைக் காவலில் வைக்கும்போதும் அல்லது தொழுக்கட்டையில் மாட்டிவைக்கும்போதும் அவர்களிடத்தில் குருக்கத்தி, பிச்சுவா முதலிய ஆயுதங்கள் ஒன்றுமில்லாமல் சோதித்துப் பார்த்துக்கொண்டு காவலில் வைக்கவேண்டும். தண்டனையடைந்த யாதொரு குற்றவாளியானவன் கிராமசாவல் உட்படவேண்டிய காவலுக்கு அவனை உட்படுத்தும்போது அவன் அதற்கு உட்படுகிறதில்லை என்று கிராகரித்தால் அப்படிப்பட்ட குற்றவாளியை இண்டியன் பினல்கோர்ட்டு 224-வது பிரிவின்படி தண்டனைக்குள்ளாக்கும் பொருட்டு அந்த விவரத்தை மேற்படி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் போலீசாருக்கும் சப் மாஜிஸ்ட்ரேட்டுக்கும் தெரிவிக்கக் கடவர். காவலிலிருந்து எந்தவிதத் திலாவது தப்பித்துக்கொண்டு ஓடிப்போய் விட்டாலும் இந்த மாதிரியாகவே நடவடிக்கை நடத்தவேண்டியது.

(9) எவனுவது ஒரு குற்றவாளி போலீசார்வசத்தில் இருக்கும்போது ஒருகிராம பெரியதனக்காரர் முன் தான் குற்றஞ்செய்ததாக அவன் ஒப்புக்கொண்டானுகில் அவன் ஒப்புக்கொண்டதை சாட்சி விசாரணையில் ஒப்புக்கொள்ளப்படும்.

கிராம மாஜிஸ்டிரேட்டின் கடமைகள்.

கிராமத்தலையாரி ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்த தலையாரிதான் கிராம போலீஸ் சேவகன். கிராம மாஜிஸ்டிரேடினுல் நடத்தப்படும் போலீஸு சம்பந்தமான சகல விஷயங்களிலும் இவனதான அத்தலேலையைச் செய்பவனுயிருக்கிருன். இவன் அடிக்கடி ஊரைச்சுற்றிப் பார்க்கவேண்டும். அங்கங்கே நடக்கும் குற்றங்களையும் குற்றம் நடப்பதற்குக் காரணமாயிருப்பவைகளையும் கண்டுபிடிப்பதுமல்லாமல் அப்போதைக்கப் போது கிராம மாஜிஸ்டிரேட்டிற்குச் சொல்லவேண்டும்.

சந்தேகத்திற்கு இடமான அன்னியர்கள் கிராமத்திற்குள் எங்கேயாவது வந்திருப்பார்களானுல் அவர்களை உடனே கிராமமாஜிஸ்டிரேட்டினிடம் ஆஜர்படுத்தவேண்டும். மேற்படி கிராம மாஜிஸ்ட்ரேட்டானவர் அன்னியர்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் ரிஜிஸ்தரில் அவர்களுடைய விவரங்களைப்பதிந்துக்கொண்டு, அவர்கள் எந்த ஊருக்குப்போகவேண்டுமென்று இஷ்டப்படுகிறார்களோ அந்த ஊருக்கு அனுப்பிவிடவேண்டும். அனுப்பும்விதம் எப்படியென்றுல் அவன்போகும் வழியிலுள்ள அதிக சமீபமான முதல்கிராமம் வரைக்கும் தம்முடைய தலையாரியை அவர்களுடன் அனுப்பி யதாஸ்தமூலமாய் அந்த கிராம முனிஸீப்புக்குத் தெரியப்படுத்தவும். அந்த கிராம முனிஸீப்பு அவருக்கு அடுத்த கிராம முனிசிப்புக்கும் இப்படியே அவர்கள்போகும் வழியிலுள்ள ஒவ்வொரு கிராம மாஜிஸ்டிரேட்டும் நடத்திக்கொள்ளவேண்டியது முறைமையாகும்.

அன்னியர்களைத் தம்முடைய வசத்தில் ஒப்பிவித்து அல்லது தமக்குமுன்னே ஆஜர் படுத்தினபோது அவர்களில் ஏதாவது திருட்டுச்சொத்துக்கள் இருக்கலாமென்று சந்தேகம் உண்டானுல், கிராம மாஜிஸ்டிரேட்டுகள் அதற்கு ஆதாரமானவைகளைக் கண்டு ஒரு ரிபோர்ட்டு எழுதி போலீஸு ஸ்டேஷன் ஆபீஸருக்குத் தெரியப்படுத்தவேண்டும். அந்த அன்னியர்களை கிராம போலீஸு சேவக

ஞன தலையாரியின் பக்தோபஸ்தின்மேல் போலீஸ் ஸ்டேஷனுபீச
ரிடமி அனுப்பிவிடவேண்டியது.

தம்முடைய கிராம எல்லைக்குள்ளே, கொலை, தற்கொலை அல்
லது தர்மரண்ம் கொள்ளை, திருட்டுகள் முதலியவை நேரிட்டதா
ஞல் அவைகள் தம்முடைய காதுக்கு எட்டின உடனே அது விஷ
யத்தைப்பற்றி சப்மாஜிஸ்டிரேட்டிற்கும், போலீஸ்ஸ்டேஷனு
லீஸருக்கும் ரிபோர்ட்டுபண்ணவேண்டும். கொலை அல்லது தர்
மரணவிஷயத்தில் போலீஸார்வந்து பிரேதவிசாரணைசெய்து மாதர்
நாமா தயார்செய்து முடித்து பிரேதத்தை எடுத்து அடக்கஞ்செய்ய
உத்திரவு கொடுத்தபிறகுதான் பிணத்தை இருந்தவிடம் விட்டுப்பெ
யர்க்க உத்திரவுசெய்யவேண்டியது. தர்மரணம் என்றால் கிணத்
தில்விழுந்திறப்பது, பாம்புகடித்திறப்பது, தூக்குப்போட்டுக்கொண்
டிறப்பது.

சண்டை, மோசம் இவைபோன்றவைகளைப்பற்றி தம்மிடத்தில்
பிரியாதுசெய்துக்கொண்டால் முன்னே சொல்லியிருக்கிறபிரகாரம்
சப்மாஜிஸ்டிரேட்டாருக்கும் போலீஸ் ஸ்டேஷன் அவஸ் ஆபீஸ
ருக்கும் ரிபோர்ட்டு செய்யவேண்டியது. சண்டை அல்ப கேஸானுல்
தாமே விசாரணைசெய்து முடிவுசெய்துவிடலாம். பிரியாதி (பிரியம்
தகொடுத்தவன்) மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பிரியாதசெய்துக்
கொள்வதாய்த் தெரிவித்துக்கொண்டால், கிராம மாஜிஸ்டிரேட்டா
னவர் அவன் இஷ்டப்படிக்கு அப்படியே செய்துக்கொள்ளுப்படி-
விட்டுவிடவேண்டும்.

ஒருவருக்கொருவர் திட்டிக்கொள்ளுதல், உபாயமாய்த்தாக்கு
தல் கட்டடத்திற்கு வெளியே ஒரு ரூபாய்க்கு அதிகமான பெறுமா
ன சமான்களைத் திருடுதல் முதலிய இவைபோன்ற உபாய சூற்றங்
களை கிராம மாஜிஸ்டிரேட் விசாரித்து முடிவுசெய்யவேண்டியது.
ஒரு வீட்டின் தெருத்திண்ணையிலும் அல்லது இரைப்பின்மேல் இ
ருக்கும் சொத்துகளைத் திருடினுல் அது கட்டடத்துள்ளிருக்குந்
திருடு ஆகமாட்டாது. அதேவீட்டிற்கு சுத்துகாம்பவுண்ட் சுவர்
போட்டிருந்து கதவு அடைக்கப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட வீட்
டுத் தெருத்திண்ணைக் கட்டடத்தை உள்ளே இருந்ததாக ஆகும். இப்
படியே சுற்றுக்காம்பவுண்சுவர் எழுப்பப்பட்டு கதவுபோடப்பட்டி

ருக்கும் வாழைத்தோட்டத்திற்குள் திருடினால் அதவும், கட்டடத் திற்குள் திருடினதாகவே எண்ணவேண்டியது.

ரிபோர்ட்டு செய்யவேண்டிய விஷயங்கள்.

ஒருவனை ஒருவன் பலமாய்த்தாக்கினாலும் மோசம் செய்தாலும், நம்பிக்கைத்துரோகம், கட்டடத்திற்குள் திருடும், வழிப்பறிக் கொள்ளைகளும், ஒரு ரூபாயிக்கு மேற்பட்ட சொற்துகளை அபகரித்தல் அல்லது திருடுதலும், அக்கிரமமாய்க் கூட்டம் கூடுதலும், மோசஞ்செய்ய அல்லது விஷமிட்டுக்கொல்லப்பட்டாலும், திருட்டுகளையங்களைச்செய்தலும், சர்க்கார் லைஸன்ஸ் உத்தரவில்லாமல் சாராயம் கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களும் வெடிமருந்து முதலிய சாமான் களை விற்று முதல்செய்தாலும் அல்லது அவைகளை உண்டாக்குதலும், உப்புக்காய்ச்சல் ஆகிய இத்தன்மைபோன்ற கேசுகளை கிராமமாஜிஸ்ட்ரேட்தாம் நேரில் விசாரியாமல் தமக்கு சங்கதி தெரிந்தவுடனே குற்றவாளிகளைக் கண்டுபிடித்து ரிபோர்ட் சகிதம் போலீசாரிடத்திற்கு அனுப்பிவிட வேண்டும். அப்படி அனுப்பிவிட்டு சும்மாயிருத்தல் கூடாது. அதற்குவேண்டிய சாதகங்களையும் செய்துவரவேண்டியது. இந்த ரிபோர்ட்டு சப்மாஜிஸ்ட்ரேட்க்கு அனுப்பப்படவேண்டும்.

கட்சிக்காரர்கள் பிரியாதி என்றும் எதிரி என்றும் இருவகைப்படும். பிரியாதி என்றால் அன்னியனால் தனக்குச் செய்யப்பட்ட குற்றத்தை நியாயஸ்தலத்தில் முதல்முதலில் சொல்லிக்கொள்ளுகிறவன் எதிரி என்றால் குற்றம் சாட்டப்பட்டவன்.

கிராம மாஜிஸ்ட்ரேட்டினிடத்தில் கொடுக்கப்படும் ஒவ்வொரு பிரியாதியும் வாய்மொழியாகவேனும் செய்யலாம் அல்லது எழுத்து மூலமாகவேனும் செய்துக்கொள்ளலாம்.

கிராம மாஜிஸ்ட்ரேட்டானவர் பிரியாதைத்தாம் பெற்றுக்கொண்டவுடனே அதனவிசாரணை செய்வதற்காக ஒருதினத்தைக் குறிப்பிட்டு எதிரிகளுக்கும் சாட்சிகளுக்கும் சம்மன் அனுப்பவேண்டியது அப்படி அனுப்பும் சம்மனானது வாய்மொழியாகவும் அனுப்பப்படலாம் அல்லது எழுத்து மூலமாயும் அனுப்பப்படலாம் விசாரணைத்தினத்தில் குற்றங்களை விசாரணை செய்யத்தொடங்குமுன் எதிரிகளைத்தவிர, மற்றசாட்சிகளையும், மற்றவர்களையும் பிரமாணம் செய்விக்

கவேண்டும். பிரியாதியும் சாட்சிகளும் விசாரிக்கப்பட்டவுடனே எதிரியானவன் குற்றவாளியென்று ருசு ஆனால் எதிரியின்பேரில் எற்பட்ட குற்றம் ருசுவாய் இருக்கிறதற்கு அவன் என்ன சமாதானம் சொல்லுகிறான் என்று அவனைக்கேட்கவேண்டும். அவன் தன் குற்றவாளி யல்லவென்றும், அதைச் சாட்சிகள் மூலமாய் ருசுபடுத்துகிறதாக சொல்லும்பட்சத்தில் வேறுவாயிதாபோட்டு எதிரி கோரிக்கொள்ளும் சாட்சிகளை வரவழைத்து விசாரிக்கவேண்டும்.

இரண்டு கட்சிக்காரர்களையும் சாட்சிகளையும் கிராம மாஜிஸ்ட்ரேட் விசாரணை செய்யும்போது கேசின் உண்மையை விளங்குவதற்காக பலகுறிப்புக்கேள்விகளை கட்சிக்காரர்களைக்கொண்டும் தானும் போட்டுக் கேட்கலாம் கட்சிக்காரர்களுக்காக அவர்களுடைய ஏஜண்டுகளும் அல்லது வக்கீல்களும் விசாரணை காலத்தில் ஆஜராகிமேற்சொன்னக் குறிப்புக் கேள்விகளைக் கேட்கலாம்.

விசாரிக்கும்போது வாங்கும் வாக்குமூலங்களை எழுத்தாலுமாகவாவது வாங்கலாம் அல்லது வாய் மொழியாகவாவது வாங்கலாம் விசாரணை செய்துமுடிந்தவுடனே எதிரியானவன் குற்றவாளி இல்லையென்று கிராம மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோன்றுகிற பக்ஷத்தில் அவனை விடுதலை செய்துவிடலாம். முதலிலே பிரியாதிகளினால் கொண்டுவரப்படும் சாட்சிகளாலேயே குற்றமானது ருசு ஆகாமல் போனால் அந்தக் கேசைத் தள்ளிவிடலாம்.

விசாரணைத் தேதியில் பிரியாதி ஆஜராகாவிட்டால் அவன்கொடுத்த பிரியாதி கிராம மாஜிஸ்ட்ரேட் தள்ளிவிடவேண்டியது. அவன்தான் ஆஜராகாததற்குத் தகுந்த காரணம் சொன்னால் அது கிராம மாஜிஸ்ட்ரேட்டுக்குத் திருப்திகரமாய் இருந்தால் கேசு விசாரணைக்காக வேறொரு தினத்தைக் குறிப்பிட்டு கோடஸ் பிறப்பிக்கலாம் குறித்ததேதியில் உபய கட்சிக்காரர்களும் சாட்சிகளும் ஆஜராஞல் கேசை விசாரணைக்குத் திருப்பவும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

எதிரியாவது சாட்சிகளாவது திருப்திகரமான தகுந்த முகாந்தரமில்லாமல் கிராம மாஜிஸ்ட்ரேட்டின் சம்மன் இல்லாமல் ஆஜராகாவிட்டாலும்சரி, அல்லது ஆஜராகமாட்டோம் என்று சம்மனை மறுத்தாலும்சரி. இந்த விஷயத்தைக் குறித்து கிராம மாஜிஸ்ட்ரேட்டானவர் உடனே சப் மாஜிஸ்ட்ரேட்டுக்கு ரிபோர்ட்டு செய்ய வேண்டியது பிறகு அவருடைய உத்திரவின்பேரில் போலீசாருடை

யவாரண்டு மூலமாய் கிராம மாஜிஸ்ரேட் கோர்ட்டில் ஆஜர் செய்விக்கப்படுவார்கள்.

கேசு விசாரணைசெய்து முடிவாகி குற்றவாளியென்று நிர்மானிக்கப்படுகிற எதிரியைக் குறித்திற்குத் தகுந்தபடி 12-மணி நேரத்திற்கு அதிகப்படாமல் ஒரு காலத்தை நிர்ணயித்து கிராமச்சாவடியிலே காவலில் வைக்கும்படி உத்தரவு செய்யவேண்டியது, அல்லது 6-மணி நேரத்திற்கு அதிகப்படாத ஒரு காலத்துக்குத் தொழுவில் அடித்துவைக்கும்படி செய்யலாம். காவல் என்றால் கிராம மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவு பிரகாரம் மேற்படி மாஜிஸ்ரேட்டினால் பிடிக்கப்பட்ட ஓர் இடத்தில் அந்தக் கிராமத் தலையாரியின் சுவாதீனத்தில் இருப்பது என்று அருத்தமாகும். தொழுவில் அடிப்பது என்றால் குற்றவாளியின் கால் நுழையக்கூடிய அவ்வளவு தூரம் செய்யப்பட்ட ஒரு கட்டையில் குற்றவாளியின் காலை நுழைக்கச்செய்து காலைச்சுலபமாய் எடுக்கவிடாமலும் காலுக்கு நோவு உண்டாகாமலும் ஒரு ஆப்பு அடித்து வைப்பதென்று அர்த்தமாகும் குற்றவாளிகள் கீழ்ஜாதியைச் சேர்ந்தவர்களாயிருந்து அவர்களைத் தொழுவில்போடுவது என்னும் அவமரியாதையான தண்டனையை விதிப்பது அவர்களுக்குத் தகுதியுள்ளது தான் என்று கிராம மாஜிஸ்ட்ரேட்டுக்குத்தோன்றினால் அப்படிப்பட்ட குற்றவாளிகளுக்குத் தான் கிராம மாஜிஸ்ட்ரேட்டு தொழுவில் போடும் தண்டனையை விதிக்கவேண்டியது குற்றவாளித் தொழுவில் அடிக்கும் அவமானமான தண்டனையைப்படக்கூடாதவனாயிருந்தால் அப்படிப்பட்டவனுக்குத் தொழுவில்அடிக்கும் தண்டனையை கிராம மாஜிஸ்ட்ரேட்டு விதிக்கக்கூடாது அல்லாமலும், மேற்படி தொழுவில் அடித்தல் என்னும் தண்டனையைகிராம மாஜிஸ்ட்ரேட்டுகள் மிகவும் அபூர்வமாய் விதிக்கவேண்டும்.

தண்டனை விதிக்கப்பட்டவனை அந்த வார்த்தையைக்கேட்ட தட்சணமே சில நாகரீக ஜனங்கள் ஸ்நேகமாய் அதிக வருத்தப்படுவதாய் இருப்பதானால் அப்படிப்பட்டவர்களுக்கு விதிக்கப்படும் காவல் தண்டனையும் மிதமாய்க் கையாளவேண்டும்.

குற்றவாளியைத் திட்டசமல் கடினவார்த்தைகளினாலே பலபேர் அறிய குற்றத்தையெடுத்துச்சொல்லி குற்றவாளிக்குப் புத்தி புகட்டவேண்டும், இப்படிச்செய்வதனால் ஜனங்கள் துன்மார்க்கச் செய்கையிலிருந்து விலகி நல்லவழிக்கு வருவார்கள். இப்படிக் கடி

ந்துபேசுதலிலும் பலபேர் அறிய குற்றத்தைவெளிப்படுத்தி உண்டா
க்குவதையும் சகரீகமான ஜனங்களுக்கு விசேஷமாய்த் தண்டனை
யாகக் கையாளவேண்டும்.

கிராமமாஜிஸ்ட்ரேட்டானவர் காவல்தண்டனையையாவது அல்
லது தொழுவில் அடித்தல் என்னும் தண்டனையாவது விதித்து
தீர்ப்புசொன்ன அந்தநிமிஷமே தலையாரியானவன் குற்றவாளியின்
டைய கையைப்பிடித்துக்கொண்டு மேற்படி தீர்ப்பில் சொன்ன
படி அமுலில் நடத்திவிடவேண்டும்.

தலையாரியினுடைய சுவாதீனத்தில் இருப்பதற்கு முந்தீர்ப்பை
யடைய மாட்டேனென்று எதிர்பார்க்கும் குற்றவாளிகளைப்பற்றி
டசப்ரஷிஸ்ட்ரேட்டுக்கு கிராம மாஜிஸ்ட்ரேட்டானவர் ரிபோர்ட்டு
செய்யவேண்டும். அதன்மேல் அவர் செய்யப்படும் உத்தரவுபடி
க்கு அக்குற்றவாளிகள் போலீஸார்வாரண்டில் பிடிக்கப்பட்டு பெ
ரியதண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

குற்றவாளிகளுக்கு கைவிலங்குபோட கிராமமாஜிஸ்ட்ரேட்டுக்
கு அதிகாரமில்லை. அவர்களுக்கு அபராததண்டனை விதிக்கவும்
கிராம மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரமில்லை.

கிராமமாஜிஸ்ட்ரேட்டுகளால்மரியல் செய்து குறிக்கப்பட்ட
வைகளைக்குறித்தும் அவர்களால் பரிசீலனை செய்யப்படவைகளைக்
குறித்தும் அதற்கு என்று ஏற்பட்டிருக்கும் கமுனுப்படிகிராம கர்
ணங்கள் ரிஜிஸ்டர்கள் வைத்துக் கொள்ளவேண்டும். அந்தரிஜிஸ்
டர்கிராமமாஜிஸ்ட்ரேட்டானவர்தாலுக்கா மேஜிஸ்ட்ரேட்டுகளுக்கு
ஒவ்வொருமாதமும் அனுப்பவேண்டும்.

மேற்படி ரிஜிஸ்டரில் ஒருநாளில் தீர்மானமாகிய தேதி முதல்
48-மணிநேரத்திற்குள்ளாக சப் மாஜிஸ்ட்ரேட் ஆபீஸுக்கும் போ
லீஸ் ஸ்டேஷன் அவுஸ் ஆபீஸருக்கும் அனுப்பவேண்டும் ஒவ்
வொரு வருஷமும் முடிவிலே ஏற்பட்ட கமுனுப்படி ஒரு ஸ்டேட்
மெண்டை தயார் செய்து அடுத்த ஜூன் மாதம் 15-க்குள்
தாலுக்கா மாஜிஸ்ட்ரேட்டுக்கு அனுப்பிடவேண்டும்.

மேற்படி தம்மால் செய்யப்பட்டதண்டனைக் குறித்து தாலுக்
கா மாஜிஸ்ட்ரேட்டுக்கு ரிபோர்ட்டுசெய்து கொள்ளதவரிஞல் தண்
டனைக்குள்ளாவார்கள்.

ஆனால் அவர்களால் ருசு ஆகாமைக்காலோ அல்லது எந்தக்கா ரணத்திலேயோ தள்ளிவிடப்படும் கேசுகளைப் பற்றி தாலூக்கா மாஜிஸ்ரேட்டுக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டும் என்கிற அவசியமேயில்லை. ஒவ்வொரு கிராம மாஜிஸ்ட்ரேட்டும் தம்முடைய கிராமம் தவிர வேறுகிராமங்களில் நடக்கும் குறைங்களை விசாரிக்க அதிகாரம் இல்லை. சட்டம் இடம் கொடுக்காதபோனால் குற்றவாளிகளை மரியல்செய்யாமலிருக்கும்படிசாக்கிரதையாய்இருக்கவேண்டும். அப்படி மரியல் செய்யும் பட்சத்தில் தப்பிதமாய் காவல்பிடித்து வைத்ததற்காக கிராம உத்தியோகஸ்தர்கள் செய்யவேண்டும்.

கிராம மாஜிஸ்ட்ரேட்டுகள் தங்களுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தை லஞ்சம் வாங்குவது முதலிய துர்விஷயமாக உபயோகப்படுத்தக்கூடாது. பலகையை பராட்டியாவது சரியான சாக்ஷியையும் எச்சரிக்கையும் இல்லாமல் உபயோகப் படுத்திவருவதால் அவர்களை ரிபிராஹீகஷன் செயயப்படும் சில வருஷங்களுக்குக் காவலில் வைக்கப்படும் தண்டனைக்குள்ளாக்கப்படுவார்கள் என்பதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

(1) 7-வயதுக்குட்பட்ட குழந்தைகளினால் செய்யப்படும் அந்த விஷயமும் குற்றமாகமாட்டாது.

(2) எந்தக்காரியத்தையாவது செய்யும்போது அதன்மை இப்படிப்பட்டதென்றும் அதனால் இன்ன கெடுதி நேரிடுமென்று நிதானித்து அறிந்து கொள்ளும்படியான புத்தியின் நட்பத்தை உடைத்தாயிராத 7-வயதுக்குமேற்பட்டு 1-வயதுக்கு உட்பட்டுமிருக்கிற குழந்தையால் செய்யப்பட்டதும் எதுவும் குற்றமாகமாட்டாது.

(3) எந்தக் காரியத்தையாவது செய்யும் பொழுது புத்தி மாறுட்டமாக இருக்கிற காரணத்தினாலே அந்தச் செய்கையினுடைய தன்மை இப்படிப்பட்டதென்று தெரிந்து கொள்ளக்கூடாமலிருந்தாலும் பிக்காண அல்லது சட்டத்திற்கு விரோதமானகாரியத்தைத் தான் செய்து கொண்டிருக்கிறான் என்று தான் தெரிந்துகொள்ள அசக்தனாயிருக்கிற யாதாமொருவனால் செய்யப்பட்டது எதுவும் குற்றமாகமாட்டாது.

(4) தற்காப்புதி மித்தம் தனக்காவது தன் சொத்துக்காவது தனக்குள்ளபாத்திபதையைச் செலுத்து கையில் செய்யப்படுகிற காரியம் எதுவும் குற்றமாகமாட்டாது.

கிராமமாஜிஸ்ட்ரேட் ஒவ்வொருவரும் கோர்ட்டுவேலை கடந்த ஏழாவதுகாள் ஞாயிற்றுக்கிழமையர்க எண்ண வேண்டியது. இது கவர்மென்டாருடைய விருப்பம் ஆகையினாலே மேற்படி தினத்தில் கிராம மாஜிஸ்ட்ரேட்டுகள் தாங்கள் பரீசிலனை செய்யும் கேசுகள் சொற்பமான கேசுகளாயிருந்தாலும் அதை பரீசிலனை செய்யக்கூடாது.

பைத்தியக்காரர்கள்.

பைத்தியக்காரர்கள், தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளஅசக்தர்களாக இருந்தாலும் தங்களுடைய பந்துக்களாலும் சினேகிதர்களாலும் கவனிக்கப்படாமல் ஊரில் திரிகதுகொண்டிருக்கும் போது அல்லது அவர்கள் அபாயத்திற்குள் அகப்பட்டுக்கொள்ளும் சமயமாயிருக்கும்போது இந்த விஷயத்தைக்குறித்து கிராம மாஜிஸ்ட்ரேட்டானவர் எந்த மாஜிஸ்ட்ரேட்டின் அதிகாரத்திற்குள் இருக்கிறாரோ அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கும் போலீசாருக்கும் உடனே ரிபோர்ட்டு செய்யவேண்டியது அவர்களுடைய முக்கியமான கடமைகளில் ஒன்றாக இக்கின்றது.

அப்பீல்.

கிராம மாஜிஸ்ட்ரேட்டுகளால் செய்யப்படும் ஒவ்வொரு தீர்ப்புகளுக்கும் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ளவேண்டியது. தீர்ப்பு பிறந்த தேதிமுதல் 2-மாதத்திற்குள் அப்பீல் செய்துக் கொள்ளவேண்டும். அருபதுகாளுக்குப்பிறகு அப்பீல் செல்லாது.

கிராம மாஜிஸ்ட்ரேட் தாங்கள் பிடிக்கக்கூடாத கேசுகளைப் பற்றி மேலான அதிகாரிகளுக்கு ரிபோர்ட்டு மாத்திரம் செய்தால் போதுமானதென்று முன்னே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் திருடுதல் மோசஞ்செய்தல் ஆகிய குற்றங்களில் குற்றவாளியாகப் பட்டு சொல்லப்படும் வீடுகளையும் இடங்களையும் தாமதமில்லாமல் கிராமத்திலுள்ள பெரிய குடித்தனக்காரர்களில் இரண்டுபேரைத்தக்கொண்டு கிராம மாஜிஸ்ட்ரேட் சோதனை செய்யலாம்.

அப்படிச் செய்த சோதனையில் கண்டெடுக்கப்பட்ட சந்தேகத்துக்கு இடமான சொத்துக்களையும் சுவாதீனம் செய்துகொண்டு மேற்படி சொத்துக்களையும் குற்றவாளிகளையும் தம்முடைய ரிபோர்ட்டு சகிதம் போலீசாரிடத்திற்கு அனுப்பிவிடவேண்டும்.

ரிபோர்ட்டின் காப்பி ஒன்றை தாலுகா சப்மாஜிஸ்ட்ரேட்டுக்கும் ஹாலஸ்யம் செய்யாமல் அனுப்பிவிடவேண்டும்.

சோதனை போட்டவுடனே அதன் விவரங்களையும் அதில் கண்டெடுத்த சொத்துக்களின் விவரங்களையும் சோதனை செய்யப்பட்ட நம்பர்களின் பேரையும் சோதனை செய்யும்போது கூடவிருந்த பெரிய தனக்காரர்களின் விவரங்களைக்கண்டு ஒரு மாஜர் தயார் செய்ய வேண்டியது இத்துடன் சோதனையில் கண்டெடுக்கப்பட்ட சொத்துக்களுக்குத்தனியாய் ஒரு ஜாப்தா தயார் செய்யவேண்டியது. அதில் சோதனை செய்யப்பட்ட இடத்திற்கு சொந்தக்காரனுடைய கையெழுத்து வாங்கவேண்டியது. மேற்கண்ட பஞ்சாயத்தாருடைய கையெழுத்துகளும் வாங்கவேண்டியது. இவை இரண்டையும் மேலான அதிகாரிக்கு அனுப்பிவிடவேண்டியது மேற்படி சொத்துக்களின் ஜாப்தா ஒன்றை வீட்டுக்காரனிடத்தில்கொடுக்கவேண்டியது. சந்தேகத்துக்கிடமில்லாத சொத்துக்களை கிராம மாஜிஸ்ட்ரேட் கைவசப்படுத்தக்கூடாது. கைவசப்படுத்தாத சொத்துக்களை ஜாப்தாவில் எழுதக்கூடாது. சந்தேகத்துக்கிடமான சொத்துக்கள் சோதனையிலகப்படாவிட்டால் சொத்து ஜாப்தா இல்லாமலே மாஜர் மாத்திரம் தயார் செய்து அனுப்பவேண்டும். இப்படிப்பட்ட அவசரமானவும் அசத்தியமான சோதனை விஷயங்களுக்கு மேலதிகாரிகளுடைய உத்திரவையும் போலீசாருடைய உதவியையும் எதிர்பார்த்துக்காத்திருக்கவேண்டுமென்கிற அவசியம் இல்லை.

கிராம போலீஸ் நிபந்தனைகள்.

1. சொல்ப திருட்டுக்கேசுகளை யெல்லாவற்றையும் போலீஸார் கிராமமாஜிஸ்ட்ரேட்டுக்கே அனுப்பிக்கொண்டு வரவேண்டும்.

2. யாதாமொரு கிராம மாஜிஸ்ட்ரேட்டின் உத்திரவின்படி ஆஜராகமாட்டேன் என்று சொல்லி நிராகரிப்பவனை இந்தியன் பினல்கோடின் 174-வது பிரிவின்படி தண்டனைசெய்யத்தக்கதல்ல.

3. கிராம மாஜிஸ்டிரேட்டானவர் தன் கிராமத்தில் நடக்கும் படியுரள சில்லாக்குற்றங்களைக்குறித்து அடுத்த கிராமத்திலிவருக் குத் தெரிவிப்பதே போதுமானதென்று எண்ணக்கூடாது. அப்படி யே போலீஸாருக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் தெரிவிக்காமல் விட்டுவிட்டால் அப்படிப்பட்ட மாஜிஸ்டிரேட்டானவர் இந்தியன் பினல்கோட் 202-வது பிரிவின்படி தண்டிக்கத்தக்க குறறத்தைச் செய்தவராகிறார்.

4. பிள்ளைபெற்றதை மறைத்தல், கர்ப்பங் கரைத்தல் முதலிய கேஸுகளில் சம்பந்தப்பட்ட ஸ்திரீகளை மிகவும் பலஹீனமாயிருக் கும்போதும் சப்மாஜிஸ்ட்ரேட்டு முன்பாகவாவது அல்லது போலீ ஸ் ஸ்டேஷனுக்குக்காவது ஆஜர்செய்யும்படி தூரமான இடத்திற் கு கடத்திக்கொண்டு போகக்கூடாது. கட்டிக சக்தியிருந்தால் வெகு ஜாக்ரதையாய் கடத்திக் கூட்டிக்கொண்டுபோகவேண்டும். அப்படிக்கில்லாவிட்டால் அத்தஸ்திரிகள் இருந்த இடத்திலேதானே இருக்கச்செய்து அவர்கள் தப்பித்துக்கொள்ளாதபடி ஒரு காவலை வைத்திருக்கவேண்டியது. பிறகு சக்தியிவந்தபிறகு அவர்களை அழைத்துக்கொண்டுபோகவேண்டியது.

5. ஒரு பிரேதம் அனுதரவாய்க் காணப்படும்போது கிராம போலீஸ் உத்தியோகஸ்தன் கிராமமுனிசிப்புக்குத்தெரியப்படுத்த வேண்டியது அவசியமாயிருக்கிறது.

6. ஒரு ரூபாய்க்குட்பட்ட திருட்டுக்குற்றத்தை கிராம மாஜி ஸ்டிரேட்டு விசாரணைசெய்து பைசல் செய்யவேண்டியதாயிருந்தால் போலீஸார் அப்பேர்ப்பட்ட குற்றத்தை தாலூக்கா மாஜிஸ்ட்ரேட் டிற்குமுன்பாகக் கொண்டுபோகாமல் ஸ்பெஷல்மாஜிஸ்ட்ரேட்டிற்கு முன்பாகக்கொண்டுபோகவேண்டும்.

7. கிராமத்தில் நடந்ததாகத்தெரியவந்தால் உடனே கிராம மாஜிஸ்ட்ரேட்டிற்குத் தெரிவித்து குற்றம் நடந்த இடத்தில் விசார ணைசெய்யவேண்டியதற்காக வரும்படி போலீஸார் அவர்களைக் கே ட்டுக்கொள்ளவேண்டும். தன்முன்பாக வந்த கேஸுகளைப்பற்றி நடந்த நடவடிக்கை முழுவதும் தாலூக்கா சப்மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரியப்படுத்தவேண்டும். கிராம மாஜிஸ்ட்ரேட்டுகள் கேஸுகளை விசாரணை செய்யவாவது அல்லது விசாரணை செய்யவேண்டியதற்கு உதவிசெய்யவாவது தவறிப்போனால் அந்த சங்கதியைக் குறித்து

இன்ஸ்பெக்டர்கள் தாலூகா சப்மாஜிஸ்ட்ரேட்டினுடைய கோர்ட்டுக்குக்கொண்டுவரவேண்டியது. குற்றம் நடந்த சங்கதி கிராம மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரியவந்தால் அவர் அதைப் போலீசாருக்குத் தெரியப்படுத்தி அவர்களை ஆஜராகும்படி செய்யலாம். கிராம மாஜிஸ்டிரேட்டின் எல்லைக்குட்பட்ட குற்றங்களை கண்டுபிடிக்க தடுக்கவும், போலீஸார் கிராம அதிகாரிக்குக் கீழ்ப்பட்டு நடக்க வேண்டும்

8. யாதொரு கிராம மாஜிஸ்ட்ரேட்டி யாதொரு குற்றம் நடந்ததாக தரம் கேள்விப்பட்டால், அவ்விடத்திற்கு சமீபத்திலிருக்கிற போலீஸார்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களை அவ்விடத்திற்குப் போய் சங்கதிகளை விசாரிக்கும்படி உத்திரவு அனுப்ப வேண்டியது. தனிரவும் தாங்களும் மேற்படி சங்கதிகளை விசாரணை செய்து உடனே தம்முடைய சாஹத்து சப்மாஜிஸ்ட்ரேட்டிற்குத் தெரியப்படுத்தவேண்டியது குற்றவாளிகளைப்பிடிப்பதற்கு வேண்டி உதவியையும் செய்யவேண்டியது. மேலும் ஒரு கிராமத்தில் குற்றம் நடந்தால் அந்த கிராம மாஜிஸ்ட்ரேட்டு மாத்திரமல்ல, பக்கத்துக் கிராம மாஜிஸ்டிரேட்டுகளும் மேற்படி குற்றஞ் செய்தவனைக் கண்டுபிடிப்பதிலும் ருசுப்படுத்துவதிலும் தங்களால் கூடியமட்டும் சகாயம் செய்யவேண்டியது.

9. போலீஸாருடைய உதவியைக்கொண்டு கிராம மாஜிஸ்டிரேட்டுகள் செய்யும் வேலைகளாவன:—முதாவது குற்றந் தடுத்தல், இரண்டாவது குற்றங்கண்டுபிடித்தல், மூன்றாவது குற்றங்களையும், சமாதானத்தையும் பற்றின சங்கதிகளைத் தெரிவித்தலாம். இவைகளுக்குள், முதலாவது வேலையைக்குறித்து கெட்டநடத்தைக்காரர்களில் நிகாவைத்திருப்பதும் குற்றஞ் செய்தவர்கள் தப்பாமல் பிடிபடுவார்கள் என்னும் எண்ணமானது யாவருக்கும் உண்டாகும்படியாயும் செய்யவேண்டியது. போலீஸார் தங்கள் கிராமங்களுக்கு வந்த உடனே சந்தேகமான பேர்வழிகளை யவர்களுக்குத் தெரியப்படுத்தி சந்தேகப்பட்ட பேர்வழிகளுக்கு நல்லபுத்திசொல்லி மேலான மாஜிஸ்டிரேட்டுகளுக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கும் வேண்டிய சங்கதிகளை மேற்படி போலீசாரிடத்தில் சொல்லவேண்டியது. 2-வது வேலையைக்குறித்து குற்றம் ருஜுவாக வேண்டியதற்கு வேண்டிய நிஜமான சாட்சிகளைச் சம்பாதிக்கவேண்டியது. 3-வது வேலையில் கிராமத்தில் நடக்கும் குற்றங்களைக்குறித்து

போலீஸாருக்கு சமாசாரத்தைத் தெரிவிக்கவேண்டியது. அல்லாமலும் அவர்கள் சமாசாரம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயத்தில் அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்யவேண்டியது.

சகலவித போலீஸாரும் ஜனங்களுக்குடைய நன்மைக்காகவும் பந்தொபஸ்திற்காகவும் நியமிக்கப்பட்டிருக்கிறபடியால் எல்லோரும் அவர்களை நல்லவர்கள் என்று சொல்லிக்கொள்ளும்படி அவர்கள் நடந்துக்கொள்ளவேண்டியது. கிராம மாஜிஸ்டிரேட்டுகளும் அவர்களோடு அக்கியோன்னியமாய் இருக்கவேண்டியது அல்லாமலும் தங்கள் கிராமத்துக் குடிகள் அவர்களிடத்தில் நம்பிக்கையும் இங்கிதமுமாயிருக்கும்படி தங்கள் நடத்தையினால் காண்பிக்கவேண்டியது. போலீஸாரும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாயிருக்கிறார்களாவென்று பார்த்துவரவேண்டியது.

கிராமாதிகாரியின் வரி வசூல் தொழிலைக் குறித்து.

பிடிகை.

கிராம முனியக்காரர் குடிகளால் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய வரிப் பணத்தை வசூல்செய்யவேண்டியது. அப்படி வசூல் செய்வதற்காக தம்முடைய கிராமத்திலுள்ள ஒவ்வோரு குடித்தனக்காரனும் தன்னுடைய சுவாதீனத்திலிருக்கும் நிலங்களுக்காக சர்க்காருக்குக் கட்டவேண்டிய வரிபணத்தின் அளவைக்குறித்து பாக்கி ஜாப்தா ஒன்று கிராம கர்ணீகத்தில் தயார்செய்வித்து அதைத்தாம் பெற்றுக்கொள்ளவேண்டியது. அந்தந்தக் குடித்தனக்காரர்களிடமிருந்து பட்டியின்பிரகாரம் அவர்களால் செலுத்தப்படவேண்டிய தொகைகளை, கிராமத் தலையாரி அல்லது கிராம வெட்டியான் ஆகிய இந்த சிப்பந்திகளின் உதவியால் வெகு சுலபமாயத்தாம் வசூல்செய்யவேண்டியது. அப்படி வசூலாகாத தொகைக்குடிமாண்டு உத்திரவு பிறப்பித்து வரிகட்டாத குடித்தனக்காரர்களின் ஜங்கமசொத்துக்களை சர்க்கார் சட்டத்திற்குட்பட்டு ஜப்திசெய்து மேற்படி சொத்துக்களை தாசில்தாரவர்களுடைய உத்திரவின் பேரில் பைரங்கமான ஏலம்போட்டு விற்று அவனவன் சர்க்காருக்குக் கட்டவேண்டிய பாக்கித் தொகைக்கு ஈடு செய்யவேண்டியது.

டிமாண்டு.

டிமாண்டு என்றால். கிஸ்தியை தாசில்தார் அவர்களால் குறிப்பிட்ட தேதிகளில் சல்லீஸாய்க்கட்டாமற் போனபாக்கியைக்குறித்து தனியாய் அதற்கென்று ஏற்பட்டிருக்கும் நமூனாப்படி ஒரு ஜாப்தா தயார் செய்து அவரவர்களுடைய அசையும் பொருள்களை ஜப்தி செய்து வசூல் செய்யும் பொருட்டு அந்த பிர்க்கா ரிவினியூ இனிஸ்பெக்ட்டரிடத்தில் உத்தரவு பெறும் மேற்படி ஜாப்தாவிற்கு டிமாண்டு என்று சொல்லப்படும்.

ஜப்தி.

ஜப்தி என்பது என்னவென்றால் ஒவ்வொரு குடித்தனக்காரனும் தன்னுல் சர்க்காருக்குக் கட்டவேண்டிய தீர்வைத்தொகையை பாக்கியில்லாமல் சல்லீஸாய் கட்டாமற்போனால் அப்படிப்பட்டவர்களுடைய சொத்துக்களை கிராம மணியக்காரனுனவர் சொந்தக்காரன் சுவாதீனத்தினின்றும் விலக்குதல் செய்து தம்முடைய சுவாதீனத்தில் வைத்துக்கொள்ளுதலாகும்.

வரி வசூல் செய்யும் விதம்.

1. கிராமப் பெரியதனக்காரனுனவர் மேற்படி கிராமத்திய வரி வசூல் செய்யும் அந்தஸ்தில் அவருக்கு கிராம மணியக்காரர் என்று பெயர். மேற்படி தீர்வையை வசூல்செய்வது மணியக்காரருடைய கடமையாயிருக்கின்றது. வசூல் செய்யப்பட்டபணத்தை அவர் எப்போதும் தம்முடைய வசத்திலேயேவைத்திருக்கவேண்டும். கிராமக் கர்ணனுனவன் மேற்படி வரிப்பணத்தை வாங்கவே கூடாது. கிராமச்சாவடியிலாவது அல்லது வரி வசூல்செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட இடத்திலாவது மேற்படி வரி வசூல்தொகைகளை கிராமமணியக்கார் எப்போதும் வரப்பெற்றுக்கொள்ளவேண்டும். மணியக்காரரும் கர்ணனும் ஆஜாயிருந்து அவர்கள் முன்னிலையில் செலுத்தப்படுகிற தொகைக்கு ரசீது கொடுத்து உடனே கையெழுத்தும் செய்யவேண்டும். மணியக்காரர் தொகையைப் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக தம்முடைய கையெழுத்து போடவேண்டும் கர்ணனும் கணக்குகளில் மேற்படி தொகையைச்

சரியாய்ப் பதித்துகொண்டதற்கு அடையாளமாக தன்னுடைய கை யெழுத்தபோடவேண்டும். கணக்குகளே எப்போதும் கர்ணனை வன் தன்னுடைய வசத்திலே வைத்திருக்கவேண்டும்.

2. நிலங்களுக்காக செலுத்தவேண்டிய கிஸ்தியை மேற்படி நிலத்தின்பட்டதார்களாவது அல்லது அவர்களுடைய பங்குக்கள், நேகிதர்கள், மேற்படி பட்டதாரிடத்தில் பிரத்தையையுடைய வேறு எவர்களாவது செலுத்தலாம். ஆனல் கிஸ்தி செலுத்து வதைப்பற்றி கவர்ன்மெண்டார்பட்டாதாரைத்தான் எதிர்பார்க் கிறார்கள். மணியக்காரரிடத்தில் பட்டாதாரர்கள் தாமே வரிப் பணத்தை செலுத்துவதாகச் சொல்லிக்கொண்டால் மேற்படி மணி யக்காரர்கள் மற்றவர்களால் செலுத்தப்படும் தொகையை அங்கீ கரிப்பது கூடாது.

3. நிலத்துக்குடையவன் தன் நிலத்திற்குள்ள கிஸ்தியை தன் கிராம மணியக்காரரிடத்தில் சரியான நேரத்தில் செலுத்தலாம் அல் லது கலெக்டர் ஆபிசிலாவது தாலூக்கா ஆபிசிலாவது செலுத்த லாம். தனக்குள்ள கிஸ்தியை ஒரே வாயிதாவில் செலுத்தினலும் செலுத்தலாம். அல்லது கலெக்டர் ஆபிசிலாவது தாலூகா ஆபிசி லாவது செலுத்தலாம். தனக்குள்ள கிஸ்தியை ஒரேவாயிதாவில் செலுத்தினலும் செலுத்தலாம் அல்லது சர்க்காரல் ஏற்படுத்தப் பட்ட படி 5-தடவையாகவும் செலுத்தலாம்.

4. குடிகள் இஷ்டப்பட்டு வரியைச் செலுத்துவதாக சொன் னல் முன்னதாகவே கிஸ்தியை வசூல் செய்ய ஆக்ஷேபனை இராது. ஆனல் கிஸ்தித்தொகைகள் பாக்கியாயிருக்கும்போது காலதாமதமி ல்லாமல் அவைகளே வசூல்செய்துவிடவேண்டும். ஒரு ரூபாயிக்குக் குறைந்தப்பட்டாக்களின்பேரில் பாக்கியாகும் தீர்வையை கலெக்ட் டரால் நிர்ணயிக்கப்படும் மிகவும் அனுகூலமான மாசத்திலே கிஸ்தி யாயல்லாமல் வசூல் செய்யப்படவேண்டும் பட்டாவின் தொகை யானது நாலு கிஸ்திகளாகச் செலுத்தப்படும்போது பைசாக்கள் செ லுத்த வேண்டியதாக இருக்கிற பட்சத்திலே முதல் இரண்டாவது மூன்றுவது கிஸ்திகளிலே ரூபாயையும் அணவையும் மாத்திரம் வசூ ல்செய்து பாக்கியை கான்காவது கிஸ்தியில் வசூல்செய்ய வேண்டும அது எப்படியென்றுல் பட்டாவின் ரூபா 15-14-0. ரூபா 3-15-6. ஆகவிருக்கிற விஷயத்திலே முதல் மூன்று கிஸ்திகள் ஒவ்வொன்று

ம்ரூபா 3-15-0 ஆகவும் கடசி கிஸ்தி ரூபா 4-10 ஆகவும் வசூல்செய்யவேண்டும்.

5. சென்ற வருஷத்து நில அனுபோக விஷயமாக ஒவ்வொரு குடித்தனகாரனும் செலுத்தவேண்டிய உத்தேசத் தீர்வைத்தொகை இவ்வளவென்றும் பிறகு விட்டுவிடப்பட்டவைகளும் ஜமாபந்திக்கு முன்னே கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சாதாரணமாய் தெரிந்திருக்கின்றன. வஜாகொடுப்பது பிற்பாடு அவசியமாக தோற்றதற்கு விஷயங்களில் மாத்திரம் அல்லாமல் மற்றப்படிக்கு சரியான டிமாண்டுக்கு அதிகமாக வரித்தொகையை வசூல்செய்ய யாதொரு நியாயம் இருக்கமாட்டாது.

6. இருசால் நாமாவாகிய 15-ம் கணக்கில் கிராம கர்ணனும் கிராம மணியக்காரனும் கையெழுத்துப்போட்டு மேற்படி இருசாலோடுகூட அதை தாலூக்காவுக்கு அனுப்பவேண்டும். இதை கிராமமணியக்காரரானவர் கவனிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது.

7. வெரும் ரசீது காமோனுக்கள் புஸ்தகமாக சேர்ப்பிக்கப்பட்டு அப்போதைக்கப்போது தீர்வை செலுத்தும் குடியானவர்களுக்கு கொடுக்கும்பொருட்டு லக்கம்போட்டு தாசில்தார் அவர்களால் முத்திரையிடப்பட்டு கிராம மணியாசர்களுக்கு ஸப்ளை செய்யப்படும் பாக்கித்தொகைக்காவது அல்லது தற்காலத்தின் டிமாண்டின் தொகைக்காகவாவது குடித்தனக்காரால் செலுத்தப்படும் தீர்வை தொகைகளே அவசியமான விவரங்களுடனே உடனுக்குடனே பதிந்துகொண்டு மணியக்காரரும் கிராம கர்ணனும் கையெழுத்துபோட வேண்டும். ரசீதுகளிலே அந்தந்த பாபத்துகளையும் எண்களும் சுதேசபாஷையில் எழுதவேண்டும். மேலும் குடித்தனக்காரரால் செலுத்தப்பட்ட மொத்தத்தொகை எழுத்தால் மறுபடியும் எழுதப்படவேண்டும். பட்டாதாரர் அல்லாமல் வேறே யாராவது கிஸ்திபணம் செலுத்தி ரசீது புஸ்தகத்தை ஆஜர்செய்யாவிட்டால் அப்படிசெலுத்தப்படும் தொகைக்கு தனிரசீது கொடுக்கவேண்டும். கிஸ்திவசூலுவத்திலே செலுத்தப்படுவதற்கு முன்பு மணியக்காரர் எவ்வகையான ரசீதுகளையும் கொடுக்கக்கூடாது இதை அவர்கள் நன்றாய் அறிந்திருக்கவேண்டும் பட்டாதாரர்கள் பணம் செலுத்துவார்களென்று எதிர்பார்த்து மணியக்காரர்கள் ரசீது கொடுத்தால் அப்படி ரசீதுகொடுக்கும் நியாயம் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

8. மேல்சொன்ன கர்ப்பணைகளை கிராம மணியக்காரர்கள் ஜாக்கிரதையாய் கவனிக்கவேண்டும் மேலும் குடித்தனக்காரர்கள் செலுத்தும் தொகைகளை வசூல்செய்வதிலும் செய்தவுடன் அவைகளை கணக்குகளில் வரவு இருசால்பண்ணி அனுப்புவதிலும், ஆட்சேபங்களும், பிசகுகளும் நேரிடாதபடி கிராம உத்தியோகஸ்த்தர்கள் ஜாக்கிரதையாய் வேலைபார்த்துவரவேண்டும் தாலூக்கா கஜானாவுக்கு இருசால் அனுப்பப்படும்போது மேற்படி இருசாலோடுகூட கிராம மணியக்காரர் போகவேண்டுமென்கிற அவசியமில்லை. ஒவ்வொரு கிஸ்தியிலும் வசூல் பூர்த்தியாய் பாக்கியில்லாமல் செய்யப்படுகிறதாவென்று நியமிக்கப்பட்ட தேதியிலே சம்பிக்கையுள்ளபோது மானகாவல் சகிதமாக இருசால் அனுப்பப்பட்டதாவென்றும் பார்ப்பது அவருடைய கடமையாகும். சரியான பந்தோபஸ்த்தில்லாமலும் மூன் ஜாக்கிரதையில்லாமலும் இருசாலை கிராம மணியக்காரர் அனுப்பக்கூடாது. அப்படி அனுப்புவாரானால் அந்தபணத்திற்கு அவர் உத்திரவாதியாய் இருக்கவேண்டுமென்று அவர் எண்ணவேண்டும். மேலும் தாலூக்காகச் சேரியில் இருசால்தொகையை செலுத்திப்பார்க்கும்போது அதில் ஏதாவது வித்தியாசம் அல்லது குறை ஏதாணப்பட்டால் அதைப்பற்றியும் மேற்சொன்னபடியே அவன் உத்திரவாதியாய் இருப்பதாக எண்ணப்படுவார். தாலூக்கா கஜானாவுக்கு இருசால் தொகைகளை கொண்டுபோவது தலையாரி வெட்டியான் இவர்களுடைய கடமையாகும்

9. ஒவ்வொரு கிராம கர்ணனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் டைக்ளாட் ரிஜிஸ்தரையும் 10-ம்நம்பர் கணக்கான சிட்டாஎன்ற கணக்கையும் அனுசரித்து ஒவ்வொரு குடியும் அந்தந்த பசலிக்குக்கட்ட வேண்டியபேரீஜூமொத்தத்தை கணக்கிடவேண்டும், ஸர்வேடபார்ட்மென்டாரால் முதல் முதல் நிலங்கள் அளக்கப்பட்டு முடிவுசெய்யப்படுகின்றன. பிற்பாடு ஸெட்டில்மெண்டு ஆபீஸ் உத்தியோகஸ்தர்கள் மேற்படி நிலங்களின் ஸர்வே நெம்பர் உட்பிரிவு, மண்வயணம் தரம் விஸ்தீரணம், தீர்வை, பட்டாவின் நம்பர் பட்டாதாரனுடைய பெயர் முதலான விவரங்களைக்கண்டு ஜாப்தா ஒன்று ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனியாய் தயார்செய்து அச்சிடப்பட்டு ஒரு புஸ்தகம் ஒவ்வொரு கிராமக் கணக்கப்பிள்ளைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அச்சிட்ட ஜாபிதாவிற்கு டைக்ளாட் ரிஜிஸ்தர் என்று பெயர் சிட்டாவில் ஒவ்வொரு பட்டாதாரன் சுவாதீனத்திலுள்ள நில விவரம் கண்டிருக்கும்.

சல்லீஷாய் வசூலாகாத வரியை வசூல்செய்யும் விதம்.

1. நிலத்திற்காக செலுத்தவேண்டிய ஸர்க்கார் தீர்வையிலே பாய்ச்சலுக்காக சேகரிக்கப்பட்ட தண்ணீரைக்குறித்து செலுத்தப் படத்தக்க வரி, யிறை முதலனவைகள் அல்லது வேறேவிதமான தீர் வைகளும் அடங்கும்.

2. நிலமும் அதன்மேலிருக்கும் கட்டடங்களும், அந்த நிலத் தில் உற்பத்தியாகும் மாசூலும், ஸர்க்கார் தீர்வைக்கு ஜாமீனாகும்.

3. நிலத்துக்குடையவன் ஒவ்வொருவனும் தன்னிலத்திற்குப் பாக்கியாயிருக்கிற தீர்வையை கிஸ்திபந்திப்பிரகாரமாவது அல்லது வேறே எந்த ஏற்பாட்டுப்பிரகாரமாவது வாய்த ஆய்வீடுகிறதேதியி லாகிலும் அதற்கு முன்னிட்டாகிலும், கலெக்ட்டரிடத்திலாவது அதை வசூல் செய்யும்படி அவரால் அதிகாரம்பெறப்பட்ட உத்தி யோகஸ்தரிடத்திலாவது செலுத்திவிடவேண்டியது.

4. கிஸ்தி முழுமையுமாவது அல்லது அதன் ஒருபாகமாவது அந்தப்படி செலுத்தப்படாதிருந்தால் அப்படிச்செலுத்தப்படாத தொகையான தீர்வை பாக்கி என்று எண்ணப்படும்.

5. ஸர்க்கார் தீர்வை பாக்கியிருந்தால் அந்த பாக்கிக்காரனு டைய ஸ்தவரஜங்கம் சொத்துக்களை ஜப்தி செய்தும் ஏலத்தில் விற் பனைசெய்தும் மேற்படி பாக்கியை வசூல்செய்யத் தாசில்தார்களும், டெப்டி தாசில்தார்களும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். பாக் கிதாரனுடைய அசையும் பொருளாவது அசையாப்பொருளாவது அல்லது இரண்டையுமாவது விற்பனைசெய்து சர்க்கார் கிஸ்தி பாக்கியை வசூல்செய்யலாம்.—சாகுபடிசெய்யும் ஒவ்வொருகுடியா னவனுக்காக, விவசாயக் கருவிகளும் உழவுக்குதவும் கால்நடைகளில் ஒருஜதையும் ஜப்திக்குள்ளாகாமல் விலக்கிவிடவேண்டும். பட் டாக்களை வைத்திராத குடியானவர்கள் அனுமதி பெற்றுக்கொள் ளாமல் செய்கிற விஷயங்களில் இந்தப்படி நிவாரணை செய்யக்கூடாது பலபட்டாக்களை வைத்திருக்கும் ஒருகுடித்தனக்காரன், மறியல் செய்யப்படுகிற ஒவ்வொரு சர்த்தர்ப்பத்திலும் ஒருஜதை கால்நடை க்குத்தான் நிவாரணைபெற்றுக்கொள்ள அருஹனுவான் பட்டாவான

பல குடியானவர்கள் பேரிலிருந்தால் ஒவ்வொருவனும் தனக்காக கிவாரணி பெற்றுக்கொள்ள அருகனாவான்.

6. தீர்வைபாக்கி விஷயமாய் ஜப்தி முதலிய நடவடிக்கை நடத்துவதற்கு எற்படும் செலவும், அதற்குள்ள வட்டியையும் வசூல் செய்யப்படும் சர்க்கார் தீர்வை பாக்கிக்கு வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஆறு விழுக்காடு வசூல் செய்யப்படும்.

7. சர்க்கார் தீர்வை பாக்கிக்காக அசையும் பொருளை ஜப்தி செய்து ஏலத்தில் விற்கிற பட்சத்தில் அடியிற் கண்டவிதிகளை அநுசரித்து நடப்பிக்க வேண்டும்.

(1) தாசில்தாரனவர் எழுத்துமூலமான ஒரு டிமாண்டை கிராம மணியக்காரனுக்கு அனுப்பலாம் மறியல் செய்வதற்காக அமர்த்திக்கொள்ளப்பட்ட மணியக்காரன் அந்த எழுத்து மூலமான டிமாண்டை ஜப்திசெய்யப் போகிற பாக்கிதாரனுக்குக் காட்டவேண்டும். பாக்கி உடனே அவனுல் செலுத்தப்படாவிட்டால் மறியல் செய்வதற்கு அந்த எழுத்துமூலமான டிமாண்டே அவருக்கு அதிகாரமாகும். சொத்து ஜப்திசெய்கிற தேதியிலே மறியல் செய்யப்பட்ட சொத்தில் ஜப்தா அல்லது டாப்பையும் அந்த சொத்து வைக்கப்படும் இடத்தின் பெயரையும் அந்த டிமாண்டின் பிறதியில் கிராம மணியக்காரர் எண்டார்ஸ் செய்து அதை பாக்கிதாரனிடத்தில் ஒப்பிக்கவேண்டும்.

(2) மேற்படி பாக்கித்தொகையும் அதற்கு வட்டியும், படிச் செலவும், ஜப்திச்செலவும் ஏலத்திற்கு முன்னமே பாக்கிதாரனுல் செலுத்தப்படாவிட்டால் ஜப்திஅல்லது மறியல் செய்யப்பட்டசொத்தானது உடனே ஏலத்தில் விற்கபடுமென்று அந்த டிமாண்டில் (தண்டல் பத்திரிகையில்) எழுததேண்டியது.

(3) பாக்கிதாரன் ஆஜராயில்லாவிட்டால் மேற்படி டிமாண்டின் [illegible] வகைசெய்ததமாய், ஜப்தி செய்த தேதி முதல் மூன்று நாளைக்குள்ளாக அந்த பாக்கிதாரன் வழக்கமாய் வாசஞ் செய்யும் இடத்திலாவது அல்லது சொத்து ஜப்தி பண்

னின யிடத்திலாவது ஒட்டிவைக்கவாகிலும் வேண்டும் அல்லது, வைத்துவிடவாகிலும் வேண்டியது.

8. டிமாண்டில் கண்டஷரத்துகளின்படி, பாக்கியாகும் தொகை செலுத்தப்படாவிட்டால், ஜப்தி செய்யப்பட்ட சொத்தை, வட்டியும் படியும், ஜப்திசெலவுமுள்பட்ட சேரவேண்டிய பாக்கி செல்லாகும் பொருட்டு பகிரங்கமாய் ஏலம்போட்டு விற்பனை செய்வதற்காக மேற்படி சொத்தின் ஜாப்த்தாவை கிராம மணியக்காரர்தாசில்தாரவர்களுக்கு அனுப்ப வேண்டியது. பாக்கிவசூலாகிறவரையிலாவது, சொத்து விற்பனையாகிற வரையிலாவது ஜப்தி செய்யப்பட்ட சொத்தை கிராம உத்தியோகஸ்தர்கள் ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வரவேண்டும்.

9. ரிஜிஸ்டரான எந்தக்கூட்டு பட்டாதாரனுவது, நிலத்தின் அனுபோகத்தில் தனக்கு யாதொரு பற்றுமில்லையென்று கலெக்டருக்காவது டிவிஷன் உத்தியோகஸ்தருக்காவது, அல்லது தாசில்தாருக்காவது, எழுத்துமூலமாய் நோட்டீஸ் கொடுப்பாரானால், ரிஜிஸ்டரான மற்ற நில அனுபோகஸ்தர்களுக்குச்சொந்தமாயுள்ள அசையும்பொருள்கள் விற்று முதல் செய்யப்படாமலிருக்கிறவரையிலாவது, அந்த நிலமும் விற்பனைசெய்தாகிறவரையிலாவது அவனுடைய அசையும்பொருள்களை ஜப்திசெய்யக்கூடாது. ரெஜிஸ்டரான மற்ற பட்டாதாரர்களுடைய அசையும்பொருள்களும் நிலமும் விற்பனை செய்தபிறகு இன்னம் வசூலாகபாக்கி ஏற்பட்டால், மேற்படி நோட்டீஸ்கொடுத்த ரெஜிஸ்டரான பட்டாதாரனுடைய அசையும் பொருள்களை ஜப்திசெய்து விற்று முதல்செய்யக்கூடும்.

10. ஒருகிராமத்தைச்சேர்ந்த எல்லா டிமாண்டுகளையும் ஒரே ஒரு காகிதத்தில் எழுதி அனுப்பலாம் இப்படிச்செய்வது சட்டவிரோதமாகாது. ஜப்திசெய்யவேண்டிய அவசியமிருக்கிறதென்று தோற்றும்போது, ஜப்திசெய்கிறவர்கள் பாக்கிதாரனுயிருந்தாலும் சரி, அவனுடைய பிரதிநிதியாயிருந்தாலும் சரி, சொத்தியார்வசத்திலிருக்கிறதோ அவனுக்கு அசல் 1-ம், நம்பரைக் காட்டவேண்டியது. பிறகு அந்த பாக்கிதாரனைக் குறித்த விவரங்கள் சகிதமாய்ப்பிரதியேகமான நமூனுவில் நகல் ஒன்று எடுத்துக்கொண்டு ஜப்திசெய்யப்பட்ட சொத்தின் ஜாப்திதாவை அந்த நகலிலெழுதி அதை அவனிடத்தில் ஒப்புவிக்கவேண்டியது. இந்த ஜாப்திதாவானது 2-ம் நமூனுப்படி யிருக்கவேண்டியது. இதற்கு அச்சிட்ட நமூனுக்

களைக் கர்ணம் சவதரித்து வைத்துக்கொண்டு அவைகளிலே எழுத வேண்டிய விஷயங்களை யெழுதவேண்டியது. அசல் 1-ம் நம்பரிலே அதன்படி அதிகாரம் கொடுக்கப்பெற்ற கிராமமணியக்காரனுன்வர் ஒவ்வொரு பதிவையும் பற்றியப் பைசலை ஒரத்தில் குறித்துவைக்க வேண்டும். திருஷ்டாந்தம்.

1. காட்டியதன்மேல் கொடுக்கப்பட்டது, 20 4-1912.

2 தாலூக்காவுக்கு 2-ம் நம்பர் அனுப்பப்பட்டது 25-4-12

11. பாக்கிதாரனுடைய சொத்தை ஜப்திசெய்தபிறகு, விற்று முதல் செய்வதற்கு முன்னே டிமாண்டுசெய்யப்பட்ட பாக்கித்தொகையையும், வட்டியையும், படியையும் ஜப்தி விஷயமாய்ப் பிடித்த அவசியமான எல்லாச்செலவுகளையும் பாக்கிதாரன் கொடுப்பதாக ஒப்புக்கொண்டால் கிராம மணியக்காரர் உடனே அந்தத் தொகையைவரப்பெற்றுக்கொண்டு யாதொரு ஆலசியமில்லாமல் சொத்தை விடுதலை செய்துவிடவேண்டும். சொத்தை ஒப்பிவித்தற்காக் பாக்கிதாரனிடமிருந்து ரசீது மெற்றுத்கொள்வதில் கிராம மணியக்காரர் வெகு ஜாக்கிறதையா யிருக்கவேண்டும்.

12. பாக்கிதாரனுடைய மாசூல் அல்லது அறுவடையாகாத பயிர்களை ஜப்திசெய்யும் மணியக்காரர் அவைகள் அருவடையாகத் தருதியாயிருக்கும் அவைகளை விற்று முதல் செய்விக்கவேண்டியது. அல்லது தாம் இஷ்டப்பட்டால் சரியான காலத்திலே அவைகளை அறுவடை செய்வித்து, விற்று முதலாகும் வரையில் தருக்த இடத்தில் பந்தோபஸ்து செய்துவைக்கலாம் பின்னே சொன்னபடி நடவடிக்கை நடத்துகிற விஷயத்திலே, அறுவடை செய்விக்கப் பிடித்த செலவு மாசூல் பந்தோபஸ்து செய்வித்ததற் குண்டான செலவு, இவைகளை, பாக்கிதாரன் தன் சொத்தை மீட்டுக்கொள்ளும்போது செலுத்திவிடவேண்டும். அல்லது விற்று முதல் செய்யப்பட்டால் அந்த விற்றுமுதல் தொகையிலிருந்து மேற்படி செலவுகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

13. கிராம மணியக்காரர் ஜப்தி செய்யப்பட்ட எருதுகளை அல்லது கால் நடைகளை வேலை செய்விக்கக்கூடாது. ஜப்திசெய்யப்பட்டிருக்கிற சரக்குகளையும், அல்லது தட்டுமுட்டு சாமான்களையும் தாம் உபயோகிக்கக்கூடாது. கால் நடைக்கும் உயிரோடிருக்கும் பிராணிகளுக்கும் நீனி தாம் போட்டுவிக்கவேண்டும். பிறகு அத

தனிச்செலவை பாக்கிதாரன் சொத்தை மீட்க வரும்போது அவனை செலுத்தச் சொல்லி ஈடு செய்து கொள்ளவேண்டும். அல்லது மேற் கண்டவைகளை விற்று முதல் செய்யும்படி கோரிட்டடல் தனிச்செல வை விற்று முதல் தொகையிலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

14. ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களை வெகு ஜாக்கிரதை யாயும் சரியான படிக்கும் பந்தோபஸ்து செய்யவேண்டும். அப்ப டியந்தோபஸ்து செய்யாமற் போனலும் ஜப்தி செய்ததால் நடைக ளை அக்கிரமமாய் வேலை செய்வித்தாலும், மறியல் செய்த சரக்கு தட் டுமுட்டுசாமான்களை உபயோகித்தாலும், திருட்டுப்போனலும், கா ணுமற் போனலும், நஷ்டமாய் விட்டாலும், மேற்படி நஷ்டம் அல் லது சேதம் யாரால் உண்டானதோ அந்த மணியக்காரனிடமிருந்து சருக்க வகையால் கலேகட்டர் வசூல் செய்து அத்தத் தொகையை நஷ்டமடைந்தவனுக்கு கொடுத்து விடத்தக்கதாகும்.

15. ஜப்திசெய்யப்படஞ் சொத்தானது பாக்கித் தொகைக்கு அதிகப்படாமல் கூடிய வரையிலே மேற்படி பாக்கிக்கு ஏற்றதாக வேயிருக்கவேண்டும்.

16. ஜப்திசெய்யவேண்டிய காலம் எப்போ என்றால்—சூரிய ன் உதயமானபிறகும் சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்னும் சொத் துக்களை ஜப்திசெய்யலாம். மற்றவேளைகளில் ஜப்திசெய்யக்கூடா தென கிராம மணியக்காரர் கவனிக்கவேண்டும்.

17 பாக்கிதாரன், அல்லது அவன் உத்திரவுபெற்ற ஏஜண்டு இவர்களிருவருமல்லாத வேரொருவன் ஜப்திசெய்யப்பட்ட சொத் துக்குத் தனக்குச் சுதந்தாமுண்டென்று தாவாபண்ணினால் கிராம மணியக்காரர் மேற்படி தாவாவை யோசியாமல் விற்றுமுதல் செய் வித்தால் மேற்படி தாவாதாரன் தகுந்த அதிகாரவரம்புடைய யா தொரு லீவில் கோர்ட்டில் அந்த சுதந்தரத்தை ருஜுப்படுத்திவிட் டால், எதற்காக சொத்து விற்பனை செய்யப்பட்டதோ அந்தத் தீர் வை பாக்கியின் உத்திரவாதத்தை ருஜுசெய்விக்கிற மணியக்காரரு க்கு சாத்தியப்படாமற் போனால் மேற்படி சொத்தின் முழுமதிப் பின்தொகையையும், வட்டியையும் அந்த விஷயத்தில் பிடித்த சகல செலவையும் நஷ்டத்தையும் கிராம மணியக்காரரிடமிருந்து வசூ ல்செய்யவேண்டும்.

18. பர்க்கிதாரனுக்குச் சொந்தமான உள்ளே வைத்திருக்கப் பட்ட சொத்தை ஜப்திசெய்வதற்காக, வாயம், தொழுவம், களஞ்சி யம் கிடங்கு அல்லது வீட்டிற்கு வெளியே யுள்ள சிற்றறை அல்லது வேறே எந்த கட்டடத்தையும் கிராம மணியக்காரருக்குப் பலாத் காரமாய்த் திறக்க அதிகாரமுண்டு. மேலும் வெளிக்கதவு திறந் திருக்கும்படியாகுடியிருக்கும் வீட்டிற்குள்ளும் பிரவேசிக்கலாம் அல்லாமலும் மேலே சொன்னபடி. பர்க்கிக்காக ஜப்திசெய்ய மேற் படி குடியிருக்கும் வீட்டினுள்ள யாதொரு பூட்டப்பட்ட அறையின் கதவை உடைத்துத் திறக்கலாம். ஆனால் கோஷாஸ்திரீகள் முத லாவலர்களுக்கென்று பிரத்தியேகமாய்க் கட்டியிருக்கும் அறை களின் கதவை யுடைத்து அதில் பிரவேசிக்க மணியக்காரருக்கு அதிகாரம் கிடையாது.

19. வெளிக்கதவு மூடியிருக்கும் குடியிருக்கும் வீட்டிற்குள் ளும், ஸ்திரீகளுக்காகவே பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்ட அறை க்குள்ளும் பர்க்கிதாரனுடைய சொத்து வைக்கப்பட்டிருக்கிறதென் றகிஜிக்க மணியக்காரருக்கு நியாயம் ஏற்படும் விஷயத்தில் மேற்ப டிஜப்திதாரன் அதிக சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷன் அவஸ் ஆபிசருக்கு மேற்படி ஸங்கதியைத் தெரிவிக்கவேண்டும். அந்தப் படி தமக்குத் தெரிவித்ததின் பேரில் அவர் மேற்படி இடத்திற்கு தம்மாபீஸ் போலீஸ் உத்தியோகஸ்தர் ஒருவரை அனுப்பிவிக்க வேண்டும் அந்த போலீசு உத்தியோகஸ்தர் முன்னிலை மேற்படி குடியிருக்கும் வீட்டின் பூட்டப்பட்ட வெளிக்கதவையும் கிராம ம ணியக்காரர் பலாத்காரமாய்த் திறக்கலாம். போலீஸ் உத்தியோ கஸ்தர் கிராம மணியக்காரர் கோஷாக்களுக்கென்றேற்படுத்தப்பட்ட இடத்திலிருக்கு ஸ்திரீகளை யப்புறப்படுத்தம்பொருட்டு கிரமமா னகோட்டீஸ் கொடுக்க வேண்டும். அவர்களைத் தகுந்தவிதமாய் அப் புறப்படுத்திய பின்பு அந்த அறையிலுள்ள பர்க்கிதாரன் சொத்தை ஜப்திசெய்ய அதற்குள் பிரவேசிக்கலாம் ஆனால் அப்படிப்பட்டசொ த்து அகப்பட்ட உடனே அதை அப்புறப்படுத்தி அறையை முன் போலவே அவர்களுடைய உபயோகத்திற்கு விட்டுவிடவேண்டும்.

20. பர்க்கிக்காக செய்யப்படுகிற ஜப்தி சொத்தை பர்க்கிதா ரன் ஜபதக்குள்ளாகாதபடிக்கு மோசடியாய் மேற்படி சொத்தைக் கொண்டு போய்விட்டால் அதி ருஜுவான தின் பேரில் தகுந்த அ திகாரமுடைய லீவில் கோர்ட்டார் சுருக்க வகையாய் அந்த சொ

த்தை ஜப்திதாரன்வசம் ஒப்பிவித்து விடும்படி உத்திரவு செய்யலாம் மேலும் மோசடிசெய்த பாக்கிதாரன் ஆக்ட்டுப்படி தெண்டனைக் குள்ளாவான் என்பது நிச்சயமானது.

21. அசையும்பொருளை ஜப்தி செய்யும்போது—பாக்கி செலுத்தவேண்டிய குடித்தனக்காரனுக்கு சொந்தமாகி விதைப்பதற்கு வைக்கப்பட்டிருக்கும், தானியங்கள், விவசாயத்தொழிலுக்குவேண்டிய ஆயுதவகைகாக்கள், உடுத்திக்கொள்ளும் வஸ்திரங்கள், அணிந்துக்கொண்டிருக்கிற நகைகள் சாதாரணமாக நித்தியபடி உபயோகத்திற்காக கையாண்டுவரும் பாத்திரங்கள், விவசாயக்கருவிகள் மற்றும் இவைபோன்ற மிக அவசியமான பொருள்களை ஜப்திசெய்யக்கூடாது. ஒரு குடியானவனுக்கு ஒரே ஒரு ஏர்மாடுகள் இருந்ததானால் அந்த கால் நடைகளையும் ஜபதி செய்யக்கூடாது. அதேக கால் நடைகள் பாக்கிதாரனுக்கிருந்தால் ஒரு ஏருக்குவேண்டிய கால்நடைகளை நீக்கி மற்ற கால் நடைகளை ஜப்தி செய்யவேண்டியது.

22. குடித்தனக்காரனுக்கு வேண்டிய அளவு அசையும் பொருளிருந்தால் சர்க்கார் பாக்கிக்குப்போதுமான அளவு அசையும் பொருளை ஜப்தி செய்யவேண்டியது. அப்படி சர்க்கார் பாக்கிக்குப் போதுமான அளவு ஜங்கமசொத்து இல்லாமற் போனால்மாத்திரம் அசையும்பொருள்களை ஜப்திசெய்யவேண்டியது. இதன் கிழ ஜப்தி என்றுசொல்லப்படும். அசையாப்பொருளை ஜப்திசெய்து ஏலத்தில் விற்கும் அதிகாரம் சாதாரணமாய்க் கிராமமணியக்காரர்களுக்கில்லை. இந்த ஜப்தி வெகுசாய் பிர்க்கா அத்தஸ்தக்குக் குறைவாத ஆபிஸர்களாலேயே ஏலம் போட்டு விர்க்கப்படும், அப்படி ஏலம் போடுவதற்கு குறிப்பிட்டிருக்கும் காலத்தைப்பற்றி முன்னடியாக வே சொத்தின் சொந்தக்காரர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டியது. அத்தோடு கிராமத்திலும் பிரசரஞ் செய்யவேண்டும்.

ஜப்தி சொத்தை ஏலம் போடுவற்காக குறிப்பிட்டிருக்கும் தேதிக்கு முந்தினதினத்தில்கூடபாக்கிதாரன் பாக்கித்தொகையை செலுத்தி சொத்தை மீட்டுக்கொண்டுபோகலாம். அப்படிச் செய்கிறவிஷயத்தில் தாசில்தாரால் ஏலம்போடுவதற்கு உத்தரவாயிருந்தாலும் கிராம மணியக்காரர்களே மேறபடிபாக்கித் தொகையைப் பெற்றுக்கொண்டு சொத்தை விட்டுவிடலாம்.

———

பொது.

அசையும் பொருள் என்னவென்றால் மனிதர்களால் சுலபமாய் அப்புறப்படுத்தக்கூடிய பொருளாகும்.

அசையாய்பொருள் என்னவென்றால், வீடு, தோப்பு, நிலம் இவற்றைப்போன்ற நிலைபெயரக்கூடாத பொருளாகும்.

ஜங்கம சொத்து என்றால் அசையும்பொருள்.

ஸ்தாவர சொத்து என்றால் அசையாப் பொருள்.

தர்க்காஸ்து.

அநேக கிராமங்களிலே குடித்தனக்காரர்களுக்குச் சொந்த மல்லாத சர்க்காரைச்சேர்ந்த தரிசு நிலங்களிருப்பதுண்டு. அப்படிப்பட்ட நிலங்களில் குறிப்பிட்ட ஒரு பாகத்தை எந்தக் குடியானவனுடைய தன் சுவாதீனப்படுத்தும்படி மனுவு கொடுத்துக்கொள்வது வழக்கம், இந்த மனுவுக்குத் தர்க்காஸ்து என்று சொல்லப்படும்.

மேற்படி தர்க்காஸ்து மனுவில் காணவேண்டிய விஷயங்களாவன:—தர்க்காஸ்து மனுதாரனுடைய பெயர் முதலிய விவரம்—கோரிய நிலமிருக்கும் கிராமத்தின் பெயர்—நிலத்தின் ஸர்வே நம்பர்—உட்பிரிவு-விஸ்தீரணம் சுவாதீனப்படுத்தவேண்டியபசலி ஆகிய இவ்விஷயங்கள் காட்டப்பட வேண்டியது.

தர்க்காஸ்துதாரன் மனுவை மணியக்காரர், தாசில்தார் டிவிஷன்கலேக்டர் ஆகிய இம்மூவருள் எவரிடத்திலாவது கொடுத்துக் கொள்ளலாம். விண்ணப்பம் செய்து கொள்ளுங்காலத்தில் தர்க்காஸ்தில் கோரிய நிலமானது வாஸ்வத்திலே அனுபோகத்திலிராமலிருக்கவேண்டும் அல்லது அனுபோகத்திலிருந்து கைவிடப்பட்டாவதிருக்கவேண்டும். இப்படிக்கில்லாத மற்றெவ்விதமான நிலத்தைக்குறித்தும் மனுவு ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. மேலும் சரியான அதாயத்தி பெற்றுக்கொள்ளாமல் அதாயவிக்கப்பட்ட நிலங்களுக்காகச் செய்துக்கொள்ளும் தர்க்காஸ்து மனுவு ஏற்றுக்கொள்ளப்படும் மனுதாரன் குடித்தனக்காரனல்லாமல் கிராம உத்தியோகஸ்தர்களாவது அல்லது அவர்களுடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவது செய்துக்கொள்ளுஞ்ற தர்க்காஸ்து விண்ணப்பங்களை பிர

தமத்தில் எப்போதும் தாசில்தாருக்காவது அல்லது டெப்பியூடி தாசில்தாருக்காகிலும் செய்துகொள்ளவேண்டும். தர்க்காஸ்துவிண்ணப்பங்களை நேரில் பெற்றுக்கொண்டாலும் சரி, அல்லது தாசில்தார் அல்லது டெப்யுடி தாசில்தார் இவர்கள் மூலமாக கிராம உத்தியோகஸ்தர்வரப் பெற்றுக்கொண்டாலும் சரி, பெற்றுக்கொண்ட உடனே, C. குறிப்பிட்ட ரெஜிஸ்தரில் பதிவு செய்துக்கொள்ள வேண்டும். அதன் பிறகு அவ்விண்ணப்பத்தின் ஸாகதியை கிராமத்திலே தண்டோரா மூலமாய்ப் பிரசித்தஞ் செய்யவேண்டியது. அதைப்பற்றிய ஒரு நோட்டீஸை —A குறிப்பிட்ட நமூனுப்படி ஸ்ரீ கிராமச்சாவடியிலும், தர்க்காஸ்து நிலத்திலும் பதினைந்து நாள் வரையில் ஒட்டி வைக்கவேண்டும். இத்தப் பதினைந்து தினங்கள் முடிந்த உடனே A குறிப்பிட்ட நமூனுப்படி ஒரு யாதாஸ்தை இரண்டுபிரதிகளாகத் தயார் செய்யவேண்டியது. அதை A 1 குறிப்பிட்ட நமூனுப்படியுள்ள நோட்டீஸை தாமாகஆஜரியமில்லாமல் தாசில்தாருக்காவது அல்லது டெப்யுடி தாசில்தாருக்காவது அனுப்பிவிடவேண்டும். அப்படி அனுப்புகையில் அதில் மணியக்காரரும் கர்ணனும் கையெழுத்துப்போட வேண்டும். அத்துடன் மேலே சொன்னபடி அது தண்டோரா மூலமாய் பிரசித்தஞ் செய்யப்பட்டதென்பதற்கு அடையாளமாக குறைந்தது இரண்டு சாட்சிகளின்கையெழுத்தும் செய்விக்கவேண்டும். அந்தப்படி சாட்சி கையெழுத்து போடுகிறவர்கள் அக்கம் பக்கத்திலுள்ள நிலங்களுக்குடையவர்களாக விருக்கவேண்டியது அல்லது முந்திய பாத்தியதையுடைவேறெவர்களாவது இருக்கலாம் இவர்களில் யாருமிராவிட்டாலும் அல்லது இவர்கள் படிக்காதவர்களாயிருந்தாலும் வேறே கௌரவமான இரண்டு குடித்தனக்காரர்களை சாட்சி கையெழுத்து போடச் சொல்லலாம். ஆனால் இந்த விஷயத்தில் அக்கம்பக்கத்திலுள்ள நிலங்களுக்குரியவர்கள் முதலான சாட்சி கையெழுத்து போடாததற்குத்தகுந்த காரணத்தை A குறிப்பிட்ட நமூனுவிடியில் விவரமாய்க் கண்டெழுதவேண்டும். அக்கம் பக்கத்திலிருக்கும் நிலங்களுக்குச் சொந்தக்காராகள் இன்னரென்று காட்டும் A 2 குறிப்பிட்ட நமூனுப்படியுள்ள ஒரு ஜாப்பிதாவையும் அந்த யதாஸ்துடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

A. B. குறிப்பிட்ட யதாஸ்துகளைத்தயார்செய்யும்போது, பற்பல கலங்களில் எழுதவேண்டியவைகள் சரியாய் எழுதப்பட்டிருக்கி

ன்றனவாவென்று ஊகித்துப்பார்க்கவேண்டும். புறகு நிலம் நஞ்சை அல்லது புஞ்சை என்ற விவரம் காட்டியிருக்கவேண்டும். சாகுபடிசெய்கூடிய தரிசு, அல்லது வேறுவித ஆட்சேபணைகளிருந்தாலும் அவைகளை விவரமாய்க்கண்டெழுதவேண்டும், நிலத்தை விண்ணப்பதாரருக்கு அல்லது அனுபோகதாரனுக்குக் கொடுக்கக் கூடாதென்று ஆக்ஷேபணைசெய்த எல்லா கூபர்களின் பெயரையும் கண்டெழுதவேண்டியது. பிறகு கிராமமணியக்காரர் தம்முடைய அபிப்பிராயத்தையும் அதில் கண்டெழுதவேண்டியது.

A. குறிப்பிட்ட யாதாஸ்தை தாசில்தார் அல்லதுடெப்யூடி தாசில்தார் வரப்பெற்றுக்கொண்டு, அதில்கண்டிருக்கும் கிராம உத்தியோகஸ்தர்களின் அபிப்பிராயத்தையும் மற்று பொது ஜனங்களும் பக்கத்து நிலக்காரர்களுஞ் செய்த அட்சேபணையையும் அதன் நியாயத்தையும் அனுசரித்து தற்காஸ்து மனுவை பைசல்செய்வார் அதாவது அவருக்கு யுக்தமாகத்தோன்றினால் மனுதாரனுக்கு அவன் கோரிய நிலத்தை அடமானம் செய்துவிடுவார். அப்படிக்குத்தோன்றாமற்போனால் மனுவைத் தள்ளிப்போடுவார்.

இனாமுக்கு தர்க்காஸ்து நிலத்தை அடமானஞ்செய்கிறதென்பதற்குப்பின் வருவதைக் கவனிக்கவேண்டும்.

(1) பக்கத்தில் நிலமுடையவராயு கிராமத்திய பட்டாதாரராயு மிருக்கிற தர்க்காஸ்து நிலமுழு விஸ்தீரணத்தையும் கோருகிற முந்தின மனுதாரனுக்கு.

(2) பக்க நிலத்தை யுடையவரான தர்க்காஸ்து நிலத்தின் எதாவதொருபாகத்தைக் கோருகிற முந்தின மனுதாரனுக்கு.

(3) பக்க நிலமில்லாத நிலத்தை சிவாஜமையில் சாகுபடிசெய்து அனுபவித்து வரும் உள்ளூர் குடியாகிய முந்திய மனுதாரனுக்கு

(4) பக்க நிலமாக உள்ளூர் வாசியான முந்தினமனுதாரனுக்கு.

(5) பக்க நிலமில்லாத அயலூராரான முந்திய மனுதாரனுக்கு.

ஒரே நிலத்தைக் குறித்துப் பலவிண்ணப்பதாரர்களிருந்தால் மேலே சொன்ன விதிகளை யனுசரித்து பைசல் செய்யவேண்டும். அவ்வாறு அனுசரிப்பதில் ஒவ்வொரு பாத்தியத்திலும் நிலமுழுவில்

நீரணத்தைக் கொருகிறவனும் தர்க்காஸ்து நிலத்திலிருக்கும் மரங்கள், கட்டடங்கள் முதலிய வற்றிற்காக சர்க்காரில் விதிக்கும் மதிப்புத்தொகையைக் கட்ட சம்மதிக்கிறவனுமான. அந்த மனுதாரனுக்கே மேற்படி நிலம் அடமானஞ் செய்யப்படும்.

தாசில்தாரால் பைசல் செய்யப்படுகிற தர்க்காஸ்து விண்ணப்பங்களைக் குறித்த சகலவிவரங்களையும் மணியக்காரர்களுக்கு அனுப்பப்படும். பிறகு அந்த மணியக்காரர்களால் தர்க்காஸ்து விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றது.

தர்க்காஸ்துதாரன் தான் கோரிய நிலம் தன்பேருக்கு அடமானம் செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் மேற்படி நிலத்தை தனதாக்கி வைத்துக்கொண்டு சாகுபடிசெய்ய யாதொரு ஆட்சேபமும்இராது. தாசில்தாரால் செய்யப்பட்ட பைசலானது நியாயவிரோதமானதென்று தர்க்காஸ்து விண்ணப்ப தாரனுக்குத் தோன்றும் பட்சத்தில் மேற்படி தாசில்தாருடைய பைசலை வரப்பெற்றுக்கொண்ட தின்பு மூப்பது தினத்திற்குள் அந்தந்த டிவிஷன் கலெக்டரிடத்தில், தாசில்தார் பைசல் செய்த தர்க்காஸ்து A. மெமோவின் அங்கிகரிக்கப்பட்ட காபியுடன் அப்பீல் செய்துகொள்ள தர்க்காஸ்து விண்ணப்ப தாரனுக்கு பாத்தியம் உண்டு. அதன் மேல் அவர் விசாரித்து அவருக்கு எப்படியுக்தமாகத் தோன்றுகிறதோ அந்தப்படி அவர் பைசல் செய்வார்.

பட்டாவின் படிக்கல்லாமல் வேறு விதமாய் நிலங்களைப் பைசல் செய்வது.

கவுல் நாமாக்கள்.

கவுலின்படி நிலங்களை யெடுத்தக்கொள்வதாய் ரயத்துகள் விண்ணப்பஞ்செய்துக்கொள்ளும்போதெல்லாம் கிராம உத்தியோகஸ்தர்களானவர்கள் தம்முடைய சரஹத்துத் தாசில்தார்களுக்கு உடனே மேற்படி கவுலைப்பற்றி ரிபோர்ட்டுசெய்யவேண்டியது. நாகதாளி மூளாத்துச் செழுத்திருக்கும் தரிசு நிலங்களைப் பரிஷ்காரம் செய்வதற்காவது அல்லது, செடிகள் அடர்ந்த காட்டுநிலத்தை பண்படுத்துவதற்காவது, அல்லது சேற்று நிலத்தை சீர்ப்படுத்துவதற்காவது அல்லது இராமணன்மீசை யென்று சொல்லப்படும் மீண்

ட கோரைப்புற்களைப்போன்ற புல்வளர்ந்திருக்கும் நிலங்களைப் பண்படுத்துவதற்காவது இதைமாதிரி விசேஷகாரியங்களைச் செய்வதற்காவது ஐந்து வருஷம் முதல் பத்துவருஷம் வரையில் இத்தப்படி கவுல் கொடுக்கலாம். கவுல் நாமாக்கள் கொடுக்கும்போது அவைகளின் நிபந்தனைகள் கிராம உத்தியோகஸ்தர்களுக்குத் தெரிவிக்கப்படும். மேற்படி கவுல்காரர்களில் கண்ட நிபந்தனைகளின்படி நடவாததற்குத் தாசில்தாருக்கு ரிபோர்ட்டு செய்வது மேற்படி கிராம உத்தியோகஸ்தரின் கடமையாகும்.

சிவாய ஜமை.

ஒவ்வொரு கிராமத்திலேயும் புறம்போக்கல்லாதவும் குடியானவர்களுக்கு சுவாதீனமில்லாதவுமான நிலங்களிருப்பது வழக்கம். இப்படிப்பட்ட நிலங்களுக்கு அனாதீனமென்று பெயர். மேற்படி அனாதீனமான நிலங்களைப்பற்றிய தர்க்காஸ்து விண்ணப்பங்களை கிராமாதிகாரிகள் வாங்கிக்கொண்டு முடிவுசெய்யலாம். மேற்படி அனாதீனமான நிலங்கள் பொது நன்மைக்காக காப்பாற்றிவைக்கப்பட்டிருப்பது வழக்கம். அப்படிப்பட்ட நிலங்களைத் தர்க்காஸ்து விண்ணப்பஞ்செய்துக்கொண்டு சுவாதீனஞ்செய்துக்கொள்ளாமலே உத்தரவின்றி சாகுபடிசெய்வதற்கு சிவாய ஜன்மை யென்று பெயர். இந்த விஷயத்தைக்குறித்து ஒவ்வொரு மாதமும் தான் சாகுபடி கணக்கு சுற்றிப்பார்க்கும் கணக்கப்பிள்ளையானவன் மேற்கண்டபடிக்கு சாகுபடிசெய்துகொண்டு அதற்கென்றேற்பட்டிருக்கும் B மிமோ நமூனா ஒன்று தயார்செய்து சாகுபடி செய்தவனுடைய கையெழுத்தும் அதில்வாங்கி மேலான அதிகாரிக்கு அனுப்புவார் அதன்மேல் அந்த நிலத்தின் தீர்வையானது சாகுபடிசெய்த குடியானவனிடத்தில் வசூல் செய்யப்படுகின்றது.

பொது நன்மைக்காகக் காப்பாற்றி வைக்கப்பட்டிருக்கும் சர்க்கார் நிலங்களை உத்தரவில்லாமல் சாகுபடிசெய்தால் அதற்கு என்க்ரோச்மெண்டு அல்லது ஆக்கிரமணம் என்று சொல்லப்படும் இந்தவிஷயத்திலுங்கூட B. மெமோ தயார்செய்து கர்ணன் அனுப்புவதின்பேரில் ஜமாபந்தி ஆபீசரால் அக்கிரமத்தீர்வையுடனே அபராத மடங்கு தீர்வையும் விதிக்கப்பட்டு வசூல் செய்யப்படுகின்றது.

தீர்வை வஜா.

1. வஜாகொடுப்பதைப்பற்றிய எல்லா விதிகளையும் மேலே சொல்லியிருக்கின்றது. அவைகளை வொத்திருந்தால்தான் வஜாவுக்காக பொர்சு செய்யலாமென்பதை கிராம உத்தியோகஸ்தர்கள் கவனிக்க வேண்டியது.

2. ஜலத்தட்டினாலும் அல்லது வெள்ளப்பாழினாலும் நிலமானது பயிரிடாமல் விட்டுவைக்கப்பட்டாலும் அல்லது பயிர் முழுவதும் சேதப்பட்டுப் போய்விட்டாலும் அப்படிப்பட்ட நிலத்திற்கு முழுத்தீர்வையும் வஜாசெய்ய உத்திரவு கொடுக்கப்படும். மேற்சொன்னபடி ஜலக்குறைவிற்கும் அல்லது வெள்ளப்பாழிற்கும் நிலத்தின் சொந்தக்காரர்கள் காரணமாயிருந்தால் அப்படிப்பட்டவஜா செயய உத்தரவு கொடுக்கப்படமாட்டாது.

ஜலவருமானக் முகாந்தரமாயிருக்கும் ஜலாதாரக்கட்டத்திற்கு வாலாயமாய்ச் செய்யப்படும் மராமத்துக்கூ அதற்குச் சம்மந்தமான குடியானவர்கள் செய்யாமல் அஜாக்கிரதையினாலேவிட்டுவிட்டால் அப்படிப்பட்ட விஷயங்களில் வஜாகொடுக்க உத்திரவு ஆகமாட்டாது. தீர்வை கட்டப்பட்ட எந்தநிலமாவது முழுவதும் பயிர் செய்யாமல் விட்டுவைக்கப்பட்டிருந்தாலும் அல்லது அந்த நிலத்தின் பயிர் முழுவதும் சேதமாய்ப்போய்விட்டாலும் அப்போது தீர்வை வஜா செய்ய உத்திரவு கொடுக்கப்படும். நிலங்களின் ஒருபக்கம் பயிரிடாமல் விட்டுவைத்திருந்தாலும் அல்லது ஒரு பாகத்திலுள்ள பயிர் சேதமாய்ப்போனாலும் அதற்குத்தீர்வை வஜா கொடுக்கப்படமாட்டாது.

மேற்படி தீர்வை வஜா நன்செய் நிலங்களுக்கு மாத்திரந்தான் கொடுக்கப்படும். புன்செய் நிலன்களுக்குக்கொடுக்கபடமாட்டாது. குடியானவனுக்கு மாசூல் சேதமாய்விட்டால் அலன்கவர்ன்மென்ட்டாருக்கட்டவேண்டிய மொத்தபேரீஜ் தொயிலிருந்து மாசூல் சேதப்பட்ட நிலத்தின் தீர்வையைகழித்துவிட கவர்மென்டார் உத்திரவு செய்கிறார்கள் நிலத்தீர்வை வஜா செய்யப்படுமேயல்லாமல் ரோட்டுஸெஸ்வரிகளுக் வஜா கொடுக்கப்படமாட்டாது.

வஜாபெறவேண்டிய குடித்தனக்காரன் பயிரிடாமற் போட்டுவிட்டதாகிலங்களுக்காலுக்குறிப்பிடப்பட்டிருக்கும்காலகிர்ணயத்

திற்குள்ளாக தாலுக்கா தாசில்தார்களுக்கு மனு கொடுத்துக் கொள்ளவேண்டும். மாகுல் சேதம் சாலி முதலிய விஷயமாஞல் அந்த கிராமத்திய ஜமாபந்திக்கு முன்னமே தீர்வைவ ஜாவுக்கு உத்திரவாகவேண்டுமென்று தாசில்தாருக்கு மனுகொடுத்துக்கொள்ள வேண்டும். இப்படிபபட்ட மனுக்களுக்கு ஸ்டாம்பு ஒட்டவேண்டிய அவசியமே இல்லை. இம்மனுக்களைத் தாசில்தார்வரப்பெற்றுக் கொண்டு ஸ்தலங்களை பார்வையிட்டு ரிபோர்ட்டு செய்வதற்காக ரிவினியூஇனிஸ்பேக்டருக்கு அனுப்புவார். அவர் அந்தந்த கிராமத்திற்குத் தாம் நேரேபோய் மனுவில்கண்ட ஸ்தலங்களை நேரில் பார்வையிடவேண்டியது. தீர்வை வஜா கொடுக்கவேண்டிய அவசியமா என்பதற்குத்தம்முடைய அபிப்ராயத்தையும் காரணத்தையும் கண்டு 2-ம் நெம்பர் அடங்கல் கணக்கில் எழுதவேண்டியது. மேற்படி மனுவை தம்முடைய ரிமார்க்கு ஸகிதம் தாசில்தாருக்கு அனுப்பிவிடவேண்டியது. ரிவினியூஇனிஸ்பேக்கட்டர் பார்வையிட்டதைத் தாசில்தாரானவர்தாமும்திரும்பபார்வையிடவேண்டும். ஒரு கிராமத்தின் தீர்வை வஜாத்தொகை ரூபா 200-க்கு மேற்பட்டால் ஜமாபந்தி நடத்தும் ஆபிஸாலேயாவது அல்லது அந்த டிவிஷன் கலெக்டராலேயாவது மேற்பார்வையிடுவது அவசியம். பிறகு ஜமாபந்தி பைசல்ஆகும் காலத்தில் மேற்பார்வையிட்ட ஆஸாமிகளின் ஷராக்களையும் குடித்தனக்காரர்கள் சொல்லிக்கொள்ளும் உரிமைகளையும் அனுசரித்து வஜா கொடுப்பது நியாயமென்று தோற்றினால் ஜமாபந்தி நடத்தும் ஆபிஸர் தீர்வையைக்கழித்து விடும்படி உத்திரவு செய்வார்.

சாலி, பயிர்ச்சேதங்கள் முதலியவற்றிற்காகத்தீர்வை வஜா செய்து கொடுத்துக்கொள்ளும்போது, சாலியாய்ப்பட்டுப்போன பயிர்களையும், சேதமாய்ப்போன பயிர்களையும் ஆடு மாடு மேய்க்காவிடாதபடி, நிலங்களைப்பார்வையிடவரும் உத்தியோகஸ்தர்கள் வந்து பார்வையிட்டு திருப்தியடைகிறவரையில்காப்பாற்றி வைக்கவேண்டும்.

———

இராஜீ நாமா.

எந்தகிராமத்தில் யாதொரு நிலமானது சாகுபடிசெய்வதற்கு தகுதியல்லாமல் வெள்ளம் முதலியவற்றால் சேதமாய்விட்டானும் அல்லது குடித்தனக்காரனுக்கு சாகுபடி செய்ய சக்தியில்லாமல் போனாலும் மேற்படி குடித்தனக்காரன் தான் சுவாதீனத்திலிருக்கிற அப்படிப்பட்ட நிலங்களை தன்னுடைய பட்டாவிலிருந்து நீக்கி சர்க்கார் சுவாதீனஞ்செய்து கொள்ளும்படி மனுவு அந்தந்த சரஹத்தைத் தாசில்தாரிடம் கொடுத்துக்கொள்ளலாம். இப்படிப்பட்ட மனுவுக்கு ராஜீநாமா என்று பெயர்.

இந்த ராஜினமா மனுவை குடித்தனக்காரனானவன் அந்தப்பசலிக்குத்தான் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய தீர்வைபாக்கியைச்செலுத்திவிட்டு மற்றொருவன் அந்த நிலத்தைக் கைப்பற்றிக்கொண்டு அனுபவிப்பதற்குத் தகுதியாக மறுபசலி ஆரம்பத்திற்கு முன்னமே மேற்சொன்னபடி தாசில்தாரிடத்தில் கொடுத்துவிடவேண்டும். தாசில்தார் மேற்படி மனுவை வரப்பெற்றுக்கொண்டு மனுதாரன் மனுவில்கோரியபடி நிலத்தை பட்டாவினின்று நீக்கிவிடும்படிக்கு உத்திரவு அனுப்புவார் அதன்மேல் கிராமாதிகாரியால் அந்த உத்திரவு நடவடிக்கைக்குக் கொண்டுவரப்படும்.

குறிப்பிட்டதேதிக்குப்பின்பு கொடுக்கப்படும் ராஜினமாக்கள் பெற்றுக்கொள்ளப்படமாட்டா அவைகளின்படி பிரவர்த்திக்கவும் கூடாது.

ஒருவனுல் ராஜினமா கொடுக்கப்படும் நிலமானது மற்றொருவன் பிரவேசித்து சாகுபடிசெய்வதற்கு ஏற்றதாயிருக்கவேண்டும். எப்படியென்றால் ஒருவன் ஒரு நிலத்தின் மத்தியபாகத்தை கிவர்த்திபண்ணிக்கொண்டு சுற்றிலுமிருக்கிற பாகத்தை அவன் வைத்துக் கொள்ள அனுமதி கொடுக்கப்படமாட்டாது. ஏனென்றால் மற்றொரு ரயத்திற்கு மேற்படி மத்தியபாகத்தை வைத்துக்கொள்ள சாத்தியப்படமாட்டாது.

வெள்ளம் வெட்டியகாரணத்தினுல் சாகுபடிசெய்வதற்குத் தான் நிலத்தின் ஞாபகத்தைத் தகுதியில்லாமல் செய்கிற ஒரு ரயத்தானவன் அந்த பாகத்திற்கு ராஜினமாகொடுத்து மற்ற பாகத்தைவைத்துக்கொள்ளும்படி அவனுக்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

கூட்டுப்பட்டாதாரர்களில் ஒருவன் மேற்படி கூட்டு அனுபோக நிலத்தில் தனக்கு ஏற்பட்ட ஹக்குக்கு மாத்திரம் ராஜி நாமா கொடுத்தால், மேற்படி மனுவானது இதரகூட்டு அனுபோகதாரர்களுடைய சம்மதியில்லாமல் ஒப்புக்கொள்ளப் படமாட்டாது.

நிலங்களைப்பற்றிய ராஜி நாமாக்களைத் தபால் மூலமாய் அனுப்புகிற பட்சத்தில் அவைகளை அங்கீகரிக்கக்கூடாது. மேற்படி ராஜி நாமாக்களை நேரிலே பட்டாதாரனுவது அல்லது சட்டப்படி அவனுடைய அனுமதி பெற்ற பிரதி நிதியாவது கொடுத்துக்கொண்டால்தான் அது அங்கீகரிக்கப்படும்.

நிலங்களைக் குறித்த இராஜி நாமாக்களுக்கு (ஸ்டாம்பு டியூடி) முத்திரைத் தீர்வை நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது.

இனும் நிலங்களைப்பற்றிய ராஜி நாமாக்களை அதில் சம்பந்தப்பட்டபேர்வழி நேரிலே தாசில்தாரிடம் கொடுத்துக்கொள்ளவேண்டும். அவைகளை கிராம உத்தியோகஸ்தர்கள் வாங்கக்கூடாது.

நிலத்திற்காக ராஜி நாமாகொடுக்கையில் அதற்கென்றேற்பட்டிருக்கும் நமூனாப்படி தஸ்தாவேஜு எழுத அதன் மூலமாய் விட்டுவிடவேண்டும் அதில் கிராமாதிகாரியும், கர்ணமும் கையெழுத்துப் போடவேண்டும். பிறகு மேற்படி மனுக்களை அங்கீகரிக்கலாம் அல்லது கூடாதென்பதைபற்றி கிராமாதிகாரியும் கர்ணமும் தெரிவிக்க அபிப்பிராயங்களுடன் தாசில்தாருடைய உத்திரவுக்கு மேற்படி மனுக்களை அனுப்பிவிடவேண்டும்.

ஒரு தடவை கொடுத்துக்கொள்ளப்பட்ட ராஜி நாமாவை அழுலுக்குக்கொண்டு வரவேண்டும். அதை ரத்து செய்துக்கொள்ளும்படி அனுமதி கொடுக்கக்கூடாது.

பட்டா மாறுதலைக் குறித்தது.

நிலமானது ஒருவனுடைய சுவாதீனத்திலிருந்து மற்றொருவனுடைய சுவாதீனப்படும்பொழுது பட்டா மாற்றவேண்டிய அவசியம் உண்டாகின்றது. அதாவது யாதொரு பட்டாதாரனானவன் தன் சுவாதீனத்திலிருக்கப்பட்ட நிலங்களை அயலாருக்கு விற்றலும் தானஞ்செய்தாலும், தனக்குப்பின் அனுபவிக்கும்படி மாணசாசனம் எழுதி வைத்தாலும், பரிவர்த்தனை செய்தாலும் ஆகிய இந்தக்

காரணங்களினாலே நிலமானது பட்டாதாரனுடைய சுவாதீனத்திலிருந்து மற்றொருவனுடைய சுவாதீனப் படுகின்றது.

பவுத்தி விபரம்.

—

பட்டாதாரனுகிய தகப்பன் இறந்தபோனால் அவன் சந்ததியார்பேரில் மேற்படி பட்டாவானது செய்விக்கவேண்டும். இந்த விஷயத்திற்கு மனுவு கொடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லை ஒவ்வொரு வருஷத்திலும் இறந்து போகும் பட்டாதாரர்களுடைய பேர்களைக்குறித்து ஜாப்தா தயார் செய்து அவர்களுடைய பெயரை நீக்கி அடுத்த சந்ததியாருடைய பெயர்களைத்தாக்கல் செய்துகொள்ளும் பொருட்டு தாசில்தாருடைய உத்திரவைப்பெற்றுக்கொண்டு பட்டாதாரர்கள் பெயர்களை மாற்றுவிப்பது கிராமக் கணக்குப் பிள்ளையினுடைய முக்கிய கடமைகளில் ஒன்றுயிருக்கின்றது.

பட்டாதாரன்இறந்துபோகாமல் பாரியாய்ப் போய்விட்டால் மேற்படியான் விஷயத்தில் அவன் சந்ததியார் அந்த நிலங்களையனுபவித்து வந்தாலும் அவன் பாரியர்ப்போய்விட்ட சங்கதிதெரிந்த பின்பு 12-வருஷங்கள் வரையில் பட்டாதாரர்கள் பெரை மாற்றக் கூடாது. அந்தப்பனிரெண்டு வருஷங்களுக்குப் பிறகும் அவர் திரும்பிவராமற் போனால் அப்படிப்பட்டவரை இறந்துபோனவராக எண்ணி, மேலே சொன்னபடி தாசில்தார் உத்திரவை பெற்றுக் கொண்டு, மேற்படி சந்ததியார்பேரில் பட்டாவைச்செய்து வைக்க வேண்டியது.

யாதாமொருவன் சுவாதீனத்திலுள்ள நிலத்தை விற்கிரயம் அல்லது தானத்தினால் பராதீனப்படுத்தும்பொழுது மேற்படி விற்கிரயம் அல்லது தானம் முதலிய சாசனங்களை சப் ரிஜிஸ்டர் ஆபீஸில் ரிஜிஸ்டர் செய்துகொடுக்கும்போது, மேற்படி சப் ரிஜிஸ்டர் ரிடத்திலேயே, பட்டாதாரன் நிலத்தைப்பெற்றுக்கொள்பவர்பேருக்கு பட்டா மாறுதல் செய்யும்படிக் குறிப்பிட்ட நமூனாவில் ராஜினாமா வெழுதி அதில் தானும் பட்டாபெற்றுக்கொள்ள விரும்புவனும் கையெழுத்துசெய்து கொடுக்கவேண்டியது அவ்வாறு கொடுக்கப்பட்ட ராஜினாமாக்களை சப்ரிஜிஸ்டராரானவர் தாலூக்கா தாசில்தாருக்கு அனுப்பி பட்டாமாறுதல் செம்பவேண்டியதற்கு வேண்

டிய ஏற்பாடுகளைச்செய்வார். அப்படிக்கு சப்ரிஜிஸ்டரார் ஆபீ
வில் ராஜினமாகொடுக்கத்தவரினால் இருதரத்தாருக்கும் சௌகரிய
மானபோது ரிவினியூ இன்ஸ்பெக்டர் கிராமத்திற்கு வருங்காலத்
தில் ராஜிநாமாக்களைக்கொடுத்து பட்டா மாற்றிக்கொள்ளலாம்.

பட்டாதாருனுக்குச் சமீப தாயாதியா யில்லாத வேறொருவன்
ஒரு நிலத்தை சரியான தகவலில்லாமல் யாதாமொரு காரணத்தினா
லே அடைந்து 12-வருஷங்களுக்குமேல் அனுபவித்து வந்தால் மே
ற்படி அனுபோகத்தை மூன்னிட்டுக்கொண்டு அனுபோகதாரன்
தன்பேரில் பட்டா செய்யும்படி மனுகொடுத்து பட்டாவை மாற்றி
க்கொள்ளலாம்.—நிலத்தை கிரயமூலமாய்ப் பெற்று அனுபவித்து
வரும் அனுபோகதாரனுக்குப் பட்டாதாரன் சம்மதித்து வராமற்
போனாலும் அல்லது கிராமத்தில் ஆஜரில்லாவிட்டாலும் மேற்படி
நிலத்தை யனுபவித்து வருபவன் தன்கிரயச் சாசனத்தை முன்னிட்
தோன் ஒருவனுகவே மனுக்கொடுத்து பட்டாவை மாற்றிக்கொள்
ளலாம்.

மேற்சொல்லபட்ட இரண்டு விதமாய் நிலத்தை யனுபவித்து
வருபவன் மாத்திரம் மனுகொடுத்து பட்டாவைமாற்றிக்கொள்வதா
கவிருந்தால் அப்படி விஷயங்கள் பட்டா மாற்றுவதில் ஆட்சேபனை
யுள்ளவர்கள் குறிப்பிட்ட தேதிக்குள், தாசில்தாரிடம் ஆஜராகி ஆட்
சேபனைகளைச் சொல்லிக்கொள்ளவேண்டுமென்கிற விவரங்களைக்
கண்டு ஒருநோட்டீஸை பட்டாதாரர்களுக்கும் கிராமத்திற்கு தாசில்
தாரவர் அனுப்பவேண்டும். குறிப்பிட்ட தேதிக்குள் பட்டா
தாரர்கள் ஆட்சேபனை சொல்லிக்கொள்ளாவிட்டாலும் அல்லது
அவர்கள் ஆட்சேபனைசொல்லியும், அனுபோகதாரனுக்குப்பட்டா
செய்வது யுக்த மென்று தாசில்தாருக்குத் தோன்றினால்மனுதாரன்
பேரிலே மேற்படி பட்டாவைச் செய்து விடுவார்.

ஒருவன் பேரில் பட்டாவிருந்து நிலத்தை யனுபவித்து வருப
வனுக்கு ரிவினியூ சட்டப்படிக்கு பட்டா செய்வதற்கு அனுகூலமி
ல்லாமல் இருந்தபோதிலும் அனுபவித்து வருகிறவன் பாத்தியத்தை
க்குரிவினியூ இலாகாதாரர்கள் நிலத்திற்கு ஏற்பட்ட வரியை வசூல்
செய்வதற்கு அனுகூலமாக, ரிவினியூ சட்டத்திற்குட்பட்டு பட்டா
தாரன் இன்னனென்று ஏற்படுத்த கிறார்களே யல்லாமல் நிலபாத்தி
யத்தையை ஸ்தாபிப்பவர்களல்லர். ஆகையினாலே பாத்தியப பாத்
தியதையைப் பற்றின விவகாரங்கள் அதிகாரம் சிவில் கோர்ட்டாரா

லேயே ஸ்தாபிக்கப்படவேண்டும். பட்டா தன்பேரிலில்லாவிட்டாலும் அனுபோகதாரன், பட்டாதாரர்களைப் போலவே கிராமமுஸ்சர்க்கார் தீர்வையை செலுத்திக்கொண்டு அனுபவித்துக்கொண்டு வருவதில் யாதொரு ஆட்சேபனையும் கிடையாது. மணியக்காரர் பட்டாதாரரல்லாத அனுபோகதாரரிடத்திலும் தீர்வையை வசூல் செய்யலாம் அனுபோக நிலத்தின் தீர்வைக்காக அனுபோகதாரனுடைய சொத்துக்களையும் மணியக்காரர் ஜப்தியும் செய்யலாம். பட்டாவில் சேர்ந்த அனுபோகதாரனுடைய சுவாதீனத்திலில்லாத நிலத்தீர்வை விஷயமாய் அனுபோக விவரங்கள் மணியக்காரருக்குத் திருப்திகரமாய்த் தெரிந்திராத விஷயத்தில் ஜப்தி செய்வது தப்பாகும்.

ஜமாபந்தி.

1. ஜமாபந்தி என்றால் வருஷாந்தர ஸெட்டில்மெண்டு என்னப்படும். இந்த ஜமாபந்தி வருஷத்துக்கொருதரம் நடத்தப்படும். வருஷமுழுவதும் கிராம உத்தியோகஸ்தர்கள் செய்து வருகிற சர்க்கார் அலுவல்களை பரிசோதனைசெய்து முடிவுசொல்லப்படும். அப்படிப் பரிசோதனைசெய்யும்பொருட்டு பிரதி வருஷத்திலேயும் இரண்டு அல்லது மூன்று தாலூக்காக்களுக்கு ஒரு ஆபீசராக ரிவினியூபோர்ட்டாருடைய யுக்தானுசாரம் அந்தந்த ஜில்லாவிலுள்ள டிவிஷனல் ஆபீசர்கள்குறிப்பிட்ட தாலூக்காகளுக்கு நியமனம் செய்யப்படுகிறார்கள். அந்த ஆபீசரானவர் கிராம உத்தியோகஸ்தர்களுடைய அலுவல்களையும் குடித்தனக்காரர்களுடைய முறைப்பாடுகள் தாசில்தார், ரிவினியூ இனிஸ்பெக்டர் இவர்களுடைய ஆபிப்பிராயங்களையும் சேரில் விசாரணை செய்து நியாயமாய்ப் பரிசீலனை செய்வார்கள். இவைதான் ஜமாபந்தியில் நடத்தவேண்டிய வேலைகள்.

2. மேற்படி ஜமாபந்திவேலையில் தாமதம் உண்டாகாதபடி கர்ணங்களானவர்கள் ஜமாபந்திக்காலத்தில் ஸெட்டில்மெண்டு செய்யும் உத்தியோகஸ்தர்களுடைய உத்திரவுகளை யனுசரித்து பதிவுகளுக்கெல்லாம் காலியாக இடங்களை விட்டுவைக்கவேண்டியது. இத்துடன் தங்கள் கணக்குகளை நாளது தேதிவரையில் எழுதிவைக்கவேண்டும். முந்தியவருஷத்து ஜமாபந்தியிலே தங்கள் கணக்குகளில் ஏற்பட்ட பிழைகளையும் விட்டுப்போன அச்சுகளையும் மறு

படியும் கோரும்படி விடாமல் கஷ்டப்பட்டுப் பார்க்கவேண்டும். மற்ற எல்லாக்கணக்குகளுக்கும் ஆதாரமாயிருக்கும் 2-ம் நம்பர் அடங்கல் கணக்கை பசலியின் ஆரம்பத்திலேயே தயார்செய்துவிட வேண்டும். சாகுபடிகாலத்தின் கடைசிவரையில் வைத்திருக்கக் கூடாது. சாகுபடி நடந்துகொண்டிருக்கையிலேயே அந்த விவரத்தை மாதந்தோறும் 25-ல், ரிவினியூ இனிஸ்பெக்டருக்குக் கிரமமாய் அனுப்பவேண்டிய 1-ம் நெம்பர் மாதாந்தர சாகுபடிகணக்கிலும் அடங்கலிலும் பிரித்தவைக்கவேண்டும். விட்டுவிடப்பட்ட விஷயங்கள் டிரான்ஸ்பர்கள், தர்க்காஸ்துகள், ஆகிய இவைகளைக் குறித்து அப்போதைக்கப்போது தாலூக்காவுக்கு ரிபோர்ட்டுசெய்யவேண்டும். அப்படிச்செய்வதனால் கர்ணங்கள் தங்கள் கணக்குகளில் அப்போதைக்கப்போது எல்லா மாறுதல்களையும் குறித்துவைக்கச் சாதகமாகும்படியாகத் தாலூக்கா உத்தியோகஸ்தர்கள் அப்போதைக்கப்போதே உத்தரவுகளை ஜாரிசெய்துவிடவேண்டும்.

3. 20-ம் நம்பர் கணக்காகிய பெய்கிற மழையின் அளவையும், ஜலாதாரங்களில் வந்து சேரும் ஜல வருமானத்தையும் காட்டுகின்ற ரிஜிஸ்டரையும் முன் சொன்னபடியே திருத்தமாக நாளது தேதிவரையில் தயார்செய்து ரிவினியூ இனிஸ்பெக்டருக்குக் கிரமமாக அனுப்பிவர வேண்டும். பயிரிடாமல் விடப்பட்டிருக்கும் நிலங்களைப்பற்றியும், சேதமாய்ப்போனப் பயிர்களைப் பற்றியும் அப்போதைக்கப்போது பரிசோதனை செய்வதற்கு சாதகமாக விருக்கும்படி ஜல வருமானக் குறைவு அல்லது ஜலம் அதிகத்தினால் உண்டாகும் தீர்வைவஜாவைக்குறித்த பாத்தியதைகளை உடனுக்குடனே ரிவினியூ இனிஸ்பெக்டருக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டும். அனுமதி பெற்றுக்கொள்ளாமல் அனுபவித்து வரும் நிலங்களைப் பற்றிய விஷயங்களையெல்லாம் தர்க்காஸ்து விதிகளில் நிர்ணயிக்கப் பட்டிருக்கிற நமூனாக்களின்படி மாதாந்தர ரிபோர்ட்டு செய்துவர வேண்டும். பட்டாதாரர்களும் இனம் தாரர்களும் இறந்துபோன சங்கதிகளையும் மாதாந்தரம் 10-A குறிப்பிட்ட நமூனாப்படி ரிபோர்ட்டு செய்யவேண்டும். இப்படிச்செய்யத் தவறுவதனாலே கணக்குகளை முடிவுகட்ட எப்போதும் காலதாமதம் உண்டாகின்ற தென்பதை கணக்குப்பிள்ளைகள் கவனிக்கவேண்டியது.

4. ஜமாபந்திக்கு முன்னமே 2-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு தயார்செய்யப்படவேண்டும். 14 ம் நம்பர் கணக்கானது அநேகமாக

ஜமாபந்திக்குச் சற்று முன்னேதான் தயார்செய்யப்படுகிறது, இதலே கிராம நிலுவைகளையும் தாலுக்கா நிலுவைகளையும் ஒத்தபார்ப்பதென்னும் ஜமாபந்தி ஆபீஸருடைய முக்கியமான வேலைக்குத் தடையாகின்றது. வசூல்களைத் தண்டல் செய்யும் அன்றுடம் தவறாமல் அதைக்கணக்கில் ஏற்றவேண்டும். டிமாண்டு, வசூல் கணக்கும் நிலுவைக் கணக்கும், 16-ம் நம்பர் வட்டிக் கணக்கும் 17-ம் நம்பர் பிரதி இரிசாலுடனே அனுப்பப்படவேண்டும். இது போன்ற ஷரத்துகள் கர்ணம் வைக்கவேண்டியஎறக்குறைய எல்லாக்கிராமக் கணக்குகளுக்குங்கூட பிரயோகமாகின்றன.

5. கிராமக்கர்ணங்கள் ஸெட்டில்மெண்டு செய்யும் ஆபீஸருடைய பரிசோதனைக்காக ஆஜர் படுத்தவேண்டிய ரிகார்டுகளாவன:—

கர்ணங்கள் வசத்திலிருக்கும் கிராம உருவப்படங்கள் ஸெட்டில்மெண்டு ரிஜிஸ்டர்கள் புலங்களைக் குறித்த புஸ்தகங்கள், டிஸ்திரிகட்டு கெஜட்டின்பைல்கள்—கிராமஉத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பப்பட்ட ஸர்க்யுலர் ஆர்டர்கள். C. குறிப்பிட்ட தர்க்காஸ்து ரிஜிஸ்டர், A. B. குறிப்பிட்ட தர்க்காஸ்து மெமோராண்டங்களின் பைல் [illegible]ப் டிவிஷன்களின் பைல்கள் ஆகிய இவைகளையும் முன்பார்ராக்க[illegible]சான்னவைகளையும் இத்துடனே ஸர்வே கருவிகளையும் கிராமத[illegible]த செட்டில்மெண்டு செய்யத்தொடங்கும்போது மேற்படி ஸெட்டில்மெண்டு ஆபீஸருக்கு முன்னே ஆஜர் படுத்தவேண்டியது. உருவப்படங்களும், ஸெட்டில்மெண்டு ரிஜிஸ்டரும் நல்ல ஸ்திதியிலில்லாவிட்டால் மேற்படி கர்ணங்களின் செலவிலே புதியவைகளைத்தாலுக்கா கச்சேரியிலிருந்து வாங்கிக்கொள்ள உத்திரவு செய்யப்படும்.

6. (1) ஜமாபந்தியிலே குடித்தனக்காரர்கள் கவர்ன்மெண்டாருக்கு செலுத்தவேண்டிய தீர்வைத்தொகை இவ்வளவென்பதையும் சாவி, தரிசு, வெள்ளப்பாழ், இவைகளுக்கு வஜா நியாயப்பிரகாரம் கழிவடைசெய்வதும் அபராதத் தீர்வைவிதிப்பதும் ஆகிய இவைகள் ஜமாபந்தி நடத்தும் ஆபீஸரால் முடிவாக தீர்மானிக்கப்படும்.

(2) ஜமாபந்தி ஆபீஸர்கள் தங்களுக்கு ஏற்பட்ட தாலுக்காக்களிலே குடிகளுக்கு மிக ஸௌகரியமாகவும் முக்கிய

மாயுமிருக்கிற பலவிடங்களிலே முகர்ஞ்செய்து தாங்கள் அலுவல்களை நடத்துவது வழக்கம்.

(3) அந்தந்த கிராம ஜமாபந்தி நடக்குந்தேதியையும் ஆபீஸர் முகாஞ்செய்துகொண்டிருக்குமிடத்தைக்குறித்தும்நோட்டிஸ் ஒன்று தயார் செய்துகிராம உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பி அவர்கள் மூலமாய் கிராமக்குடிகளுக்கு தெரிவிக்கும்படி உத்திரவு செய்வார்கள்.

(4) முறைப்பாடுகளையுடைய ஒவ்வொரு குடித்தனக்காரனும் குறுப்பிட்டதேதியில், ஜமாபந்தி ஆபீஸர் முன்னே ஆஜராகி, சாகி, தரிசு, வெள்ளப்பாழ் இவைகளைக்குறித்தும் வஜா செய்து கொடுக்கவேண்டிய விஷயத்தைக்குறித்தும் இன்னம் பலவகைகளில் தமக்குண்டான குறைகளை மேற்படி ஆபீஸரிடம் நேரிலே சொல்லிக்கொள்ளவேண்டும். ஜமாபந்தி ஆபீஸரானவர் கீழ் உத்தியோகஸ்தர்களாகிய தாசில்தார் ரிவினியூ இன்ஸ்பேக்ட்டர் இவர்களுடைய அபிப்ராயங்களையும் குடிகளுடைய முறைப்பாடுகளையும் அனுசரித்து பைசல் செய்வதுமுண்டு. அல்லது அவசியமானால் தாம்மே நேரில் போய்ப்புலங்களையும் ஜாகாக்களையும் பார்வையிட்டுப் பைசல் [illegible]துமுண்டு.

5. ஒவ்வொரு ஜில்லாவிலும் அந்தந்த ஜில்லாகலெக்ட்டர்களுக்கு பிரதி நிதியாக ஜமாபந்தி ஆபீஸர் காரியம் நடத்துவதினாலே கலக்கட்டராலே பைசல் செய்ததாகவே பாவித்துக்கொள்ளவேண்டியது ஜமாபந்தி ஆபீஸர்களால் முடிவு செய்யப்படும் விஷயங்களைக்குறித்து ரிவினியூ போர்ட்டாருக்குத்தான் அப்பீல் செய்துகொள்ளவேண்டும்.

பவுண்டு

அல்லது

பட்டி தொட்டிகள்.

1. பவுண்டு என்றால் குடிகளின் பயிர்களை அக்கிரமமாய் அழிக்கும் ஆடு மாடுமுதலிய கால் நடைகளை அடைப்பதற்காக அநேக கிராமங்களில் சர்க்காரால் கட்டப்பட்டிருக்கும் கட்டடத்திற்குப் பெயர். இதற்குப் பட்டி என்றும் தொட்டி என்றும் சொல்லுவார்கள். மேற்படி பவுண்டுகள் கிராமாதிகாரிகளின் வசத்தில் ஒப்பிவித்திருக்கப்படும். அத்தப்பவுண்டில் ஜனங்களாலடைக்கப்பட்ட கால் நடைகளுக்குச் சொந்தக்காரன் வந்து அபராதங்கட்டி மீட்டுக்கொண்டுபோகும்வரையில் தீனிபோட்டுத் தண்ணீர்வார்த்துவரவேண்டியது. மேற்படி கிராமாதிகாரியின் கடமை. இத்தப்பவுண்டு மரமேஜ்மென்டு ஹோதாவில் அவருக்குப் பவுண்டு கிபர் என்றுபெயர்.

2. ஆடுமாடுமுதலிய கால் நடைகள் பவுண்டுக்குக்கொண்டு வரப்பட்டால், பவுண்டுகீபரானவர் தம்முடைய ரெஜிஸ்டரில்:—

(1) மிருகங்களின் சங்கியை விவரத்தையும்

(2) அவைகள் அத்தப்படி கொண்டுவரப்படுந் தேதியையும் மணி நேரத்தையும்.

(3) பிடித்தவனுடைய பெயரையும் இருப்பிடத்தையும்.

(4) தெரிந்திருந்தால் சொந்தக்காரனுடைய பெயரையும் இருப்பிடத்தையும் ஆகிய இவைகளைப் பதிவுசெய்துக் கொண்டு, பிடித்தவனுக்காவது அல்லது அவனுடைய ஏஜண்டுக்காவது, பதிவுக்கு ஒரு நகல் கொடுக்க வேண்டும்.

(5) இதற்காக ஏற்பட்டிருக்கும் ரிஜிஸ்டரில் இனம்வாரியாய் ஆண், பெண், கன்று அல்லது குட்டி, நிறம், அடையாளம் முதலான விவரங்களையும் கூட கண்டு பதிவு

செய்துக்கொண்டு கால்நடைகளைப் பட்டிகளிலடைத்த ஆளினிடத்தில் மேற்படி ரிஜிஸ்டரில் கையெழுத்து வாங்கவேண்டும்.

3. பட்டியிலடைப்பட்ட கால்நடைகளை மேற்படி சொந்தக் காரன் வந்து மீட்டுக்கொண்டு போகும்வரையில் அவைகளைத் தம் முடைய சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு அவைகளுக்குத் தீனி போட்டுத் தண்ணீர்க்காட்டி பத்திரமாய்க் காப்பாற்றிவரவேண்டி யது பவுண்டி கீபருடைய கடமையா யிருக்கிறது.

4. சொந்தக்காரர்கள் தங்கள் கால்நடைகளை மீட்கவருகை யில், அவர்களிடமிருந்து அவர்கள் கால்நடைகளை அஜாக்கிரதை யாய் விட்டதற்கு ஏற்பட்டிருக்கும் அபராதத்தையும், தீனிச்செல வையும் வசூல்செய்துக்கொண்டு அவர்களுடைய கால்நடைகளை யவரவர்களிடம் ஒப்புவித்துவிடவேண்டும்.

5. கால்நடைகளை மேலேசொன்னபடி சொந்தக்காரர்களிட ம் ஒப்புவிக்கும் முன்னமே முன்போலவே ரிஜிஸ்டரில், சொந்தக் காரர்கள் சுவாதீனஞ்செய்யப்பட்ட கால்நடைகளின் விவரங்களைப் பூர்த்திசெய்துகொண்டு அந்த ரிஜிஸ்டரில் மேற்படி சொந்தக்காரர்களின் கையெழுத்தும் சாட்சி கையெழுத்தும் வாங்கவேண்டும். அவர்க ளால் செலுத்தப்படும் அபராதத்தொகைக்கும் தீனிச்செலவுக்கும் நமூனாப்படிக்கு ரசீது கொடுக்கவேண்டும்.

6. பிரதிமாதக்கடைசியில் கால்நடைகள்பட்டியிலடைக்கப் பட்டவிவரமடங்கிய ரிஜிஸ்டர் காப்பியையும் வசூலான அபராதப் பணம் வகைவாரையும் தாலூக்காவுக்கு அனுப்பிக்கொண்டுவர வேண்டும்.

7. பவுண்டிகீபர்களுக்கு கிரமபரிகாரத்திற்காக அபராத வசூலில் ஏற்பட்டவீதப்படிக்குக் கம்மிஷன்பணமும் தீனிச்செலவுக் காக வசூல்செய்தபணமும் தாலூக்காவிலிருந்து மேற்படி பவுண்டி கீபர்களுக்கு அனுப்பப்படும்.

8. பட்டியிலடைக்கப்பட்ட கால்நடைகளைச் சொந்தக்காரர் பதினைந்து (15) நாள் ஆகியும் வந்து மீட்டுக்கொள்ளாமற் போனா லும் அல்லது சொந்தக்காரர் இன்னரென்று ஏற்படாதபோதும்

87

இத்தகைய விவரங்களை போலீஸ்ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீஸருக்கும் மாஜிஸ்டிரேட்டுக்கும் ரிபோர்ட்டு செய்யவேண்டும்.

9. சப்மாஜிஸ்டிரேட்டார் உத்திரவு கொடுத்தின்பேரில் போலீஸ்காரையும் கூடவைத்துக்கொண்டும் குறிப்பிட்டதேதியில் குறிப்பிட்டஇடத்திலேபகிரங்கமாய் ஏலத்தில் மேற்படி பேவார் சான கால்நடைகளைவிற்பனை செய்யப்படும். மேற்படி விற்பனைத் தொகை கஜானாவில் செலுத்தப்படவேண்டியது. பிறகு பவுண்டு கீபருக்குச்சேரவேண்டிய கம்மிஷனும், தினிச்செலவும் அவருக்கு அனுப்பப்படும்.

10. பட்டியைக்கூட்டி சுத்திசெய்யும் வெட்டியான்களுக்குப் பிரதிபலனுகப்பிரத்தியேகமாய்பணம் பெற்றுக்கொள்ள முடியாது. ஆனல் பட்டியில் விழப்பட்டசாணி முதலிய எருவுகளை மாத்திரம் பிரதிபலனுக அடையவேண்டியது.

11. (கால்நடைகள் என்பதற்கு) யானைகள் ஒட்டைகள் எருமை மாடுகள், குதிரைகள் (ஆண் பெண்) விரைவாங்கினகுதிரைகள் மட்டக்குதிரைகள், குதிரைக்குட்டிகள் எல்லாவிதமான ஆடுகளும் ஆட்டுக்குட்டிகளுமென்று அர்த்தமாகும்.

	கால் நடைகளின் பெயர்.	அபாதத் தொகை.			ஒருநாள் தீனிச்செலவு.		
1	யானை	2	0	0	1	0	0
2	ஒட்டை	1	0	0	0	6	0
3	குதிரை அல்லது குதிரைகுட்டி	0	4	0	0	3	0
4	எருமைக்கடா	0	8	0	0	1	6
5	எருது, பசு	0	4	0	0	1	6
6	எருமைக்கன்று அல்லது பசுவின் கன்று ...	0	2	0	0	1	6
7	கழுதை அல்லது கழுதைக் குட்டி	0	2	0	0	1	0
8	கோவேறு கழுதை	0	4	0	0	2	0
9	பன்றி	0	2	0	0	0	9
10	ஆடு	0	1	0	0	0	6

89

ஆலோசனை சபையிலுள்ள இந்தியா கவர்னர்ஜெனரல் வர்க ளால் செய்யப்பட்ட இந்த ஆக்டானது 1863-ம்வரு மார்ச்சுமீ 10உ சிறப்புற்றேங்கும் கவர்னர்ஜெனரல்வர்களால் அங்கீகரிக் கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ் செய்யப் படுகிறது :—

ACT No. XX OF 1,863.

1863-ம்வருத்து 20-வது ஆக்ட்.

AN ACT TO ENABLE THE GOVERNMENT TO DIVEST ITSELF OF THE MANAGEMENT OF RELIGIOUS ENDOWMENT.

மதசம்பந்தமான விஷயங்களைச் சேர்ந்த இனாங்களைப் பரிபாலித்து வருங் கடமையை விட்டுவிட கவர்ன்மென்டாருக்கு அதிகாரங் கொடுப்பதற்கான ஆக்ட்.

பீடிகை. (மசூதிகள், இந்து தேவாலயங்கள், கல்விச் சங் கங்கள் முதலான தருமங்களை ஆதரிப்பதற்காக கொடுக்கப்பட்ட நிலங்களின் குத்தகை பணத்தையும் உற்பத்தியையும் கிரமமாய் உபயோகப்படுத்துவதற்காகவும், வாராவதிகள், சத்திரங்கள், முத லிய பொதுக்கட்டிடங்களை மரூமத்துசெய்து காப்பாற்றி வருவ தற்காகவும், சர்க்காரில் சேர்ந்துபோகிற ஸ்திதியை பத்திரஞ் செய்து வினியோகப்படுத்துவதற்காகவும்,) பங்காளத்து சட்ட புஸ்தகத்திலிருக்கிற 1810வரு 19-வது சட்டத்தினாலே பங் காளத்து ராஜ்ஜியத்திலும்; (மசூதிகள், இந்து தேவாலயங்கள், கல்விச்சங்கங்கள் முதலான தருமங்களை ஆதரிப்பதற்காகக் கொ டுக்கப்பட்ட நிலங்களின் குத்தகை பணத்தையும் உற்பத்தியையுங் கிரமமாய் உபயோகப்படுத்துவதற்காகவும், வாராவதிகள், சத்தி ரங்கள் முதலிய பொதுக் கட்டிடங்களை மரூமத்துசெய்து காப் பாற்றி வருவதற்காகவும், சர்க்காரில் சேர்ந்துபோகிற ஸ்திதியை பத்திரஞ்செய்து வினியோகப் படுத்துவதற்காகவும்,) சென்னப் பட்டணத்து சட்ட புஸ்தகத்திலிருக்கிற 1817வரு 7-வது சட்டத்தினாலே சென்னப்பட்டணத்து ராஜ்ஜியத்திலும்; ரிவினியூ போர்ட்டார்களுக்கும் அவ்விடத்திய ஏஜெண்டுகளுக்கு முண்டா கிய அதிகாரவல்களிலே, மசூதிகள் அல்லது இந்து தேவாலயங்களு டைய ஆதரணைக்காகவும்: மதசம்பந்தமான மற்ற உபயோகங்க ளுக்காகவும் கொடுக்கப்பட்ட நிலங்களை மேல்விசாரணை செய்து

கொள்ளுவதையும், அந்த மதசம்பந்தமான சாலைகளைக் காப்பாற்றுவதற்காகக் கொடுக்கப்பட்ட இனங்களை உபயோகிப்பதையும், அதனைச் சேர்ந்த கட்டிடங்களை மராமத்துசெய்து காப்பாற்றுவதையும், அதுகளுக்கு திரஸ்ட்டிகள் அல்லது காரியக்காரர்களை நேமிப்பதையும், அந்த மதசம்பந்தமான சாலைகளைச் சேர்ந்த காரியங்களை நடத்துவதிலுண்டாகிய யாதொரு சம்பந்தத்தையும், மேற்படி அதிகாரிகளிடத்திலிருந்து நிவர்த்திசெய்வது ஆவசியகமாயிருக்கிறபடியால் அதனிமித்தம், பங்காளத்து சட்ட புஸ்தகத்திலுள்ள 1810-ம்ஹிஜ்ரத்து 19-வது சட்டத்திலும், சென்னப்பட்டனத்து சட்ட புஸ்தகத்திலுள்ள 1817-ம்ஹிஜ்ரத்து 7-வது சட்டத்திலும் மசூதிகள், இந்து தேவாலயங்கள் முதலிய மதசம்பந்தமான விஷயங்களை ஆதரிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட இனங்களுக்கு எவ்வளவு சம்பந்தப்படுகிறதோ அவ்வளவையும் ரத்து செய்வது தகுதியாயிருப்பதைப் பற்றி, இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:—

1. சில சட்டங்கள் ரத்து செய்யப்பட்ட தென்பது.—பங்காளத்து சட்டபுஸ்தகத்திலுள்ள 1810-ம்ஹிஜ்ரத்து 19-வது சட்டத்திலும், சென்னப்பட்டனத்து சட்டபுஸ்தகத்திலுள்ள 1817-ம்ஹிஜ்ரத்து 7-வது சட்டத்திலும் மசூதிகள், இந்து தேவாலயங்கள் முதலிய மதசம்பந்தமான விஷயங்களை ஆதரிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட இனங்களுக்கு எவ்வளவு சம்பந்தப்படுகிறதோ அவ்வளவும் ரத்து செய்யப்படுகின்றன.

2. ஒருமை பன்மையைக் குறித்து:—இந்த ஆக்டிலே ஒருமையைப் பன்மையாகவும் கொள்ளவேண்டியது, பன்மையை ஒருமையாகவும் கொள்ளவேண்டியது.

பாலைக் குறித்து:—ஆண்பாலைப் பெண்பாலாகவும் கொள்ளவெண்டியது.

சிவில்கோர்ட் டென்பதும்-கோர்ட்டென்பதும்:— யாதொரு மசூதி, தேவாலயம், அல்லது மதசம்பந்தமான சாலையைக் குறித்தாவது, அதைச்சேர்ந்த இனமைக் குறித்தாவது இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளின்படி யாதொரு வியாச்சியந் தொடரக் கூடுமானதாகவாகிலும் விண்ணப்பஞ் செய்துகொள்ளக் கூடுமானதாகவாகிலும் மிருக்கிற அப்படிப்பட்ட மசூதி முதலானவை எவ்விடத்திலிருக்கிறதோ அந்த டிஸ்திரிக்ட்டில் சிவில் விவகாரத்திலே பிரதம விசாரணை அதிகாரமுடைய பிரதான கோர்ட்டென்று அர்த்தமாகும்.

3. சில விஷயங்களிலே மசூதி முதலானதுகளைக் குறித்து அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் பிரத்தியேகமாய் நிபந்தனை ஏற்பதித்த வேணுமென்பது. யாதொரு மசூதி, தேவாலயம், மத

சம்பந்தமான வேறே யாதொரு சாலேக்கு 1-வது பிரிவில் கண்டிருக்கிற சட்டங்களி லெதிலேயாகிலு மிருக்கிற நிபந்தனைகள் சம்பந்தப்படத் தக்கதாயிருந்து, இந்த ஆக்ட்டு உண்டான காலத்தில் அந்த மசூதி முதலானதற்கு திரஸ்டி, காரியக்காரர் அல்லது மேல் விசாரணைக்காரரை நேமிக்கிற் அதிகாரம் கவர்ன்மெண்டாருதாகவாவது கவர்ன்மெண்டைச் சேர்ந்த யாதொரு அதிகாரியுதாகவாவதிருந்தாலும், அந்த திரஸ்ட்டி முதலானவர்கள் வேறொருவரால் நேமிக்கப்பட்டால் அந்த நேமகத்தை கவர்ன்மெண்டாராவது, கவர்ன்மெண்டைச் சேர்ந்த யாதொரு அதிகாரியாவது ஊர்ஜிதஞ் செய்யவேண்டியதா யிருந்தாலும், அப்படிப்பட்ட மசூதி, தேவாலயம் முதலிய மதசம்பந்தமான சாலேகளின் விசாரச்சியத்தில், இந்த ஆக்ட்டு உண்டான பின்பு கூடுமான சீக்கிரத்திலே அவ்வவ்விடத்திய கவர்ண்மெண்டார் இதில் பின்னல் சொல்லியிருக்கிறபடி பிரத்தியேகமான நிபந்தனைகள் எற்படுத்த வேண்டியது.

4. ரிவினியூ போர்ட்டார் முதலானவர்களுடைய வசத்திலிருக்கிற சொத்தை அதிகாரத்துக்குட்பட்டிராத திரஸ்ட்டிகள் முதலானவர்களிடத்தில் ஒப்பிக்கவேண்டியதைக் குறித்து. எப்படிப்பட்ட திரஸ்டி, காரியக்காரர், அல்லது மேல்விசாரணைக் காரரை நேமிக்கிற அதிகாரம் கவர்ன்மெண்டாருதாகவாவது கவர்ன்மெண்டைச்சேர்ந்த யாதொரு அதிகாரியுதாகவாவதிருக்கவில்லேயோ, அல்லது அவர்கள் அந்த அதிகாரத்தைச் செலுத்தக்கூடாதோ, அல்லது அப்படி வேறொருவரால் செய்யப்படுகிற நேமகத்தை அந்த கவர்ன்மெண்டார் அல்லது அதிகாரி ஊர்ஜிதஞ் செய்யத்தக்க தல்லவோ, அப்படிப்பட்ட திரஸ்ட்டி முதலானவர்களுடைய விசாரணைக்குள் இந்த ஆக்ட்டு உண்டான காலத்திலிருக்கிற மசூதி, தேவாலய முதலிய மதசம்பந்தமான சாலேகளின் விஷயத்தில், அந்த மசூதி முதலானதுகளைச் சேர்ந்ததாய் ரிவினியூ போர்ட்டார் அல்லது அவ்வவ்விடத்திய யாதொரு ஏஜெண்டின் மேல்விசாரணைக்குள்ளாகிலும் ஸ்வாதீனத்திலாகிலும் இந்த ஆக்ட்டு உண்டான காலத்திலிருக்கிற பூமி முதலிய சகல சொத்துகளிலும் இதில் பின்னல் சொல்லப்படுகிற சொத்துவிர மற்றவைகளி லெல்லாம், இந்த ஆக்ட்டு உண்டான பின்பு கூடுமான சீக்கிரத்திலே அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் அந்த திரஸ்ட்டி முதலானவர்களிடத்தில் ஒப்பித்துவிடவேண்டியது. அப்படி ஒப்பித்துவிட்டால், அந்த மசூதி, தேவாலய முதலானதுகளைக் குறித்தும், மேல்சொல்லியபடி ஒப்பித்து விடப்படுகிற பூமி முதலிய சகல சொத்துக்களைக் குறித்தும் ரிவினியூ போர்ட்டாருக்கும் அவ்வவ்விடத்திய ஏஜண்டுகளுக்கு மூண்டாகிய அதிகாரங்களும் உத்தரவாதங்களும் அதோடு அற்றுப்போகும்; ஆனல் அப்படி ஒப்பித்து விடுவதற்கு முன்னமே அந்த ரிவினியூ போர்ட்டார் அல்ல

று ஏஜெண்டுகள் செய்திருக்கிற காரியங்களுக்கும் பிணைப்பட்டிருக்கிறவர்களுக்கும் அவர்கள் வகை செய்யவேண்டியது.

5. திரஸ்ட்டி அலுவல் முதலியவை காலியானால் அந்த ஸ்தானத்துக்கு வேறே மனிதர்கள் வரவேண்டியதைக் குறித்து விவாதமுண்டாகிற பட்சத்தில் இன்னது செய்யப்படுமென்பது. இதற்கு முந்திய பிரிவின்படி யாதொரு சொத்து யாரிடத்தில் ஒப்பிக்கப்படுகிறதோ அந்தத் திரஸ்ட்டி, காரியக்காரர் அல்லது மேல்விசாரணைக்காரருடைய உத்தியோகமானது ஏந்த ஏதுவைப் பற்றியாகிலும் காலியானால், பின்பு அந்த உத்தியோகத்திற்கு வர இன்னாருக்கு பாத்தியமுண்டென்பதைக் குறித்து விவாதமுண்டாகிற பட்சத்தில், அந்த சொத்து எதைச்சேர்ந்ததோ அந்த மசூதி, தேவாலயம் அல்லது மதசம்பந்தமான சாலையிலாகிலும், அதைப் பற்றிய ஆராதனை முதலானவைகளை நிறைவேற்றுவதிலாகிலும், அதைச்சேர்ந்த சொத்திலாகிலும் சம்பந்தமுடையவனெவனுவது அந்த மசூதி, தேவாலய முதலானதற்கு ஒரு காரியக்காரரை நேமிக்கும்படி சீவில் கோர்ட்டாருக்கு மனுவு செய்துகொள்ளலாம்; அதற்குமேல் அந்த கோர்ட்டார்-வேறொருவன் வியாச்சியம் தொடர்ந்து, தான் அப்படி காரியக்காரனுவதற்கு தனக்குள்ள பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ளுகிறவரையில் காரியங்களை நடப்பிக்க ஒரு காரியக்காரர் நேமிக்கலாம். ஆக்ட்டின்படிக்காவது முன்னே இருந்த திரஸ்ட்டி, காரியக்காரன் அல்லது மேல்விசாரணைக்காரனுக்கு அந்த மசூதி-தேவாலய முதலானதுகளைக் குறித்தாகிலும், அதைச்சேர்ந்த சொத்தைக் குறித்தாகிலும் என னென்ன அதிகாரமிருந்ததோ அதுகளையெல்லாம் செலுத்திவரலாம்.

6. யாரிடத்தில் சொத்து ஒப்பிக்கப்படுகிறதோ அந்த திரஸ்ட்டி முதலானவர்களுடைய பாத்தியதையையும் அதிகாரத்தையும் உத்தரவாதத்தையுங் குறித்து. இந்த ஆக்ட்டு 4-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி யாதொரு மசூதி-தேவாலயம் மற்றுமுள்ள மதசம்பந்தமான சாலையைச்சேர்ந்த பூமி முதலிய சொத்து யாரிடத்தில் ஒப்பிக்கப்படுகிறதோ அந்த திரஸ்ட்டி-காரியக்காரர்-மேல் விசாரணைக்காரர் இவர்களுடைய பாத்தியதையும் அதிகாரமும் உத்தரவாதமும் அவர்களை நேமிப்பதையும் தெரிந்தெடுப்பதையும் நீக்கிவிடுவதையுங் குறித்த திட்டங்களும் இந்த ஆகட்டு உண்டாவதற்கு முன்னிருந்ததுபோலவே இருக்கவேண்டியது; ஆனால், இந்த ஆக்டின்படி வியாச்சியந் தொடரப்படத்தக்க உத்தரவாதத்தைக் குறித்து முன்னைய சட்டங்கள் சம்பந்தப்படமாட்டா; மேலும், அந்த மசூதி-தேவாலயமுதலானவைகளின் விஷயத்திலும் அந்த திரஸ்ட்டி முதலானவர்கள் பேரிலும்

93

செலுத்தும்படி ரிவினியூ போர்ட்டாருக்கு அவ்வவ்விடத்திய ஏ ஜெண்டுகளுக்கும் இந்த ஆக்ட்டினால் ரத்து செய்யப்பட்ட சட்ட ங்களின்படிக் குண்டாயிருந்த அதிகாரமானது இதனால் ரத்து செய்யப்பட்டிருப்பதைப் பற்றி அதற்கும் சம்பந்தப்படமாட்டா து. இந்த ஆக்ட்டின் 4-வது பிரிவின்படி ஒப்பித்துவிடப்பட்ட பூமி முதலிய சொத்தின் குத்தகை அல்லது வாடகைப் பணத்தை வசூல் செய்வதைக்குறித்து யாதொரு ரெவினியூ போர்ட்டாருக் காவது அவ்வவ்விடத்திய ஏஜெண்டிக்காவது என்னென்ன அதி காரமிருந்ததோ அதுகளையெல்லாம் அந்த சொத்து ஒப்பிக்கப் படுகிற தேதிமுதற்கொண்டு அதை ஒப்பித்துக்கொள்ளுகிற யா தொரு திரஸ்ட்டியாவது-காரியக்காராவது-மேல்விசாரணைக்கார ராவது செலுத்திவரலாம்.

7. சபைகளை ஏற்படுத்துவது. இந்த ஆக்ட்டு 3-வது பிரி வில் கண்டிருக்கிற சகல விஷயங்களிலும், அவ்வவ்விடத்திய கவர் ன்மெண்டார்-இதனால் ரத்து செய்யப்பட்ட சட்டங்களின்படி ரெவினியூ போர்ட்டாரும் அவ்வவ்விடத்திய ஏஜெண்டுகளும் செ லுத்திய அதிகாரங்களை அவர்களுக்கு பதிலாகச் செலுத்தி வரு ம்படி பிரதி டிவிஷன் அல்லது டிஸ்திரிக்ட்டிலும் ஒன்று அல்லது பலசபைகளை ஒருமிக்க ஏற்படுத்தவேண்டியது. அப்படிப்பட்ட சபையிலே மூன்று பேராவது பின்னும் பலராவது சேர்ந்திருக்க வேண்டியது. அவர்கள், இந்த ஆக்ட்டு 21-வது பிரிவின்படி இன் னது செய்யப்படுமென்று பிரத்தியேகமாய்ச் சொல்லியிருக்கிற யாதொரு சொத்தின் விஷயத்தில் தவிர, அந்த போர்ட்டாருக் கும் அவ்வவ்விடத்திய ஏஜெண்டுகளுக்கு முண்டாயிருந்த மற்ற அனுவல்களையெல்லாம் நிறைவேற்றவேண்டியது.

8. அந்த சபையார் இப்படிப்பட்டவர்களாயிருக்க வேணு மென்பது:—எந்த மதத்தின் பொருட்டு மசூதி-தேவாலய முதலி ய சாலைகள் ஏற்படுத்தப்பட்டதோ, அல்லது இப்போது காப்பாற் றிவரப்படுகிறதோ அந்த மதஸ்தர்களுக்குள்ளே யாரை நேமிக்க வேணுமென்று அந்த மசூதி, முதலானதுகளை காப்பாற்றுவதில் மற்றுள்ள ஜனங்கள் அபிப்பிராயப்படுகிறதாகளோ அதைக் கூடிய மட்டில் தெரிந்துகொண்டு அந்தப்படியே மேற்படி சபையாரை ஏற்படுத்தவேண்டியது. அந்த ஏற்பாட்டை சர்க்கார் கெஜெட் டில் பிரசித்தம் செய்யவேண்டியது. அப்படி ஏற்படுத்துவதைக் குறித்து அந்த ஜனங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளும்பொருட்டு, அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டார் இந்த ஆக்ட்டினுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமில்லாமல் தாங்கள் உண் டுபண்ணுகிற விதிகளின் பிரகாரம் அந்த சபைக்கு மெம்பர்களைத் தெ ரிந்தெடுக்கும்படி செய்யலாம்.

9. பிரதி நபரும் தூர்நடத்தை முதலானதுகளைப் பற்றி நீக்கப்படாவிட்டால் ஆயுசுபரியந்தம் சபையிலிருக்கலாமென்பது. மேற்சொல்லியபடி ஏற்படுத்தப்பட்ட சபையிலுள்ள பிரதி நபரும் தூர்நடத்தையைப் பற்றியாவது திறமையில்லாமையைப் பற்றியாவது நீக்கிவிடப்பட்டாலல்லாமல் அவர் தன்னுயுசுவரையில் அந்தச் சபையிலிருக்கலாம். அந்தச்சபையாரில் யாரையாவது நீக்கிவிட வேணுமானால் இதில் பின்னால் சொல்லப்பட்டிருக்கிறபடி சிவில் கோர்ட்டாருடைய உத்தரவில்லாமல் நீக்கக்கூடாது.

10. காலியானால் வதிலுக்கு நேமிப்பதைக் குறித்தது. மேற் சொல்லியபடி நேமிக்கப்படுகிற சபையாருக்குள் காலியானால், அந்த ஸ்தானத்துக்கு ஏற்படுத்த வேறொருவரை மேற்கண்ட பிரகாரம் அந்த தேவாலய முதலானதுகளில் பற்றுள்ளவர்கள் தெரிந்தெடுக்கவேண்டியது. அந்த சபையிலுள்ள மற்றவர்கள் அந்த காலியைக்குறித்து கூடுமானசீக்கிரத்தில் விளம்பரம் செய்யவேண்டியது; மேலும், சபைக்கு நபர்களைத் தெரிந்தெடுப்பதைக் குறித்து அவ்வவ்விடத்திய கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்படுகிற விதிகளின்படி மேற்சொல்லிய பிரகாரம் அந்த தேவாலய முதலானதுகளில் பற்றுள்ளவர்கள் அந்த காலியான ஸ்தானத்துக்கு வேறொருவரைத் தெரிந்தெடுக்கும் பொருட்டு ஒருநாளை நிச்சயிக்கவேண்டியது; அந்த நாளானது அந்த காலி நேரிட்ட தேதி முதற்கொண்டு மூன்றுமாதத்திற்கு அதிகப்படக்கூடாது; மேற்படி விதிகளின் பிரகாரம் அப்போது தெரிந்தெடுக்கப்படுகிறவ செவராவது அந்த சபையில் ஒருவராயிருக்கவேண்டியது; யாதொரு காலி நேரிட்டபின்பு மூன்று மாசத்திற்குள் அந்த ஸ்தானத்திற்கு மேற்சொல்லியபடி வேறொருவர் தெரிந்தெடுக்கப்படாவிட்டால், எவனுவது மனுவுசெய்து கொள்வதின்பேரில், சிவில் கோர்ட்டார் அந்த ஸ்தானத்திற்கு ஒருவரை நேமிக்கலாம், அல்லது அந்த சபையிலுள்ள மற்றவர்கள் உடனே நேமித்துக்கொள்ளும்படி உத்தரவு செய்யலாம்; அப்படி உத்தரவு செய்யப்பட்டால் அந்தப்படியே அவர்கள் நேமித்துக்கொள்ளவேண்டியது. அவர்கள் நேமித்துக்கொள்ளாவிட்டால், சிவில் கோர்ட்டார் நேமிக்கலாம்.

11. சபையாரில் யாராவது தீங்கள் வசத்திலிருக்கிற மசூதி முதலானதுகளுக்கு திரஸ்டி வகையாவாயிருக்க கூடாதென்பது. இந்த ஆக்ட்டின்படி யாதொரு சபையார் யாதொரு மசூதி-தேவாலய முதலிய மதசம்பந்தமான சாலையைச் சேர்ந்த காரியங்களை நடத்த நேமிக்கப்பட்டிருந்தால், அந்த சபையாரில் யாராவது அந்த மசூதி முதலானதுகளுக்கு திரஸ்டியாகவாகிலும் காரியக்காரராகவாகிலும் மேல் விசாரணைக்காரராகவாகிலும் இருக்கவும் தகாது, காரியத்தை நடத்தவும் கூடாது.

12. சபையார் நேமிக்கப்பட்டால், போர்டாரும் அவ்வவ் விடத்திய ஏஜெண்டுகளும் சொத்தை ஒப்பீத்துவிட வேணுமென் பது. யாதொரு மசூதி-தேவாலயமுதலிய மதசம்பந்தமான சா லேயை விசாரணை செய்வதற்காகவும் அதைச்சேர்ந்த காரியங்களை நடத்துவதற்காகவும் மேற்சொல்லியபடி சபையார் நேமிக்கப்பட் ட உடனே, ரிவினியூ போர்டாராவது அவர்களுடைய அதிகாரத் துக்குள் காரியங்களை நடத்துகிற அவ்வவ்விடத்திய ஏஜெண்டுக ளாவது அந்த சபையார் நேமிக்கப்பட்ட காலத்தில் அந்த தேவா லய முதலானதுகளைச் சேர்ந்த என்னென்ன சொத்து தங்கள் வி சாரணையிலாகிலும் ஸ்வாதீனத்திலாகிலும் இருக்கிறதோ அந்த பூமி முதலிய சகல சொத்துகளையும் இதில் பின்னல் சொல்லியிருக்கிற படிக்குத்தவிர அந்த சபையாரிடத்தில் ஒப்பித்துவிட வேண்டி யது. அப்படி ஒப்பித்துவிடப்பட்டால் பின்னல் சொல்லியபடிக் குத் தவிர அந்த மசூதி-தேவாலய முதலியவைகளைக் குறித்தும், மேற்சொல்லியபடி ஒப்பித்துவிடப்படுகிற பூமி முதலிய சகல சொத்துகளைக் குறித்தும் ரிவினியூ போர்ட்டாருக்கும் அவ்வவ் விடத்திய ஏஜெண்டுகளுக்கு முண்டாகிய அதிகாரங்களும் உத் தரவாதங்களும் அதோடு அற்றுப்போகும். ஆனால் அப்படி ஒப் பித்து விடுவதற்கு முன்னமே அந்த ரிவினியூ போர்ட்டார் அல்ல து ஏஜெண்டுகள் செய்திருக்கிற காரியங்களுக்கும் பிணைப்பட்டி ருக்கிற உத்தரவாதங்களுக்கும் அவர்கள் வகை சொல்லவேண்டி யது இந்தப் பிரிவின்படி ஒப்பித்துவிடப்பட்ட பூமி முதலிய சொத்தின் குத்தகை அல்லது வாடகைப் பணத்தை வசூல் செய் வதைக்குறித்து யாதொரு ரிவினியூ போர்ட்டாருக்காவது அவ் வவ்விடத்திய ஏஜெண்டுக்காவது என்னென்ன அதிகாரமிருந்த தோ அதுகளையெல்லாம் அந்தசொத்து ஒப்பிக்கப்படுகிற தேதி முதற்கொண்டு அதை ஒப்பித்துக்கொள்ளுகிற சபையார் செலுத் திவரலாம்.

13. வரவு செலவு கணக்கு. இந்த ஆக்ட்டிலுள்ள நிபந் தனைகள் எதுகளுக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த மசூதி-தேவா லய முதலிய மதசம்பந்தமான சாலைகளின் பிரதி திரஸ்ட்டியும்-கா ரியக்காரரும்-மேல்விசாரணைக்காரரும் அந்த மசூதி முதலானதுக ளின் வரவு செலவுகளைக் குறித்து கிரமமாய்க் கணக்கு வைக்க வேண்டியது. இந்த ஆக்ட்டின்படி நேமிக்கப்பட்டாவது காரியத் தை நடத்திக்கொண்டாவதிருக்கிற பிரதி நிர்வாக சபையாரும் வருஷத்திற் கொரு தடவையாவது அந்த கிரமமான வரவுசெலவு கணக்குகளைக் கொண்டுவந்து காட்டச்சொல்லி அந்த மசூதி முத லானதுகளின் பிரதி திரஸ்ட்டியையும் காரியக்காரரையும் மேல் விசாரணைக்காரையுங் கேட்கவேண்டியது. அந்த சபையாரும் வரவு செலவுகளைக் குறித்து அப்படி கணக்கு வைக்கவேண்டி யது.

14. சம்பந்தமுள்ளவ னெவனுவது நம்பிக்கைத் துரோக முதலானதைக் குறித்து வியாச்சியந் தொடரலாமென்பது. யாதொரு மசூதி-தேவாலயமுதலிய மதசம்பந்தமான சாலியிலாவது அதுகளில் ஆராதனை முதலானதுகளை நிறைவேற்றுவதிலாவது அதுகளைச் சேர்ந்த சொத்துக்களிலாவது சம்பந்தமுள்ளவர்களாகி லும் அவர்களில் எவனுகிலும் அந்த மசூதி-தேவாலயமுதலிய மத சம்பந்தமான சாலியில் திரஸ்ட்டி, காரியக்காரர், அல்லது மேல் விசாரணைக்காரர் பேரிலாவது, இந்த ஆக்ட்டின்படி நேமிக்கப்பட்ட யாதொரு சபையாரில் எவர்பேரிலாவது. அவர்களிடத்தில் ஒப்பிக்கப்பட்டிருக்கிற சொத்தின் விஷயமாய் அவர்களால் செய்யப்படுகிற யாதொரு அக்கிரமம் நம்பிக்கைத் துரோகம் அல்லது அலுவலில் அஜாக்கிரதையைக் குறித்து சீவில்கோர்ட்டிலே வியாச்சியந் தொடரலாம். அப்படிச் செய்கையில் அந்த மசூதி முதலானதுகளில் சம்பந்தமுள்ள மற்றவர்களி லெவனையாவது வாதியாகச் சேர்த்துக்கொள்ள வேணுமென்பதில்லை. அந்த வியாச்சியத்தை விசாரணை செய்கிற கோர்ட்டார்-யாதொரு காரியத்தை இன்னபடி நிறைவேற்றவேணுமென்று அந்த திரஸ்ட்டி முதலானவர்களுக்கு உத்தரவு செய்யலாம். மேலும் நஷ்டத்தையும் செலவுகளையுங் குறித்து அவர்கள் பேரில் தீர்ப்பு பண்ணலாம், அந்த திரஸ்ட்டி முதலானவர்களை நீக்கிப் போடும்படிக்கும் உத்தரவு செய்யலாம்.

15. இன்ன சம்பந்தமுள்ளவன் வியாச்சியந் தொடரலாமென்பது. தேவாலய முதலானதுகளில் சம்பந்தமுள்ளவன் வியாச்சியந் தொடரலாமென்று இதற்கு முந்திய பிரிவில் சொல்லியிருக்கிறபடி அந்த சம்பந்தமானது பணத்தைச் சேர்ந்ததாய் இருக்கவேணுமென்பதில்லை; வியாச்சியந் தொடருகிறவன் அந்த தேவாலய முதலானதுகளின் காரிய நிர்வாகத்திலாவது மேல்விசாரணையிலாவது எவ்வளவாகிலும் பிரவேசிக்க பாத்தியமுள்ளவனுயிருக்கவேணுமென்பது மில்லை. தேவாலய முதலானதுகளில் ஆராதனை முதலியவை நடக்கையில் அவ்விடத்திற்குப் போகத் தகுந்தவனுவது வழக்கமாய்ப் போய்க்கொண்டிருக்கிறவனுவது அவ்விடங்களில் கொடுக்கப்படுகிற விநியோகங்களை அடையத்தக்க பாத்தியமுள்ளவனுவது அடைந்துகொண்டு வருகிறவனுவது வியாச்சியந் தொடர இதற்கு முந்திய பிரிவின் தாற்பரியப்படி சம்பந்தமுள்ளவனுவான்.

16. பஞ்சாயத்தாரிடத்துக்கு அனுப்புதல். இந்த ஆக்ட்டின்படி தொடரப்படுகிற வியாச்சிய முதலிய விவகாரத்தில், யாதொரு விவாத விஷயத்தை ஒருவர் அல்லது பலர் கூடிய பஞ்சாயத்தாரால் தீர்மானஞ் செய்யப்படுவதற்காக அவர்களிடத்திற்கு அனுப்பும்படி உத்தரவுசெய்ய அந்த வியாச்சியம் எவ்விடல்தத்

நடக்கிறதோ அந்த கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு - அப்படி உத்தரவு செய்யப்பட்டால், சிவில் புரொசீடியூர்கோட் என்னும் சிவில் விவகார விசாரணை சட்டத்தின் 6-ம் அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகள்-அந்த சட்டத்தின் 312-வது பிரிவின்படி கட்சிக்காரர்கள் மனுவு செய்துகொள்வதின் பேரில் பிறப்பிக்கப்படுகிற உத்தரவுக்குச் சம்பந்தப்படுகிறது போலவே சகல விஷயங்களிலும் மேற்படி உத்தரவுக்கும் பஞ்சாயத்துக்கும் சம்பந்தப் படவேண்டியது.

17. சிவில்புரொசீடியூர்கோடின் 312-வது பிரிவின்படி அனுப்புதல். மேற்படி சிவில் விவகார விசாரணை சட்டத்தின் 312-வது பிரிவின்படி கட்சிக்காரர்கள் கோர்ட்டாருக்கு மனுவுசெய்துகொள்ளுவதற்காவது, விவாதவிஷயத்தைப் பஞ்சாயத்துக்கு அனுப்பும்படி கோர்ட்டார் உத்தரவு செய்வதற்காவது இதற்கு முந்திய பிரிவினாலே தடங்கலொன்றுமில்லை.

18. விசாச்சியம் தொடருவதற்கு செலவு கொடுக்கும்படி முன்னதாய் மனுவு செய்துகொள்வது. வியாச்சியம் தொடரச் செலவு கொடுக்கவேணுமென்று கோர்ட்டாருக்கு முன்னதாய் மனுவு செய்துகொள்ளாமல் வியாச்சியம் கொண்டுவரப்பட்டால், அதை இந்த ரூல்படி தள்ளிவிடக்கூடாது. அந்த மனுவை வெற்றுக் காகிதத்தி லெழுதலாம். கோர்ட்டார் அந்த மனுவை வாசித்து பார்த்ததின்பேரில், வியாச்சியம் தொடருவதற்குத் தகுந்த பிரத்தியட்ச ஆதாரங்க ளிருப்பதாய் கோர்ட்டார் அபீப் பிராயப்பட்டால், வியாச்சியம் தொடரச் செலவு கொடுக்கவேண்டியது. வியாச்சியமுடிவிலே அந்த வியாச்சியச் செலவுகளைக் குறித்துக் கணக்கு செய்கையில், முன்னதாய்க் கொடுக்கப்பட்ட மனுவிற்கு முத்திரை காகிதக்கிரய மேற்படுத்தி அதை அந்த வியாச்சியச் செலவுடனே சேர்க்கவேண்டியது. தேவாலய முதலான துகளின் பிரயோஜனத்திற்காக வியாச்சியம் கொண்டுவரப்பட்டதென்றும், அந்த வியாச்சியத்தின் உபய காட்சிக்காரர்கள் பேரிலும் தப்பிதமில்லை யென்றும் கோர்ட்டாருக்குத் தோற்றினால், அந்தச் செலவு முழுமையையுமாவது அதில் எவ்வளவு நியாயமாகத் தோற்றுகிறதோ அவ்வளவையாவது அந்த தேவாலய முதலானதுகளின் ஆஸ்தியிலிருந்து செலுத்தும்படி கோர்ட்டார் உத்தரவு செய்யலாம்.

19. கணக்கை தாக்கல் செய்யும்படி கோர்ட்டார் உத்தரவு பண்ணலாமென்பது. வியாச்சியம் தொடரும்படிச் செலவு கொடுப்பதற்கு முன்னமேயாவது, செலவு கொடுத்த பின்பு யாதொரு நடவடிக்கை நடத்தப்படுவதற்கு முன்னமேயாவது வியாச்சியம் நடந்துகொண்டிருக்கையில் லெப்போதாவது, கோர்ட்டார் அந்த தேவாலய முதலானதுகளின் கணக்கு முழுமையையுமாகிலும்

அதில் தங்களுக்கு அவசியமாகத் தோற்றுகிற பாகத்தையாகிலும் கோர்ட்டில் தாக்கல் செய்யும்படி, அந்த விவகாரத்தில் சம்பந்த முள்ளவர் திரஸ்ட்டியோ-காரியக்காரரோ-மேல் விசாரணைக்காரரோ-அல்லது யாதொரு சபையைச் சேர்ந்தவரோ அவருக்கு உத்தரவு செய்யலாம்.

20. சிவில் விவகாரம் தொடரப்பட்டபோதிலும் அநியாயமாய் அபகரிப்பதைக் குறித்து நடவடிக்கை நடத்துவதற்குத் தடங்கலில்லையென்பது. இதற்கு முந்திய பிரிவின்படி யாதொரு சிவில்கோர்ட்டில் விசாரிக்கிய முதலிய விவகாரம் நடத்தப்பட்ட போதிலும், ஒப்பிக்கப்பட்டிருக்கிற சொத்தை அநியாயமாய் அபகரித்துக்கொள்வதைக் குறித்து கிரிமினல் கோர்ட்டில் யாதொரு நடவடிக்கை நடத்துவதற்கு எவ்விதத்திலும் தடங்கலொன்றுமில்லை.

21. வைதிக லவுகீக பிரயோஜனங்களிரண்டிற்கும் உபயோகமாகும்படி கொடுக்கப்பட்ட இனங்களைக் குறித்து நிபந்தனை. வைதிகமும் லவுகீகமும் கலந்து நடக்கிற யாதொரு சாலையை ஆதரிக்கும்பொருட்டு பூமியாவது வேறே எவ்வகை சொத்தாவது கொடுக்கப்பட்டிருக்கிற விஷயத்திலும், யாதொரு சாலையை ஆதரிக்கும்பொருட்டு கொடுக்கப்பட்டிருக்கிற இனம் வைதிக பிரயோஜனத்துக்குக் கொஞ்சமும் லவுகீக பிரயோஜனத்துக்குக் கொஞ்சமுமாக உபயோகிக்கப்படுகிற விஷயத்திலும், ரிவினியூ போர்ட்டார் அப்படிப்பட்ட சொத்தை யாதொரு திரஸ்ட்டி, காரியக்காரர் அல்லது மேல் விசாரணைக் காரரிடத்திலாவது, இந்த ஆக்ட்டின்படி நேமிக்கப்பட்ட யாதொரு நிர்வாக சபையாரிடத்திலாவது ஒப்பிப்பதற்கு முன்னமே, அந்த பூமி முதலிய சொத்தில் எவ்வளவாவது லவுகீக பிரயோஜனத்துக்கு உபயோகமாகும்படி தங்கள் விசாரணையிலிருக்க வேண்டியதானால் அது இவ்வளவென்றும், அந்த திரஸ்டி முதலானவர்கள் வசத்திலே இவ்வளவு ஒப்பிக்க வேணுமென்றும், அப்படி ஒப்பிக்கப்படுகிற சொத்திலிருந்து எவ்வளவு தொகையாவது வருஷவாரியில் மேற்சொல்லிய லவுகீக பிரயோஜனத்துக்காக வரவேண்டியதிருந்தால் அந்த வருஷவாரித் தொகை இவ்வளவென்றும், அது மேற்படி போர்ட்டாரிடத்திலாவது அவ்விடத்திய ஏஜெண்டுகளிடத்திலாவது செலுத்தப்படத்தக்கதாகுமென்றும் நிச்சயிக்கவேண்டியது. அப்படிப்பட்ட பிரதி விஷயத்திலும் இந்த ஆக்ட்டிலுள்ள நிபந்தனைகள் அப்படி ஒப்பிக்கப்படுகிற பூமி முதலிய சொத்தைக்குறித்து மாத்திரம் சொல்லவேண்டியது.

22. மசூதி தேவாலய முதலானதுகளின் ஆதரணைக்காக இருக்கிற சொத்தை கவர்ன்மென்டார் இதுமுதல் தங்கள் வசத்தில் வைத்திருக்கக் கூடாதென்பது-இந்த ஆக்ட்டில் விதித

திருக்கிறபடிக்குத் தவிர, இந்தியாவிலுள்ள யாதொரு கவர்ன்மெண்டாராவது, உத்தியோகமுறைமையிலே யாதொரு கவர்ன்மெண்டு அதிகாரியாவது யாதொரு மசூதி-தேவாலய முதலிய மத சம்பந்தமான சாலைய ஆதரிக்கும்பொருட்டு கொடுக்கப்பட்டதாகவாகிலும், வேறே விதமாய் அதுகளைச் சேர்ந்ததாகவாகிலும் இருக்கிற பூமிமுதலிய சொத்தை இந்த ஆக்ட்டு உண்டான பின்பு விசாரணை செய்ய பிரவேசிப்பதும், விசாரணையை விட்டுவிட்ட பின்பு அதை மறுபடி எற்றுக்கொள்ளுவதும், அந்த தேவாலய முதலானதுகளின் பரிபாலனத்துக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிற இனமை விசாரணை செய்வதிலாவது உபயோகிப்பதிலாவது எவ்வளவாகிலும் சேர்ந்திருப்பதும், அதுகளுக்கு யாதொரு திரஸ்ட்டி-காரியக்காரர் அல்லது மேல்விசாரணைக்காரரைத் தெரிந்தெடுப்பதும், நேமிப்பதும், எவ்விதமாவது அதில் சம்பந்தப்பட்டிருப்பதும் நியாயமல்ல.

23. இந்த ஆக்ட்டில் கண்டிருக்கிற சட்டங்களைக் குறித்தும் பூர்வீகமான சட்டங்களைக் குறித்தும் இந்த ஆக்ட்டு பாதகமாகாதென்பது. மசூதிகள்-இந்து தேவாலயங்கள் முதலிய மத சம்பந்தமான சாலைகளுக்கு இந்த ஆக்ட்டில் கண்டிருக்கிற சட்டங்களிலுள்ள நிபந்தனைகள் எவ்வளவு சம்பந்தப்படுகிறதோ அவ்வளவு தவிர மற்றவைகளுக்கு இந்த ஆக்ட்டினாலே பாதக மூண்டாகவுமாட்டாது : பூர்வீகமானதைப்பற்றியாகிலும், வரலாற்றைப்பற்றியாகிலும், சிற்பவேலையைப்பற்றியாகிலும் சிறந்ததாயிருக்கிற கட்டிடங்களையும், ஜனங்களுடைய சுவுக்கியத்துக்கு வேண்டியிருக்கிற கட்டிடங்களையும் கொடுக்க வொட்டாமல் காப்பாற்றுவதற்கு மேற்படி சட்டங்களிலுள்ள நிபந்தனைகளின்படி கவர்ன்மெண்டார் அவசியமாகத் தோற்றுகிற வகைசெய்வதற்கு தடங்கலுண்டாகவுமாட்டாது.

24. இந்தியா என்பது. இந்த ஆக்ட்டில் பிரயோகித்திருக்கிற இந்தியா என்னும் வார்த்தையானது மகாராணி விக்டோரியா அவர்களுடைய அரசாட்சி காலத்தின் 21-22-வது வருஷங்களிலுண்டாகிய ஸ்ட்டாட்டியூட் என்னும் சட்டத்தில் இந்தியாவிலே பின்னுஞ் சிறான துரைத்தனஞ் செய்வதற்கான ஆக்ட்டாகிய 106-ம் அத்தியாயப்படி இதுவரையிலே மகாராணியவர்களுதாயிருக்கிற ராச்சியங்களென்றும் இனிமேல் அப்படியாகும் ராச்சியங்களென்றும் அர்த்தமாகும்.

ஆலோசனை சபையிலுள்ள இந்தியா கவர்னர் ஜனரலவர்களால் செய்யப்பட்ட இந்த ஆக்ட்டானது 1890ஆ மார்ச்சுமீ 7உ பிறப்புற்றேங்கிய கவர் ஜனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, பாவர்க்குமீ தெரியும்படி இதனால் பிரசித்தஞ் செய்யப்படுகிறது:-

ACT No. VI of 1890.

1890 ஆவுத்திய 6-வது ஆக்ட்.

AN ACT TO PROVIDE FOR THE VESTING ADMINISTRATION OF PROPERTY HELD IN TRUST FOR CHARITABLE PURPOSES.

தருமகாரியங்களுக்காக நம்பி ஒப்புவிக்கப்படும் சொத்தை ஒருவர் பரமாக்கிப் பரிபாலனஞ் செய்வதற்காக நிபந்தனை யேற்படுத்துவதற்குண்டான ஆக்ட்.

1. பேரும், வியாபிக்கும் படமும், வழங்கத்தொடங்குவதும். (1) இந்த ஆக்ட்டை-1870ஆவுத்திய தரும சொத்தைப் பற்றிய ஆக்ட்டென்று சொல்லலாம்.

(2) இது அப்பர்பர்மாவும் ப்ரிடிஷ் பெலுசிஸ்ட்டானு முட்பட ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கின்றது; மேலும்

(3) 1890ஆவு அக்ட்டோபர்மீ 1உ இது வழங்கத் தொடங்கவேண்டும்.

2. அர்த்தம். இந்த ஆக்ட்டில் "தருமகாரியம்" என்பதனுள் எளியவர்களுக்கு உதவி புரிவதும், வித்தியாவிஷயமும், வைத்திய சம்பந்தமான உதவியும், பொதுவாய் ஜனங்களுடைய உபயோகத்திற்கேற்ற வேறே யாதொரு விஷயத்தை அபிவிருத்தி செய்வதும் அடங்கும்; மதசம்பந்தமான போதனை அல்லது ஆராதனைக்கு மாத்திரம் சம்பந்தப்படுகிற காரியம் இதனுள் அடங்காது.

3. (1) தரும சொத்தின் விஷயமான பொக்கிஷதாரரை நியமிப்பதும், சங்கத்தன்மை யடைவிப்பதும். (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்கள் ஒரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரை அவருடைய உத்தியோகப் பெயராலே யாதொரு பிரதேச கவர்ன்மெண்டுக்குட்பட்ட இராச்சியங்களுக்கு தரும சொத்தின் விஷயமான பொக்கிஷதாரராக நியமிக்கலாம்.

(2) அப்படிப்பட்ட பொக்கிஷதாரர்-இந்த ஆக்ட்டின் அதிகாரத்தைக் கொண்டு ஸ்தாவர அல்லது ஜங்கம சொத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொள்வதற்கும், வைத்து நிர்வாகம் பண்ணுவதற்கும், வேறொருவர் வசம் ஒப்பிப்பதற்கும் பிரதேச கவர்ன்மெண்

டுக்குட்பட்ட இராஜ்ஜியங்களுக்கு தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் என்கிற பெயரால் தன்னை தனியே சங்கத்தன்மை (corporate character) யடைந்திருக்கவேண்டியது மல்லாமல், அப்படிப்பட்ட பொக்கிஷதாரர் முறைமையில் தமக்குப்பின் வருபவர்களுக்குத் தம் அலுவலைச் சேர்ந்த சுதந்தரம்பிரந்தரமாயிருந்து கொண்டேவரும் வகையினையும், அந்த ஹோதாவில் ஒரு முத்திரையையும் உடையவராவார்; மேலும் அவர்வார்மேலாவது வியாச்சியம் தொடருவதாயிருந்தாலும், அவர்மேல் யாராவது வியாச்சியம் தொடருவதாயிருந்தாலும் அந்த சங்கத்தன்மை யமைந்த ஹோதாவிலேயே தொடரலாம்.

4. (1) சொன்ன பொக்கிஷதாரர் பரமாக்குவதற்கான உத்தரவுகள். ஏதாவது சொத்து தருமகாரியத்திற்கு நம்பி ஒப்பிக்கப்பட்டிருந்தாலும் அல்லது விநியோகப்படுத்தப் படுவதாயிருந்தாலும், பிரதேச கவர்ன்மெண்டார், தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால், இதில் பின்கண்ட மாதிரியாக மனு செய்யப்பட்டால் இந்தப் பிரிவிலுள்ள மற்ற பிரக்ஞைகளுக்குட்பட்டு, பிரதேச கவர்ன்மெண்டாரும் மனுசெய்து கொள்ளுகிற நபர் அல்லது நபர்களும் அந்தசொத்தை அல்லது அதிலிருந்து கிடைக்கும் வரும்படியை வினியோகிக்கும் விஷயத்தைப்பற்றித் தங்களுக்குள் உடன்படிக்கை செய்துகொள்ளுகிற ஏற்பாட்டின்படி அந்த சொத்தானது தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் பரமாகுமென்று ஸர்காரி கெஜட்டில் விளம்பரமூலமாய் உத்தரவுசெய்யலாம்; அதன்மேல் அந்தசொத்தானது மேற்கண்ட பொக்கிஷதாரர் பரமாகிவிடும்.

(2) யாதொரு சொத்தானது அந்தப் பிரிவின்படி தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் பரமாகிவிடும்பட்சத்தில், அதற்குச் சம்பந்தமான சகல ஆதாவுகளும் அவரிடம் சேர்ப்பிக்கப்படவேண்டும்.

(3) அடியிற் கண்டவைகள் தவிர மற்றப்படி பணத்திற்கு ஈடாயிருக்கும் எவ்வித பத்திரங்களையும் தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் பரமாக்குவதற்கு (1)-வது உட்பிரிவின்படி பிரதேச கவர்ன்மெண்டார் யாதொரு உத்தரவையும் செய்யக்கூடாது. மேற்கூறப்பட்ட ஈடுகளாவன:—

(a) இந்தியா கவர்ன்மெண்டாருடைய அல்லது க்ரேட் ப்ரிடனும் அயர்லாண்டும் சேர்ந்த இராஜாங்கத்தாருடைய ப்ராமிஸரி நோட்டுகள்-டிபென்ச்சர்கள் ஸ்டாக் முதலிய பத்திரங்கள்;

(b) இந்தியா ரெவினியூவின்மேல் இம்பீரியல் பார்லிமென்ட் என்னும் மந்திராலோசனை சபையாரால் சமத்தப்பட்

ட பாண்டுகள்-டிபென்ச்சர்கள்-(அன்ஹயிட்டி என்றும்) வருஷவாரி வர்த்தனைகள்;

(c) ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடெரி அவர்களால் வட்டி உறுதி செய்யப்பட்டிருப்பதாய், ரெயில்வே கம்பெனி முதலிய கம்பெனிகளைச் சேர்ந்த ஸ்டாக் அல்லது டிபென்ச்சர்கள், அல்லது அத்தக் கம்பெனிகளிலுள்ள (shares) பங்குகள்;

(d) பிரிடிஷ் இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு சட்ட நிரூபண சபையாரால் செய்யப்பட்ட யாதொரு ஆக்டினால் கிடைத்திருக்கும் அதிகாரத்தைக் கொண்டு யாதொரு பிரதேச அதிகாரியாலாவது அவர் பட்சத்திலாவது பிறப்பிக்கப்பட்ட டிபென்ச்சர்கள் அல்லது பணத்திற்கு டாயிருக்கும் வேறே பத்திரங்கள்;

(e) இதைப்பற்றி ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்கள் செய்கிற யாதொரு உத்தரவினால் வெளிப்படையாய் அதற்கென்றே அதிகாரங் கொடுக்கப்பட்டு உண்டாகிய ஈடு.

(4) சொத்தை தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் பரமாக்குவதற்கு இந்தப் பிரிவின்படி செய்யப்படும் உத்தரவினால் அவர் அந்த சொத்தைப் பரிபாலனஞ் செய்யவேண்டியதாகில்லை, அப்படி பரிபாலனஞ் செய்யவேண்டியதாக எண்ணப்படவுமாட்டார். அந்த சொத்தின் பரிபாலன விஷயமாய் ட்ரஸ்ட்டிய லுவலைப் பார்க்கும்படி கட்டளை யிடப்படவுமாட்டார். அந்தப் படி கட்டளையிடப்பட்டவராக எண்ணப்படவுமாட்டார்.

5. பொக்கிஷதாரர் பரமாக்கப்பட்ட சொத்தைப் பரிபாலனஞ் செய்வதற்கு ஏற்பாடுகள். (1) பிரதேச கவர்ன்மெண்டார்-தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால், இதில் பின்கண்ட மாதிரியாக மனுசெய்யப்படுவதன்மேல் மனுசெய்த நபர் அல்லது நபர்களுடைய சம்மதியைப் பெற்றுக்கொண்டு, தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் பரமாக்கப்பட்டிருக்கிற அல்லது அவர் பரமாக்கப்படப்போகிற யாதொரு சொத்தைப் பரிபாலனஞ் செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்; அந்த ஏற்பாட்டில் அந்த சொத்தைப் பரிபாலனஞ் செய்யும்பொருட்டு அப்படிப்பட்ட பொக்கிஷதாரரல்லாத ஒரு நபரையாகிலும் பொக்கிஷதாரரும் சேர்ந்திராத படிக்குள்ள நபர்களையாகிலும் பெயரைக் கொண்டு அல்லது உத்தியோக முறையைக்கொண்டு நியமிக்கலாம்.

(2) பிரதேச கவர்ன்மெண்டார்-தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால், இதில் பின்கண்ட மாதிரியாக மனு செய்துகொள்ளப்படுவதன்மேல், மனுசெய்த நபர் அல்லது நபர்களுடைய சம்

மதியைப் பெற்றுக்கொண்டு, இந்தப் பிரிவின்படி செய்யப்பட்டிருக்கிற ஏற்பாட்டைத் திருத்தலாம், அல்லது அதற்குப் பரத்தியாக வேறொன்றைச் செய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்படி செய்யப்பட்டாவது திருத்தப்பட்டாவது பரத்தி செய்யப்பட்டாவதுள்ள ஏற்பாடானது-இந்தப் பிரிவிலுள்ள மற்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, ஏதற்கென்று பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படுகிற தேதியில் அனுஷ்டானத்திற்கு வந்து அது எதற்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த சொத்து தருமசொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் பரமாவைக்கப்பட்டிருக்கிற வரையிலாவது அவ்வேற்பாடு திருத்தப்படுகிற பரியந்தமாவது அவ்வேற்பாட்டுக்குப் பரத்தியாய் வேறே ஏற்பாடு செய்யப்படுகிற பரியந்தமாவது செலாவணியாக வேண்டும்.

(4) அப்படிப்பட்ட ஏற்பாடு அனுஷ்டானத்துக்கு வரும்போது, அது எதன் விஷயமாய்ச் செய்யப்பட்டதோ அதைப்பற்றி எதாவது டிக்ரி அல்லது கட்டளை இருந்து அது இந்த ஏற்பாட்டுக்கு எவ்விதத்திலாகிலும் விரோதமாயிருக்கும் பட்சத்தில் அந்த அளவுக்கு அது ரத்தாகி இந்த ஏற்பாடு செலாவணியாக வேண்டும்; அப்படிச் செலாவணியாகிற விஷயத்தைப் பற்றி எந்த கோர்ட்டாரும் ஆட்சேபிக்கக்கூடாது; அன்றியும் எந்த கோர்ட்டாரும் இந்த ஏற்பாட்டின் நிபந்தனைகளுக்கு விரோதமாயாகிலும் அதற்கு எவ்விதத்திலும் மீறியாகிலும் அதற்கதிகமாகவாகிலும் இந்த ஏற்பாடு சம்பந்தப்படுகிற சொத்தின் பரிபாலன விஷயமாக யாதொரு டிக்ரி அல்லது கட்டளையைப் பிறப்பிக்கக் கூடாது.

(5) அப்படிப்பட்ட ஏற்பாடு செய்யும்போது, சொத்தை நம்பி தருமத்திற்கு வைத்தவருடைய மனோபீஷ்டம் இன்னதென்று தெரிந்துகொண்டு, அதை எவ்வளவுமட்டில் நிறைவேற்றுவது நியாயமென்று பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தோற்றுகிறதோ அவ்வளவு மட்டில் அதை நிறைவேற்றவேண்டும்.

(6) தரும சொத்தின் விஷயமான பொக்கிஷதாரர் பரமாக்கப்பட்டிராத சொத்தை பரிபாலனஞ் செய்யும் விஷயமாய், அவர் பரமாக்கப்படுமுன்னமே, இந்தப் பிரிவின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில், அந்த சொத்து மேற்கண்ட பொக்கிஷதாரர் பரமாகிற பரியந்தம் அந்த ஏற்பாடு அனுஷ்டானத்திற்கு வரமாட்டாது.

6. சொத்தை ஒருவர் பரமாக்குவதற்கான உத்தரவுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் மனுவுசெய்யும் விதம். (1) அடுத்த முந்திய இரண்டு பிரிவுகளிலும் உதகரிக்கப்பட்ட மனுவானது—

(a) சொத்து தரும காரியத்திற்காக முன்னமேயே நம்பி ஒப்பித்துவைக்கப் பட்டிருந்தால், அப்படி நம்பிவைத்த ட்ரஸ்ட் சொத்தின் பரிபாலன விஷயமாய் பிரவர்த்திக்கிற நபராலும், அல்லது அப்படி பிரவர்த்திக்கிறவர்கள் ஒருவருக்கதிகப்படும் பட்சத்தில் அந்த நபர்கள் யாவராலும் அல்லது அவர்களில் பாதிக்கு அதிகப்பட்டவர்களாலும்,

(b) சொத்து நம்பி ஒப்பிக்கப்பட்டு அப்படிப்பட்ட காரியத்திற்கு விநியோகிக்கப் படுவதாயிருந்தால், அப்படி அதை விநியோகிப்பதாய் உத்தேசிக்கிற நபராலும் அல்லது நபர்களாலும்,

செய்யப்படவேண்டும்.

(2) இந்தப் பிரிவின் விஷயங்களுக்காகத் தரும காரியத்திற்கு நம்பி ஒப்பிக்கப்படும் சொத்தின் ட்ரஸ்ட்டியாயிருந்து இறந்துபோனவனுடைய எக்ஸிகியூட்டர் அல்லது அட்மினிஸ்ட்ரேட்டரானவர் ட்ரஸ்ட் சொத்தின் பரிபாலன விஷயமாய்ப் பிரவர்த்திக்கிற நபரென்று எண்ணப்படுவார்.

7. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்கள் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அதிகாரங்களைச் செலுத்துவது. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்கள் 4-வது, 5-வது பிரிவுகளினால் பிரதேச கவர்ன்மெண்டாருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் யாவற்றையுமாவது அவைகளில் எதையாவது செலுத்தலாம்.

(2) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்கள் யாதொரு சொத்தின் விஷயமாய அந்த அதிகாரங்களில் எதையாவது தாம் செலுத்தவேண்டுமென்று உத்தேசித்திருப்பதை பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தெரியப்படுத்தியிருக்கும்போது, அந்த பிரதேச கவர்ன்மெண்டார் கவர்னர் ஜனரலவர்களுடைய அநுமதியை முன்னதாகவே பெற்றுக்கொள்ளாமல் மேற்கண்ட சொத்தின் விஷயமாய் அந்த அந்த அதிகாரங்களைச் செலுத்தக்கூடாது.

8. [illegible] ட்ரஸ்டியாக மாத்திரமிருக்கவேண்டியதென்பது.

(1) இந்த ஆக்ட்டின் நியதிகளுக்குட்பட்டு, யாதொரு தரும சொத்தின் விஷயமான பொக்கிஷதாரரானவர் இந்த ஆக்ட்டின்படி எனக்குச்சொந்த சொத்து அந்தந்த காலத்தில் அவர் பராமரிக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு ட்ரஸ்ட் சொத்தின் பரிபாலன விஷயத்தில் மேற்கண்ட பொக்கிஷதாரர் வேறு தாவில் பிரவர்த்திக்கக்கூடாது.